@NewsRotary
/RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

மார்ச் 2018

Rotary



பசுமை கேரளா

# மரத்தில் ஒரு நீலப் பறவைப் பூ!

மத்தியப் பிரதேசம் கன்ஹா தேசிய சரணாலயத்தில் சுற்றுலா சென்றிருந்தபோது, மரத்தின் மீது அமர்ந்தபடி நம்மைக் கவர்ந்தது பனங்காடை என்ற இந்தப் பறவை. இது ஹிந்தியில் நீல்கந்த் என்று அழைக்கப்படுகிறது. பனங்காடை தெற்காசிய மண்டலத்தில் பரவலாகக் காணப்படும் பறவையாகும். புலிகளின் நடமாட்டத்துக்குப் பெயர்போன கன்ஹா சரணாலயத்தில் நாம் சென்றபோது, புலிகளைக் காணவில்லை. இந்தப் பறவைதான் நமது கண்களைப் பறித்துக் கொண்டது. பறவை ஆர்வலர்களுக்கு இது கண்கொள்ளா விருந்து. அத்தனை கொள்ளை அழகு!

கன்ஹா சரணாலயம் செல்வோர் பைனாகுலரைக் கட்டாயம் வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் இதைப் பார்த்து ரசிக்கலாம்.

ஓய்வு எடுக்கும்போது காணப்படும் அழகை விட தன் நீல நிற இறக்கைகளை விரித்து, வானத்தில் பறப்பதே மிகவும் அழகு.

படமும் விளக்கமும் : பர்வேஸ் பகத்



# உள்ளே




**12** பசுமையான கேரளத்தை மேலும் பசுமையாக்குதல்
D 3211ன் ரோட்டரியினர் ஆரோக்கியமான அரிசி வகைகள் வளர்க்கிறார்கள்.



**22** சாகச பெண்மணிகள்
மூன்று பெண்மணிகள் 24 நாடுகள் காரில் பயணித்து, ரோட்டரியின் எழுத்தறிவு இயக்கத்தைப் பற்றி பரப்பினர்.




**32** கரும்பலகையிலிருந்து டிஜிட்டல் பலகைக்கு
மனித வளத்துறை அமைச்சர் ப்ரகாஷ் ஜாவதேக்கர் ரோட்டரியின் ஈ சிக்ஷா பணியை புனேவில் துவக்கி வைக்கிறார்.

**28** இரண்டு முன்னாள் RI தலைவர்கள் DGE-களின் மனதைக் கொள்ளை கொண்டனர்
PRIPs ஜான் ஜேர்ம் மற்றும் K.R. ரவீந்திரன் அவர்கள் DGEக்களுக்கு ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டில் ஆற்றிய உரை.

**39** ரோட்டரி ஒரு விரும்பப்படும் பார்ட்னர் மட்டுமல்ல
டாடா டெக்னாலஜீஸ் கார்ப்பரேட் தலைவர் அனுபவ் கபூர் ரோட்டரியுடன் சேர்ந்து ஈ கற்றல் வசதியை மகாராஷ்ட்ரா பள்ளிக்குழந்தைகளுக்கு அளிப்பதுப்பற்றி பேசுகிறார்.

**42** உதவும் கரங்கள்
D 3141 St. ஜீட் மையத்தில் கேன்சர் நோயாளிகளுக்கு ஆற்றிய வசதிகள்.



**73** இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டினர் விரும்புவது....
RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ ஸ்விட்சர்லாந்தில் ஆற்றிய உரை.

**76** குழந்தைகளின் குதூகலம்
சென்னை தி நகர் ரோட்டரி சங்கம் பள்ளிச்சிறுவர்களை மகிழ்வித்த நிகழ்ச்சி.



**60** பெருநிறுவனத்திலிருந்து காட்டு வாழ்க்கைக்கு மாற்றம்
ஹர்ஷித்தாவும் ஆதித்யாவும் தங்கள் மகன் கைசனுக்கு வழக்கத்திற்கு புறம்பான வாழ்வை காட்டுகின்றனர்.


*அட்டையில்:* கேரளத்தில் D 3211ன் ஆரோக்கிய அரிசி பயிரிடும் பணி.

*படம் :* ரஷீதா பகத்

## பிரமிப்பூட்டும் பிப்ரவரி வெளியீடு!

ரோட்டரி நியூஸ் இதழின் அச்சுப்பிரதியைப் பெறும் வரையிலும் எனக்குப் பொறுமை இல்லாததால், ஆன்லைன் பிரதியை நான் பார்க்கிறேன். பிப்ரவரி வெளியீட்டில் வழக்கம்போலவே பல விரிவான கட்டுரைகள், தலையங்கம் மற்றும் RI தலைவர் மற்றும் RID இடமிருந்து செய்திகள் போன்ற அற்புதமானதாக விஷயங்கள் இடம்பெற்றுள்ளன. ரோட்டரி பற்றி நாம் பல புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறோம் மற்றும் பொதுவான கட்டுரைகள் ஆர்வ மூட்டுவதாகவும் உள்ளன.

R ஸ்ரீநிவாசன்,
RC மதுரை மிட்டவுன்-D 3000

ஃபேஷன் குரு மற்றும் ஐடியாவாலே பாபா என்ற அட்டைப்படக் கதைக்கான ஒரு வீடியோ இணைப்பு இந்த சுவாரசியமான கட்டுரைக்கு மேலும் மெருகூட்டியிருக்க வேண்டும்.

கோபிநாத் N, RC பெங்களூர்
இந்திராநகர்-D 3190

கட்டுரைகளும் அறிக்கைகளும் மனதைக் கவர்ந்திழுப்பதாகவும் ஊக்கமூட்டுவதாகவும் இருக்கின்றன.

PDG கிஷோர் கேடியா, D3030

மற்றும் RC அமராவதி மிட்டவுன் ஆகியோருக்கு அவர்களுடைய மொபைல் மேமோகிராஃபி திட்டத்துக்கு வாழ்த்துக்களைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

N சரத் சந்திர மேனன்,
கொல்லம்




இந்த இதழின் ஒவ்வொரு பக்கமும் மிகவும் வண்ணமயமாக இருக்கிறது. எல்லா விதங்களிலும் அது தலைசிறந்ததாக ஆகியுள்ளது. இந்திய கிரிக்கெட்டின் இரண்டு ஜாம்பாவான்களாகிய யுவராஜ் சிங் மற்றும் ஜாகிர் கான் ஆகியோர் விக்ரம் சதாயேவுடன் மேற்கொண்ட உயிர்த்துடிப்பான வெளிப்படையான உரையாடல் ஊக்கமளிப்பதாக இருக்கிறது. ஆசிரியர் குறிப்பில் நீங்கள் குறிப்பிட்டது போல, ஒரு பிரபலத்திடம் மறைந்துள்ள அதிர்ச்சி மற்றும் வலி, மன உறுதி மற்றும் அமைதியான வேதனை ஆகியவை ஆச்சரியமளிப்பதாக இருந்தன. இருந்தாலும் IAயில் உள்ள நிறங்கள் கண்காட்சியைக் கவர்ந்திழுப்பதாக இருந்தன.

கோபிநாதன்
RC வடகஞ்சேரி-D 3201

தலைமையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துங்கள் என்ற கட்டுரை பல முக்கிய ஆலோசனைகளைக் கொண்டிருந்தது, மேலும் மற்றவர்களுக்குச் சேவை செய்யும்போது, ''உண்மையிலேயே அது உங்களை மேம்படுத்திச் சிறப்பானவராக்குகிறது,'' என RI இயக்குநர் ஜான் மேத்யூஸ் கூறுகிறார். IPDG, DG, DGE, DGN போன்றவற்றுக்கிடையே தொடர்ச்சி யை நாம் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் சொல்கிறார், ஆனால் தலைமை மாற்றத்தின் காரணமாக பல செயல்திட்டங்கள் மிகவும் சிக்கலாகி விடுவதால் சங்க அளவிலும் கூட அதே தொடர்ச்சி தேவைப்படுகிறது. சமூகத்தில் நெடுங்காலத் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கியத் திட்டங்களுக்கு மூத்த தலைவர்களைக் கொண்ட நிரந்தர சங்கக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும். எமது சங்கத்தில் எல்லாக் கூட்டங்களையும் ஒரு மூத்த உறுப்பினரின் பயனுள்ள பேச்சிலிருந்தே நாங்கள் தொடங்குகிறோம்.

V K பன்சால், RC டெல்லி
அப்டவுன்-D 3012

## ஹம்பியின் பெருமை

ஹம்பி குறித்த கட்டுரையில், கிபி 15ஆம் நூற்றாண்டில் உலகிலேயே வாடிகனுக்குப் பின்னர் இரண்டாவது பணக்கார நகரமாக இருந்தது எனக் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். அந்தக் காலகட்டத்தில் மேற்கத்திய வரலாற்றறிஞர்களில் யார் ஹம்பி மற்றும் வாடிகன் இரண்டு நகரங்களையுமே பார்வையிட்டு அத்தகைய முடிவுக்கு வந்தனர்? அந்தக் காலகட்டத்தில் உலகின் மிகுந்த செல்வச்செழிப்பான பகுதி எது என்று யாராவது ஆராய்ச்சி செய்திருந்தால், வாடிகனை விட விஜயநகரம் தான் செல்வச்செ ழிப்புடன் விளங்கியது என்பதைக் கண்டறிவதற்கான சாத்தியமிருக்கிறது.

Dr K பிரசன்னா
(ரொட்டேரியன் அல்லாதவர்)

## ரோட்டரி செய்தி சேகரிப்பாளர்!

கடந்த 20 ஆண்டுகளாக ரோட்டரி செய்திகளைச் சேகரிப்பதிலேயே நான் மூழ்கியிருக்கிறேன். நான் எப்பொழுதும் உங்களுடைய தலையங்கத்தைப் படிப்பேன். எனக்கு அவை மிகவும் பிடிக்கும்.

பரிமளா ராவ்
RC புத்தூர் கிழக்கு - D 3181

## சரியான மெத்தை விஷயங்கள்

மெத்தைகளின் தரம் குறித்த கட்டுரை புதிய தோற்றங்களைத் திறந்துள்ளது மற்றும் நமது நலனுக்காகவும் அடுத்த நாள் காலையில் புத்துணர்ச்சியுடன் எழுவதற்கும் சரியான மெத்தையையும் கட்டிலையும் தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை குறித்த புதிய தகவல்களை வெளிப்படுத்தியிருக்கிறது. அத்தகைய அறிவியல்பூர்வமான கட்டுரைகளை நான் மேலும் எதிர்பார்க்கிறேன்.

அஷோக் ஜிண்டால்
RC நாபா கிரேட்டர்-D 3090

மெத்தைகள் பற்றிய கட்டுரை மிகவும் சுவாரசியமானதாக இருந்தது. இந்தியாவில் மென்மையான ஸ்பிரிங் மெத்தைகள் தூங்குவதற்கு நன்றாக இருக்கின்றன, ஆனால் தூங்குவதற்கு மட்டுமல்லாது, வேலை செய்ய, படிக்க, TV பார்க்க மற்றும் சாப்பிட என அனைத்துக்கும் மக்கள் அவற்றைப் பயன்படுத்துவதால் இயற்கை ரப்பர் மெத்தைகளை மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள்! அதோடு, இயற்கை ரப்பர் உடலுக்கு அதிக ஆதரவைக் கொடுக்கிறது. பெரிய ஹோட்டல்கள் மென்மையான ஸ்பிரிங்

மெத்தைகளையே விரும்புகின்றன, ஆனால் இந்திய வெப்பமண்டலக் காலநிலைக்கு ஃபோம் மெத்தைகள் ஏற்புடையதல்ல.

ஜனவரி வெளியீடு அதன் தலையங்கத்திலிருந்தே ஆச்சரியமூட்டும் தகவல்களைக் கொண்டிருந்தது, RID இயக்குநர் C பாஸ்கர் சொல்வதைப் போல, ‘‘மற்றவர்கள் உங்களைப் பற்றி நல்லவிதமாகப் பேச வையுங்கள்’’ மற்றும் அவர் ஒரு புகாரில்லாத ரோட்டரியை விரும்புகிறார்.

ரோட்டரி நிகழ்ச்சிகளில் பகட்டான செலவுகள், ஆடம்பர உணவு மற்றும் விலையுயர்ந்த பரிசுகள் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற உஷா சாபுவின் மிகச்சிறந்த யோசனை வரவேற்புக்குரியது. இறுதியாக, PRIP ராஜா சாபு வழங்கிய தலைவரின் 10-சிந்தனை முத்துக் கள்... இவை அனைத்தும் இந்த வெளியீட்டை செய்தி சேகரிப்பாளரின் இதழாக ஆக்கியுள்ளன.

பியுஷ் தோஷி
RC பேலூர்-D 3291

## பால் நெட்சல் குறித்த சிறப்பான கட்டுரை

பணம் எப்பொழுதுமே எனக்கு பிரதானமாக இருந்ததில்லை (பிப்ரவரி) என்ற கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. ஒரு பெரிய மனிதாபிமானியின் கதையைத் தெரிந்துகொள்வது எப்பொழுதுமே சிறப்பானது. பால் நெட்சலும் அவருடைய அன்பான மனைவியும் போற்றத்தக்கவர்கள்.

ஷர்லி டவுனி,
தென்னாப்பிரிக்காவின்
RC E-கிளப்-D 9400

## ஒரு உண்மையான மாணிக்கம்

ரோட்டரியில் ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்க வேண்டும் என்ற உஷா சாபுவின் கருத்துக்களை நான் வரவேற்கிறேன், ஏனெனில் இது மக்களிடம் தவறான செய்தியைப் பரப்புவதோடு அதன் தோற்றத்தையும் கெடுத்துவிடுகிறது. அசாதாரண சேவைகளை வழங்குபவர்களை மட்டுமே அங்கீகரிக்குமாறும், இமயமலையில் பனியில் உறைந்து கொண்டிருக்கும் ஜவான்களுக்கு தீபாவளி இனிப்புகள் அனுப்புமாறும் அவர் சொல்கிறார். இந்தப் பெண்மணியை ஒரு மாணிக்கம் என்று சொன்னால் அது மிகையில்லை. ‘நான் அவருக்குத் தலைவணங்குகிறேன்!’

G V சாயாகவி, RC தேவநகரி
வித்யாநகரா-D 3160

பால் நெட்சல் விரும்புவது போல ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர்கள் தேர்ந்தெடுக்கப் படுவதற்குப் பதிலாக நியமிக்கப்பட வேண்டும் என்ற PRIP கல்யாண் பானர்ஜியின் கருத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். KL மாநாட்டின் வெற்றி PDG R தீனசந்திரனின் மகுடத்தில் மற்றொரு இறகு ஆகும். நமது மண்டலங்களில் 1.25 மில்லியன் உறுப்பினர்களைச் சேர்ப்பது மற்றும் 2025க்குள் $50 மில்லியன் TRF வசூல் இலக்கு ஆகிய RIDயின் கனவுகள் இந்திய ரொட்டேரியன்களால் அர்ப்பணிப்புடன் பின்பற்றப்படும். சியாச்சினில் உள்ள நம்முடைய ஜவான்களுக்கு உஷா சாபு தீபாவளி இனிப்புகளை அனுப்பியது பாராடத் தக்கது. இந்தச் செயல்பாடுகளை அவர் ரம்ஜான் மற்றும் கிறிஸ்துமஸ் காலங்களிலும் கூட விரிவுபடுத்த வேண்டும். ரோட்டரி தலைமைக்கு ராஜா சபுவின் 10-சிந்தனை முத்துக் கள் மதிப்புமிக்க குறிப்புகளை வழங்குகின்றன.

கான்பூரிலிருந்து அமிர்தசரஸ் வரையிலான ரொட்டேரியன்களின் ஆன்ஸ் மற்றும் ஆனட்ஸின் சுற்றுலா பற்றிப் படித்தது மகிழ்ச்சியாக இருந்தது.

S முனியாண்டி, RC திண்டுக்கல்
கோட்டை-D 3000

## வருத்தமளிக்கிறது

ஜனவரி இதழில், கோலாலம்பூரின் பல்வேறுபட்ட ஆடைகளிலும் மனநிலைகளிலும் RI அதிகாரிகள், PDGகளின் புகைப்படங்களுக்காக பல பக்கங்கள் ஒதுக்கப்பட்டி ருந்தன. ஒவ்வொரு மாதமும் 7-8 பக்கங்கள் சேவைத்திட்டங்களை விட ‘‘கவர்ச்சியை’’ வெளியிடு வதற்குப் பயன்படுத்தப்படு கின்றன. கடந்த இரண்டு ஆண்டு களில் என்னுடைய சங்கத்திலிருந்து சிறப்பான, புதுமையான திட்டங்கள் அறிவிக்கப்பட்டாலும் கூட, இந்தச் சிறப்பான இதழில் ஒரு நிகழ்ச்சி கூட பிரசுரிக்கப்படவில்லை. கவர்ச்சி குறைக்கப்பட்டால், அதிக சங்கங்களின் சேவைச் செயல்பாடுகளை இடம்பெறச் செய்ய முடியும். இறுதி முடிவு உங்களுடையது என்பதை நான் புரிந்துகொள்கிறேன், ஆனால் சில நேரங்களில் இது வருத்தமளிக்கிறது.

Dr பிந்து ஷிர்சாத், RC அகமதுநகர்
பிரியதர்ஷினி - D 3132

டிசம்பர் வெளியீடு மிகச் சிறப்பான தாகவும் அறிவார்ந்த கட்டுரைகள் நிறைந்ததாகவும் இருக்கிறது.

N தனபால பணிக்கர்
RC குந்தாரா சென்ட்ரல்-D 3211

டிசம்பர் வெளியீடு கவர்ச்சிகரமாகவும் பொருளுடையதாகவும் இருந்தது. சிறிய அகர்தலா சங்கம் 800 உறுப்பினர்களின் பங்கேற்புடன் ஒரு சர்வதேசக் கருத்தரங்கை நடத்துகிறது என்பது போல, சிறிய சங்கங்களைப் பார்வையிட்டு அவர்களுடைய திட்டங்களை/நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவது என்ற ஆசிரியரின் முடிவு பாராட்டுக்குரியதாகும். இது, சிறிய சங்கங்கள் ஆரோக்கியம், கல்வி மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் செயல்படுவதற்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்.

PC சங்கி, RC ஜெய்ப்பூர்
பாபு நகர்-D 3054

## ரோட்டராக்ட் நியூஸ்

ரோட்டராக்ட் நியூஸ் வெளியிட்ட தற்காக உங்கள் உங்களுடைய குழுவினருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். பெரும்பாலும், இந்த எதிர்கால ரொட் டேரியன்களால் மேற்கொள்ளப்படும் அற்புதமான திட்டங்களை நாம் கவனிப்பதில்லை. முறையாகப் பண்படுத்துவதன் மூலம், அவர்கள் எதிர்காலத்தில் ரோட்டரியில் அற்பு தமான விஷயங்களைச் செய்ய முடியும்.

சுபாசிஷ் சாட்டர்ஜி
3240 மாவட்ட வெப்மாஸ்டர்

உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org ; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | P S Ramesh Babu |
| RI Dist 2982 | DG | Dharmesh R Patel |
| RI Dist 3000 | DG | P Gopalakrishnan |
| RI Dist 3011 | DG | Ravi Choudhary |
| RI Dist 3012 | DG | Sattish Singhal |
| RI Dist 3020 | DG | G V Rama Rao |
| RI Dist 3030 | DG | Dr K Sunder Rajan |
| RI Dist 3040 | DG | Dr Zamin Hussain |
| RI Dist 3053 | DG | Rajkumar Bhutoria |
| RI Dist 3054 | DG | Maullin Manubhai Patel |
| RI Dist 3060 | DG | Ruchir Anirudh Jani |
| RI Dist 3070 | DG | Parvinder Jit Singh |
| RI Dist 3080 | DG | T K Ruby |
| RI Dist 3090 | DG | Bagh Singh Pannu |
| RI Dist 3110 | DG | Vinay Kumar Asthana |
| RI Dist 3120 | DG | Ranjeet Singh |
| RI Dist 3131 | DG | Abhay Gadgil |
| RI Dist 3132 | DG | Vyankatesh Vithal Channa |
| RI Dist 3141 | DG | Prafull J Sharma |
| RI Dist 3142 | DG | B M Sivarraj |
| RI Dist 3150 | DG | J Abraham |
| RI Dist 3160 | DG | Madhu Prasad Kuruvadi |
| RI Dist 3170 | DG | Anand G Kulkarni |
| RI Dist 3181 | DG | M M Chengappa |
| RI Dist 3182 | DG | G N Prakash |
| RI Dist 3190 | DG | Asha Prasanna Kumar |
| RI Dist 3201 | DG | Vinod Krishnan Kutty |
| RI Dist 3202 | DG | Sivashankaran P M |
| RI Dist 3211 | DG | Suresh Mathew |
| RI Dist 3212 | DG | Chinnadurai Abdullah |
| RI Dist 3231 | DG | Jawarilal Jain K |
| RI Dist 3232 | DG | R Srinivasan |
| RI Dist 3240 | DG | Sunil Saraf |
| RI Dist 3250 | DG | Vivek Kumar |
| RI Dist 3261 | DG | Harjit Singh Hura |
| RI Dist 3262 | DG | Ajay Agarwal |
| RI Dist 3291 | DG | Brojo Gopal Kundu |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakhar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |

### Executive Committee Members (2017–18)

| | |
|---|---|
| DG B M Sivarraj<br>Chair – Governors Council | RI Dist 3142 |
| DG R Srinivasan<br>Secretary – Governors Council | RI Dist 3232 |
| DG Abhay Gadgil<br>Secretary – Executive Committee | RI Dist 3131 |
| DG Vivek Kumar<br>Treasurer – Executive Committee | RI Dist 3250 |
| DG P Gopalakrishnan<br>Member – Advisory Committee | RI Dist 3000 |



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road
Egmore, Chennai 600 008, India.
Phone : 044 42145666
e-mail : rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by Mukesh Arneja at Thomson Press (India) Ltd, Plot A-9, Industrial Complex, Maraimalai Nagar 603209, India and published by Mukesh Arneja on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.

EDITOR'S
# NOTE



# ஊழலின் மத்தியில் ரோட்டரி நேர்மை

சமீப நாட்களில் மகா ஊழலின் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பஞ்சாப் நேஷனல் வங்கியிடமிருந்து கடன் பெற்று சுமார் ரூ.11,400 கோடி அளவுக்கு மோசடி செய்ததாக வைர வியாபாரி நிரவ் மோடிக்கு எதிராகப் புகார் எழுந்துள்ளது. அதைப் போல் ரோட்டாமேக் பேனாத் தொழிலதிபர் விக்ரம் கோத்தாரி ரூ.8,500 கோடி மோசடி செய்ததாகப் பிடிபட்டுள்ளார்.

இவையெல்லாம் வெட்ட வெளிச்சத்திற்கு வந்ததை அடுத்து, தேசமே தலை குனிந்திருக்கிறது. இதைக் கண்டு திடுக்கிட்ட சாமானிய மக்களில் பெரும்பாலானோர் ரோட்டரி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகிறேன்.

வங்கிகளில் கடன் பெற்று மொத்தம் ரூ.9000 கோடி மோசடி செய்த விஜய் மல்லையாவைப் பற்றிதான் இதுவரை அறிந்திருந்தோம். இந்த ஆண்டு ஊழல் விஷயத்தில் மேலும் முன்னேறிவிட்டோம். இடுக்கண் வருங்கால் நகுக என்று வள்ளுவர் கூறியபடி, இப்படி சமூகத்தில் மோசமாக ஏதாவது நடந்துவிட்டால், உடனே சமூக வலைதளங்கள் அதை விடுவதில்லை. கேலி, கிண்டல் என்று பதிவேறுகின்றன.

ஒரு கட்டுரையில் (டுவிட்டர்), பஞ்சாப் மாநிலத்த வரை (பஞ்சாப் நேஷனல் வங்கி) குஜராத்திகள் (நிரவ் மோடி) கொள்ளையடிக்கிறார்கள் என்று நையாண்டிக் கருத்து பரவலானது.

இவையெல்லாம் ஒரு புறம் இருக்க, இந்த நேர்மையில்லாத ஆசாமிகள் வியாபாரிகள், தொழிலதிபர்கள் எல்லாம் எப்படியாவது புதிய வழியில் ஏமாற்றி, தண்டனையிலிருந்து தப்பித்துவிடுவதுதான் வேதனை தருகிறது. அவர்களுக்கு இருக்கும் அரசியல் செல்வாக்கு வேறு. யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி இருவரும் எப்படியாவது கைகோத்துக் கொள்கிறார்கள்.

அற்ப கடனை வாங்குவதற்கு நம்மைப் போன்றவர்களை அலைக்கழிக்கும் வங்கிகள், இப்படிப்பட்ட மோசடிப் பேர்வழிகளுக்கு வெற்றிலை பாக்கு வைத்து கடன் கொடுக்கிறார்கள்.

இப்படி மோசடிகள் எல்லாம் கொடிகட்டிப் பறக்கும் போது, பொய்களும் அயோக்கியத் தனமும் அரங்குக்கு வருகின்றன. ஆனால், சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட நடுத்தர குடிமக்கள் வெட்கப்படும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இப்படி அயோக்கியத் தனம், ஊழல், அரசு வங்கிகளைக் கொள்ளையடிப்பது என எல்லா காரியங்களையும் செய்துவிட்டு, வாராக் கடன் என்று மலைமலையாகக் குவிக்கப்படும்போது சாமானிய மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு அந்த வங்கிகளுக்கு மறு நிதியுதவியும் செய்யப்படுகிறது.

இவற்றைப் பார்க்கும்போது, ரோட்டரி சங்கத்தின் ஆத்மார்த்தமான கொள்கை, கோட்பாடு நல்ல செய்தியாக ஆறுதலாக இருக்கிறது. நேர்மை, உண்மை, நாணயம் ஆகியவைதான் ரோட்டரியில் பின்னிப் பிணைந்த கோட்பாடுகள். RI தலைவர் இயான் ரிஸ்லி கோலாலம்பூர் மாநாட்டில் பேசியது நினைவில் வருகிறது:

எந்த ஒரு செயலிலும் ஈடுபடும்போது, நான்கு கேள்விகள் எழும். அது உண்மையானதா? அது அனைவருக்கும் சம்பந்தப்பட்டதா? அது நல்லெண்ணத் துக்கும் நல்ல நட்புக்கும் வழியமைக்குமா? எல்லோருக்கும் பலன் தருமா? என்ற ரோட்டரி சங்கத்தின் நான்கு தாரக மந்திரங்கள்தான் அவை.


இது முற்றிலும் உண்மை. ரோட்டரியின் உறுப்பினராக இருப்பவர், தொழில், வர்த்தகம், வணிகம் ஆகியவற்றில் மட்டுமல்ல தனிப்பட்ட வாழ்க்கையிலும் நேர்மை, நாணயத்தைக் கடைப்பிடிப்பவர் என்பதுதான். இதையே PRIP ராஜேந்திர சாபுவும், ரோட்டரி அமைப்பின் உடை, சின்னம் ஆகியவற்றுடன் மேடையில் ஏறும்போது, நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதில் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். அன்றாட வாழ்க்கையிலும் ஒழுக்கமாக இருக்க வேண்டும். குறிப்பாக பொது இடத்தில் எப்படி நடந்து கொள்வது என்பதில் கவனம் தேவை என்கிறார்.

வணக்கம் சென்னை மாநாட்டில் அவர் பேசியபோது ஒரு சம்பவத்தை நினைவுகூர்ந்தார். ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்த ஒரு ரொட்டேரியன் வெற்றிலைப் பாக்கைப் போட்டு வாயில் குதப்பி, ஒரு குவளையில் உமிழ்ந்ததைக் கண்டு திகைத்துப் போனதாகக் குறிப்பிட்டு இப்படியெல்லாம் நடந்துகொள்வதும் ரொட்டேரியனுக்கு அழகல்ல என்று வேதனை தெரிவித்தார்.

இவையெல்லாம் அருவருக்கத் தக்கது என்றால் நேர்மையின்மை, நம்பிக்கை துரோகம் ஆகியவை அதை விட மோசமானவை.

இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கும் மகா ஊழல்கள் நம்மை நாமே திரும்பிப் பார்த்துக் கொண்டு, ரோட்டரி சங்கம் எதிர்பார்க்கும் சிறந்த விழுமியங்களுடன் நல்ல மனிதனாக உருவாக்கிக் கொள்வதை உறுதி செய்யவேண்டும்.

ரஷிதா பகத்



# ரோட்டராக்டர்களுடன் பாலம் அமைப்போம்

ரோட்டரி சங்க சகாக்களே,

உலகின் முதல் ரோட்டராக்ட் சங்கம் 1968ம் ஆண்டு தொடங்கப்பட்டு இந்த மார்ச் மாதம் 50 ஆண்டுகள் ஆகின்றன.

இந்த 50 ஆண்டுகளில் உலகில் ஏராளமான மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இந்த மாற்றங்களின் பெரும் தாக்கத்தை இளைஞர்கள் உணர்ந்திருக்கிறார்கள். தொழில்நுட்பத்தின் தோற்றம் வளர்ச்சி, பொருளாதாரம் குறித்த தகவல், கல்வியில் ஏற்பட்டுள்ள விஸ்வரூபம் இணையதளத்தின் மிகப் பெரிய பாதிப்பு ஆகியவற்றை அவர்கள் கண்டிருக்கிறார்கள். ரோட்டராக்ட் கிளப் தொடங்கப்பட்டபோது, இருபது வயதுக்குள் ஓர் இளைஞன் பெரிய தொழில் முனை வோராகவோ, கம்பெனியின் முதன்மை செயல் அலுவலராகவோ (CEO) உயர்வான் என்பதை யாரும் எண்ணிப் பார்த்திருக்க முடியாது.ஆனால், இன்று, இத்தகைய சாதனைகளை இளைஞர்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் நிகழ்த்துகிறார்கள். ரோட்டரி அமைப்புக்கு அத்தகையோரின் சிந்தனைகள், உற்சாகம் தேவைப்படுகிறது.

பல ஆண்டுகளாக ரோட்டரி சங்கம் ரோட்டராக்ட் இளைஞர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளைப் பார்த்து, ரோட்டரி உறுப்பினர்களாவதற்குத் தயாராகும் முன்னோடி என்று மட்டுமே நினைத்து வந்தது. அவர்கள் மதிப்புமிக்கவர்கள் என்றும், தாங்களே பயனுள்ள திட்டங்களைச் செயல்படுத்துவர் என்றும் கணிக்கத் தவறிவிட்டது. இத்தனைக்கும் ரோட்டரி சேவைகளில் ரோட்டராக்ட் இளைஞர்கள் உண்மையான பங்காளிகளாகவே செயல்பட்டு வருகின்றனர்.

இன்றைக்கு, உலகின் ஒவ்வொரு நாட்டிலும் 10,000க்கு மேற்பட்ட ரோட்டரி சங்கங்களில் மொத்தம் இரண்டரை லட்சம் ரோட்டராக்ட் இளைஞர்கள் சேவை புரிகிறார்கள். அவ்வாறு இளைஞர்கள் புரியும் சேவைகளின் தாக்கம் மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அதுவும் அவர்களது ஆற்றலை மீறியதாகவும் இருக்கிறது. ரோட்டராக்ட் இளைஞர்கள் ரோட்டரி சங்கத்தின் சராசரியை விடக் குறைந்த நிதியில் வியக்கத்தக்க அளவுக்கு சாதனை புரிகிறார்கள். அவர்களது சக்தியும் தொலைநோக்குப் பார்வையும் ரோட்டரி குடும்பத்திலும் நமது சமூகத்திலும் சில அதிசயத்தை ஏற்படுத்து கின்றன. எனவே, அவர்களை உயர்வாக மதிப்பிடுகிறோம்.

இருந்தாலும் ரோட்டரி சங்கங்களில் 27 சதவீதம் சங்கங்கள் மட்டுமே ரோட்டராக்ட் சங்கத்துக்கு ஆதரவு தருகிறது. இதுதான் பல ஆண்டுகளாக நீடிக்கிறது. அத்துடன் சில ரோட்டராக்ட் இளைஞர்கள் மட்டுமே பிற்காலத்தில் ரோட்டரி உறுப்பினர்கள் ஆகிறார்கள். இந்த ஆண்டு ரோட்டராக்ட் இளைஞர் அமைப்பின் ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், ரோட்டராக்ட் சங்கங்களுக்கு ஆதரவு தரும்படியும் ஏற்கெனவே ஆதரவு தருவோர் ரோட்டராக்ட் இளைஞர் அமைப்புடன் நல்லுறவை வலுப்படுத்தும்படியும் ரோட்டரி சங்கங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுக் கூட்டங்களுக்கு அடிக்கடி ஏற்பாடு செய்ய வேண்டும். இணைந்து சேவைத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். ரோட்டராக்ட் இளைஞர் அமைப்புகளைத் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு உதவி அளிப்பதற்கு முன்வருவதுடன் அவர்களுடன் இணைந்தும் பணியாற்ற வேண்டும். உங்களது ரோட்டராக்ட் சங்கத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். அவற்றின் உறுப்பினர்களுடன் தொடர்பில் இருங்கள். ஒவ்வொரு ரோட்டராக்ட் இளைஞரும் தன்னை ரோட்டரி சங்கம் வரவேற்கக் காத்திருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வழிசெய்யுங்கள்.

கடந்த அரை நூற்றாண்டாக ரோட்டராக்ட் அமைப்பு ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்களைப் போல தங்களது சமுதாயத்துடன் தொடர்புகளை வைத்திருப்பதுடன், மதிப்பு மிக்க சேவைகளைப் புரியும் பல இளைஞர்களைத் தந்திருக்கிறது. ரோட்டராக்ட் இளைஞர்கள் நமது எதிர்கால ரோட்டரி சங்கத்துடன் இணைத்து வருகிறார்கள்.இன்றைய ரோட்டரி சங்கத்தைக் கட்டமைக்கவும் கைகொடுத்து உதவுகிறார்கள்.

இயான் H.S. ரிஸ்லி,
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# தூய்மையான நீரும் துப்புரவும்

அன்புடைய ரொட்டேரியன்களே,
தடையற்ற பாதுகாப்பான மற்றும் தூய்மையான குடிநீர் கிடைப்பது என்பது மனித வளர்ச்சிக்கும் நலனுக்கும் அடிப்படையானது. இதுவே, ஆரோக்கியம், சுகாதாரம், துப்புரவு மற்றும் வறுமையை குறைப்பது ஆகிய அனைத்திற்கும் முக்கியமான தேவையாகும். மாசுபடுத்தப்பட்ட தண்ணீர், வயிற்றுப்போக்கு, காலரா, சீதபேதி, டைபாய்ட் மற்றும் போலியோ போன்ற நோய்களைப் பரப்புகிறது. வயிற்றுப்போக்கின் காரணமாக ஆண்டிற்கு பத்து லட்சத்துக்கும் அதிகமான உயிரிழப்புகள் உண்டாகிறது என்று கணிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நாம் போலியோவிற்கு எதிராக போர் தொடுத்திருக்கிறோம், மேலும் அந்த நோய் சில நாடுகளைத்தவிர உலகெங்கும் ஒழிக்கப்பட்டு விட்டது என்பதில் பெருமை கொள்கிறேன். ஆனால், குடிநீர் மாசுபடுதலை தடுக்காவிட்டால், போலியோ திரும்பவும் வரலாம். WHO, பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் தரத்திற்கான பன்னாட்டு ஆணைக்குழு, நீரால் பரவக்கூடிய நோய்களை தடுப்பதற்கான உலகளாவிய முயற்சியை முன்னெடுத்துச் செல்கிறது. அரசாங்கங்களிடையே சுகாதார அடிப்படையிலான ஒழுங்குமுறைகளை ஊக்குவிப்பதன் மூலமும், குடிநீர் விநியோகஸ்தர்கள், சமூகங்கள் மற்றும் வீடுகளிலும் பயனுள்ள இடர் மேலாண்மை நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இதைச் செய்கிறது.

அதிகப்படியான கழிப்பிடங்கள் மற்றும் சுகாதார, துப்புரவுக்கான நமது அரசாங்கத்தின் பெரும் முயற்சிகள் இருந்தும், UNICEF 2010 அறிக்கையின் படி, இந்தியாவில் திறந்தவெளி மலஜலம் கழித்தல் விகிதாசாரம் மிகவும் அதிகமாக இருப்பதைச் சொல்வதற்கு மிகுந்த வருத்தப்படுகிறேன். திறந்தவெளி மலம் கழித்தல் என்பது சுகாதாரம் அல்ல. அது சுற்றுச்சூழலை பாத்திக்கிறது, நீரின் தரத்தை மட்டுப்படுத்துகிறது மேலும் நோய்களை பரப்புகிறது. பாதுகாப்பான குடிநீர் கிடைக்கப்பெறுவது மற்றும் நல்ல துப்புரவுச் சூழல் குடும்ப நலனுக்கு மிகவும் அத்தியாவசியமானது. அது, குழந்தைகளை மையப்படுத்தி வரும் நோய்களை கட்டுப்படுத்தி ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது. இதனால் அக் குழந்தைக்கு கற்றல் மற்றும் தக்கவைத்துகொள்ளும் திறன் அதிகரிக்கும். சரியான சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதக் காரணத்தினால் சிறுமிகள் பள்ளிக்கு செல்வதை தவிர்க்கிறார்கள் என்பதை ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

துப்புரவு ஒரு குடும்பத்தின் கல்வியறிவு பெறுவதில் நேர்மறையாகப் பங்களிக்கிறது. UNICEF ஆய்வின் படி, குடும்பத்தின் கல்வியறிவில் ஒவ்வொரு 10 சதவிகித உயர்வினால் நாட்டின் பொருளாதாரம் 0.3 சதவிகிதம் அதிகரிக்கக்கூடும். நல்ல சுகாதார பழக்கங்களை பின்பற்றாமல், சுத்தமான குடிநீர் மற்றும் நல்ல துப்புரவு மட்டும் தொற்றுநோயை தடுத்து நிறுத்திவிட முடியாது. சாதாரண கைக்கழுவும் பழக்கம் நோய்த்தடுப்பதில் பெரும் பங்காற்றுகிறது.

ரோட்டரியின் வின்ஸ் திட்டம் பாதுகாப்பான நீர் மற்றும் நல்ல சுத்திகரிப்பு பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கிறது. நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசு பள்ளியும் நல்ல சுகாதாரம், பயனுள்ள சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பான நீர் வசதிகள் பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

மேம்பட்ட மற்றும் அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஆதாரங்களில் இருந்து தண்ணீர் வரும்போது, அதை சேகரிக்க மக்கள் குறைந்த நேரத்தையும் சக்தியையுமே செலவிடகூடும் அதனால் அவர்கள் மற்ற வழிகளில் ஆக்கப்பூர்வமாக இருக்கக்கூடும். இது, நீரை சேகரிப்பதற்காக நெடுந்தூர, அபாயகரமான பயணங்களைத் தவிர்த்து பெருமளவு தனிப்பட்ட முறையில் பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும். சிறந்த நீராதாரம் எனும் பொழுது, மக்கள் நோய்வாய்ப்படுதல் குறையும்.

வின்ஸ் திட்டத்திற்கு நமது ஆதரவைக் கொடுப்போம், மற்றும், நமது பங்களிப்பு பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதன் மூலம் நமது நாட்டின் குழந்தைகளுக்கு ஆரோக்கியமான எதிர்காலத்தை உறுதி செய்வோம். *ரோட்டரி: ஒரு வித்தியாசத்தை உருவாக்குகிறது* என்பதை இது ஒரு வெளிக்கொணரும்.



C. பாஸ்கர்,
இயக்குனர், ரோட்டரி இண்டர்நேஷனல்.



# ரோட்டரி ஆதரவு மையம் — ஒரு பார்வை

கேள்விகள், கேள்விகள், கேள்விகள் எனது பயணங்களில் உலகமுழுவதும் உள்ள சக ரோட்டரி சங்கத்தினரிட மிருந்து ரோட்டரி சங்க இணைய தளம் மற்றும் ரோட்டரி நிறுவன மானிய உதவி ஆகிய இரு விஷயங்கள் குறித்து அடிக்கடி கேட்கப்படுகின்றன.

அவ்வாறு கேட்கப்படும் கேள்விகளில் நன்கொடையாளர்களின் பங்களிப்புகள் (donor contributions), பாயிண்ட்டுகள் மாற்றம் (point transfers), சங்க, மற்றும் மாவட்ட சங்கத்தின் அறிக்கைகள் (club and district reports), சங்கத்தின் இன்வாய்ஸ்கள் (club invoices), சங்க அலுவலர்கள் மாற்றம் (club officer changes) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதற்கான பதில்களை எங்கே பெறுவது என்று நீங்கள் அறிய விரும்பினால், ரோட்டரி ஆதரவு மையத்தை (Rotary's Support Center) அணுகலாம்.

ரோட்டரி ஆதரவு மையத்தை (Rotary's Support Center) எளிதில் அணுகலாம். ரோட்டரி சங்கத்தினர், நன்கொடையாளர்கள், பணியாளர்கள், மற்றவர்களைத் தொடர்புகொள்ளவும் இந்த மையத்தை நாடலாம். ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் தகவல் கிடைக்கும். திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையில் மைய நேரம் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையில் தகவல் பெறலாம். இது தவிர, கட்டணமில்லா தொடர்பு எண்: 1-866-976-8279 (1-866-9ROTARY). மேலும் தொடர்புக்கான மின்னஞ்சல் : rotarysupportcenter@rotary.org ஆகும். பதில்கள், விளக்கங்கள் ஆகியவை ஒரு நாளில் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

இந்த உதவி மையத்தில் சராசரியாக மாதந்தோறும் 3,500 அழைப்புகள் வருகின்றன. அவற்றில் 1,500 அழைப்பாளர்கள் குறிப்பிட்ட நபரையோ, ரோட்டரி சங்கத் துறையையோ தொடர்புகொள்ள அணுகுகிறார்கள். மாதந்தோறும் சராசரியாக 7 ஆயிரம் மின்னஞ்சல்கள் வந்து குவிகின்றன.

ரோட்டரி ஆதரவு மையத்தை (Rotary's Support Center) நிறுவி எட்டு ஆண்டுகள்தான் ஆகின்றன. தொடர்பு மையங்களின் தரத்தை அளவிடும் பெஞ்ச்மார்க் போர்ட்டல் என்ற நிறுவனம் ரோட்டரி ஆதரவு மையத்துக்கு, மிகச் சிறந்த மையம் என்று சான்றிதழ் அளித்துள்ளது. வாடிக்கையாளர்களுக்கான சேவையில் அதிக செலவின்றி, மிகச் சிறந்த தரமான சேவையை அளிப்பதால், சிறந்த சேவைக்கான ஆதரவு நிறுவனத்திற்கான இந்த கவுரவம் மிக்க விருது அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு பெறுவதன் மூலம் சேவை மையம் திறமையான பயனுள்ள சேவையைக் குறைந்த செலவில் உயர்ந்த தரத்துடன் அளிக்கும்.

ரோட்டரி ஆதரவு மையத்தைச் சேர்ந்த குழு (Rotary Support Center team) வருகை புரிவோர்க்கான சேவைகள், திட்டமிட்ட சுற்றுலாப் பயணத்துக்கான சுற்றுலாப் பயண திட்ட ஒருங்கிணைப்பாளர், ரோட்டரி தலைமையகத்துக்கு வர விரும்புவோர்க்காகப் பெரிய குழுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வது ஆகியவற்றுக்குத் திட்டமிடுவோர் இக்குழுவில் இடம்பெறுகிறார்கள். ஆண்டுதோறும் வியப்புக்குரிய வகையில் ரோட்டரி அலுவலகத்துக்கு ஏராளமானோர் வருகிறார்கள்.

சிக்காகோ பகுதிக்கு வரத் திட்டமிட்டிருக் கிறீர்களா...? சுற்றுலாப் பயணம் குறித்து வேண்டுகோள் விடுப்பதற்காக visitors@rotary.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். ஒருவேளை நமது பாதைகள் ரோட்டரி மையத்தின் (One Rotary Center) வழியாகக் கடக்கக் கூடும்!

திருப்தி அடைந்துள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து வந்துள்ள 96 சதவீத தரத்தை எட்ட வேண்டும் என மையம் விரும்புவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது.



பால் ஏ நெட்ஸெல்
ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

இன்னமும் ஏதேனும் கேள்வி இருந்தால், அதைக் கேட்டு பதிலளிக்க விரும்புகிறேன். தயவு செய்து paul.netzel@rotary.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.

# Häcker

kitchen. germanMade.




| DELHI | MUMBAI | BENGALURU | KOCHI | COIMBATORE | CHENNAI | HYDERABAD | AHMEDABAD | LUDHIANA | JAIPUR | INDORE | THRISSUR | MANGALURU |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9313134488 | 9322987229 | 9740999350 | 9895058285 | 9500210555 | 9442081111 | 9700058285 | 9879538977 | 9815048222 | 9414058718 | 9425803599 | 7025991000 | 7899119955 |

**E-mail: info@hacker-kitchens.com**
**Website: www.haecker-india.com / www.haecker-kuechen.com**

# பசுமையான
# கேரளத்தை மேலும்
# பசுமையாக்குதல்

ரஷீதா பகத்




**வலது புறத்திலிருந்து :** கோவர்தன் வேளாண்மையின் தொழிநுட்ப நிபுணர், DG சுரேஷ் மேத்யூ, திருவல்லா ரோட்டரி சங்கத் தலைவர் மேத்யூ ஜேகப், REAP தலைவர் பிஜுமோன் குரியன், AG சந்தோஷ் ஜார்ஜ் மற்றும் அணில் உழத்தில்.

ரோட்டரி இண்டர்நேஷனல் மாவட்டம் 3211 இன் புதுமையான REAP திட்டத்தைப் பற்றி படிக்கவும், அங்கு ரோட்டெரியன்கள் பாரம்பரிய ஆரோக்கியமான அரிசி வகைகளை பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளது மட்டுமல்ல, சங்கக் கூட்டங்கள், அடிக்கடி செழிப்பான பச்சை நெல் வயல்களில் நடைபெறுவது, இயற்கையின் அழகையும்,வளத்தையும் கொண்டாடுவதாகிறது.



நம்மில், சுத்தமான மற்றும் பசுமையான கேரளாவின் பெரும் ரசிகராக இருப்பவர்களும், சுத்தமான மற்றும் பசுமையான கேரளாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முதல் வாய்ப்பைப் பெற்றவர்களும், பன்னாட்டு ரோட்டரி மாவட்டம் 3211 ன் மாவட்ட கவர்னர் மேத்யூ, ஏற்கனவே பசுமையாக இருக்கும் கேரளத்தை மேலும் பசுமையாக்க ஓர் முயற்சியை மேற்கொண்டுள்ளார் என்பது ஓர் ஆச்சர்யமான விஷயமாக இருக்கும்.

சுருக்கமாக REAP (Rotary Empowerment of Agricultural Production) என்று பெயரிடப்பட்ட இத்திட்டத்தின் குறிக்கோள்கள் பல. முதன்மையானது, பாரம்பரிய அரிசி வகைகளை, இயற்கை மற்றும் ஆர்கானிக் முறைகளைப் பயன்படுத்தி ரசாயன உரங்களோ, பூச்சிக்கொல்லி மருந்துகளோ இல்லாமல் பயிரிடுவதேயாகும். மேத்யூ, மாவட்ட கவர்னராக பதவியேற்கும் முன்னர் சரியாகத்திட்டமிட்டு ஜூலை 1 இல் தொடங்கப்பட்டது. REAP, இது வரை வேளாண்மை செய்யப்படாத நிலத்திலும், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளால் பாழ்பட்ட நிலங்களிலும், உயிரிச்சத்துக்களை உள்புகுத்தி ஆரோக்கியமான பயிர்களை - நெல்லை பிராதானப் பயிராக உருவாக்கவேண்டும் என்பதை ஓர் இலட்சிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

கடந்த ஏழு மாதங்களில், 250 ஏக்கருக்கு மேல், இதுவரை வேளாண்மை செய்யப்படாத வயல்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டப் பட்டது, மேலும் ஆர்கானிக் முறையில் வளர்க்கப்பட்ட அரிசி அறுவடை செய்யப்பட்டது. ஏற்கனவே, இதுவரை 250 டன் அரிசி அறுவடை செய்யப் பட்டுள்ளது. ஏறக்குறைய 60 சதவிகித குத்தகை நிலத்தில் நெற்பயிர் விளைச்சலும், மீதமுள்ள நிலத்தில் வாழை, மரவள்ளிக்கிழங்கு மற்றும் காய்கறிகளும் விளைவிக்கப் பட்டது. அனைத்திற்கும் 3211ன் சங்க உறுப்பினர்களின் உத்வேகத் திற்கே நன்றி சொல்லவேண்டும்.

“நாங்கள் வளர்க்கும் அரிசி ஆரோக்கியமானதும், சுவையானதும் ஆகும். மேலும், அது ரொட்டேரியன்கள் மத்தியில் பிரசித்தி பெற்று விட்டது’’ என்று புன்முறுவல் பூக்கிறார் மேத்யூ.

## தொடக்கம்

வெளிநாடுகளில் கிடைக்கும், நல்ல வேலைவாய்ப்பின் காரணமாக, பல வருட காலமாக, பல்லாயிரக்கணக்கான கேரள மக்கள் வெளிநாடுகளுக்கு, குறிப்பாக வளைகுடா நாடுகளுக்கு, சென்றுவிட்டனர். நெல் சாகுபடி செய்யப்படும் பண்ணை நிலங்கள், பல குடும்பங்களால் கைவிடப் பட்டன. மேலும், தொடர் இரசாயன உரங்களின் பயன்பாட்டினால் மண்ணில் ஊட்டச்சத்துக்கள் அழித்து விட்டன, எனவே அரிசி விளைவிப்பதில் எவ்வித மகிழ்ச்சியும் இல்லை. ஏற்கனவே இருக்கும் வேலையாட்கள் பற்றாகுறையுடன், மக்கள் வளைகுடா நோக்கி பயணப்பட்டதால், விவசாயம் பெருத்த அடிவாங்கியது.

“இதன் விளைவாக, கேரள மக்கள், பெரும்பாலும் ஆந்திரப் பிரதேசம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகளால் பாதிக்கப்பட்ட, அரிசி யைச் சார்ந்து இருப்பவர்களாக மாறி விட்டனர். கேரளத்தில் புற்றுநோய் பாதிப்பு அதிகரிப்பதற்கு இது ஒரு பிரதானக் காரணமென்று புற்றுநோய் மருத்துவர்களிடமிருந்தும் மற்ற நலவாழ்வு நிபுனர்களிடமிருந்தும் தெரிந்துகொண்டார் மாவட்ட கவர்னர் மேத்யூ’’ என்கிறார் ஆர்கானிக் முறையில் உற்பத்தி செய்த பொருட்களை ஏற்றுமதி செய்பவரும் REAP இன் தலைவருமான பிஜுமோன் குரியன்.

மேத்யூ மற்றும் குரியனுக்கு இந்த திட்டத்தை நிறுவுவதில் உதவிபுரியும், மற்றும், இந்த திட்டத்தின் மற்றொரு வடிவமைப்பாளரும், அதன் பிரதான ஆலோசகருமான, PDG K. P. ராமச்சந்திரன், மேலுமொரு அதிர்ச்சியளிக்கும் புள்ளிவிவரத்தை வழங்குகிறார். 1966 ஆம் ஆண்டில், கேரளத்தில் எட்டு லட்சம் ஹெக்டேர் நிலம் நெல் சாகுபடியின் கீழ் இருந்தது. “ஆனால், அது இப்பொழுது இரண்டு லட்சம் ஹெக்டேராக சுருங்கிவிட்டது. ஏறத்தாழ ஆறு லட்சம் ஹெக்டேர்கள் ரப்பர் பயிரிடப்பட்டும், வேறு நட வடிக்கைகளுக்கும் சென்றுவிட்டது. ஆனாலும், பெரும்பகுதி வீணாகக் கிடக்கிறது.’’ அதன் விளைவு, அவருடைய கணக்கின்படி மக்கள் எடுத்துக்கொள்ளும் அரிசியில் சுமார் 85 சதவிகிதம் வெளியிலிருந்தும், பெரும்பாலும் ஆந்திராவிலிருந்து வருகிறது. அவை அதிகப்படியான




ரசாயணத்தை உள் கொண்டுள்ளன. குரியன் ஓர் உயிரி சாகுபடி முறையில் வல்லுநர் மேலும் அதனாலேயே மாவட்ட கவர்னர் இவரை இந்த திட்டத்திற்குத் தேர்ந்தெடுத்துள்ளார்.'' என்கிறார்.

எனவே REAP திட்டமிடலில் இருந்த போது, ஆரோக்கியமான உணவை இயற்கையாகவும், ஆர்கானிக் முறையில் வளர்ப்பதற்கு, சமூகத்திலிருந்து முடிந்த வரை அதிகபட்ச மக்களை உள்ளடக்கியதாகச் செய்ய முடிவெடுக்கப்பட்டது. அந்த மாவட்டத்தில் இருக்கும் ரொட்டேரியன் ஒரு லட்சம் 'க்ரோ பேக்' (நாற்றுப் பைகள்) களில் வீட்டுக் காய்கறி நாற்றுக்களுடன் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மக்களுக்கு பண்ணை வேளைகளில் விருப்பத்தை உண்டாக்குவதே அதன் நோக்கம். ''எல்லோரிடத்திலும் பண்ணை நிலம் இல்லை. ஆனால் நாம் அனைவரும் வீட்டில் காய்கறிச் செடிகளை வளர்க்க முடியும்'' என்கிறார் மேத்யூ.

குரியன், இலகுவான மற்றும் பெண்களுக்கு கையாளுவதற்கு மிகவும் தேங்காய் நார் எளிதான நிரப்பப்பட்ட நாற்றுப்பைகளைக் கொடுக்கலாம் என்பதைப்பற்றி பேச இந்திய அரசாங்கத்தின் காயர் போர்டை அணுகினார். "அவர்கள் எங்களுக்கு உரம் மற்றும் பிற சத்துக்கள் நிறைந்த தேங்காய் நார் வழங்கினார்கள். பல சங்கங்கள் ரோட்டரியின் சின்னம் மற்றும் பெயர் அச்சிடப்பட்ட 1,000 அல்லது அதற்கு மேற்பட்ட பைகளை தங்கள் மக்களுக்குக் கொடுத்தார்கள்'' என்கிறார் அவர்.

பல சோதனைத் திட்டங்கள் செய்யப்பட்டன, மேலும் இந்த முயற்சி ஊடகத்தின் கவனத்தை பெருமளவில் ஈர்த்தது. "நாங்கள் வீடியோ காட்சிகளை படமாக்கினோம் மேலும், மலையாளத்தில் செய்முறை மற்றும் ஆர்கானிக்கின் நன்மைகளை விளக்கும் கையேடுகளை தயாரித்தோம் - இரண்டும் நாற்றுப்பைகள் கொண்டும், மேலும், தரிசு நிலங்களில் இயற்கை முறைகளைக் கொண்டு நெற்பயிர் சாகுபடி செய்ததையும்,'' என்கிறார் குரியன்.

## சமூகப் பங்கெடுப்பு

இந்த அணுகுமுறையானது, முடிந்தவரை அதிகபட்ச பங்குதாரர்களின் பங்கேற்க வைப்பதாகும். பல்வேறு ரோட்டரி



சங்கங்கள் அவர்கள் பகுதியிலிருக்கும் தரிசு நிலங்களை குத்தகைக்கு எடுத்தார்கள். சராசரியாக ஒரு ஏக்கருக்கு ரூ.12,000/-. மண், உயிரிகளைக்கொண்டும், ஆர்கானிக் உரங்களைக்கொண்டும் செறிவூட்டப் பட்டது. மேலும், பாரம்பரிய விதை வகைகள் உள்ளூர் நிபுணர்களிடமிருந்து பெறப்பட்டது. மேத்யூவின் மாவட்ட ஆளுநர் பதவிக்காலம் தொடங்கும்போது REAP குழுவானது அதிகாரப்பூர்வமாக திட்டத்தை, பிரதான மற்றும் வெளித்தெரியக்கூடிய இடமான திருவனந்தபுரத்திலுள்ள மாநில செயலகத்தில் தொடங்க தயாராக இருந்தது. நாங்கள் 1000 நாற்றுப்பைகளை விநியோகித்தோம்; வேளாண் அமைச்சர் V S சுனில்குமார், மற்றும் வேறு சில அமைச்சர்களும் பல MLAக்களும், அதிகாரிகளும் பங்கேற்றனர். இது அனைவருக்கும் தெரிந்த விஷயமாகியது,'' என்கிறார் மாவட்ட ஆளுநர்.

ஒரு சுவாரஸ்யமான இதன் கிளைக்கதை, இரு மாதங்களுக்கு முன்னால், வயல்கள் ஒன்றில் அரிசி அறுவடை செய்யப்பட்டபோது உத்ஸவுக்கு அழைக்கப்பட்டிருந்த ஓர் அமைச்சர் “டிவி சேனல்களுக்கு முன்னால்” ஓர் கருத்தைத் தெரிவித்தார்.

இந்தத்திட்டம் துவங்கியபோது, ரொட்டேரியன் இந்த வேலையைச் செய்து முடிப்பார்கள் என்று அவர் நினைக்கவில்லையென்றும், அவர் ஆச்சரியமும், நாம் இந்தத் திட்டத்தை இதுவரை கொண்டுச் சென்றதற்காக மகிழ்ச்சி அடைவதாகவும் கூறினார். “நான் இப்போது ரோட்டரி சமூகத்தின் மனநிலையை மாற்றியமைக்க முயற்சி செய்யும் நல்லவர்கள் என்று உணர்ந்து விட்டேன் என்றார்.'' புன்முறுவல் பூக்கிறார் சூரியன். மேலும் இன்னொரு கூட்டத்தில் ரோட்டரியன்கள் இன்னுமொரு அமைச்சருக்கு REAP அரிசியைக் கொடுத்துள்ளனர். அவர் அதை உபயோகித்துப் பார்த்தபின்னர் மேலும் வேண்டுமென்று கேட்குமளவுக்கு விரும்பினார்! எந்தவொரு ரோட்டரி நிகழ்விலும் REAP அரிசியே பிரசித்திப் பெற்றதும் முதலில் விற்றுத்தீரும் பொருள் என்றும் மேத்யூ மேலும் கூறினார்.

## அசைந்தாடும் பச்சை வயல்கள்

கொச்சியிலிருந்து 52 கி.மீ. தொலைவில் உள்ள வைக்கமில் இருக்கும் வைக்கம் ரோட்டரி சங்கத்தினால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட 3.5 ஏக்கரில் இருந்த முதல் வயலைக் காண்பதற்கு சென்றபோது, அது மேகமூட்டமானதும் அருமையானது மான ஒரு நாள்; ஒரு மென்மையான காற்று வீசி பசுமையான நெல் வயல்கள் பறவைகள் கூட்டத்தை ஈர்த்தது, குறிப்பாக எக்ரெட்ஸ்களை. இங்கு உள்ளூர் விவசாயிகளிடமிருந்து வயல்கள் குத்தகைக்கு எடுக்கப் பட்டுள்ளது என்று விவரிக்கின்றனர், வைக்கம் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஷிஜோ மேத்யூ மற்றும் அந்த மண்டலத் தின் துணை ஆளுநர் ஷைன் குமார். அந்த நிலம் பல பத்தாண்டுகளாக வெறுமனே கிடந்தது, இப்போது ஏக்கருக்கு இரண்டு டன் அரிசியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளது. வைக்கம் என்பது அடிப்படையில் எவ்வித கனரக தொழிற்கூடங்கள் இல்லாத ஒரு விவச ாயப் பகுதியாகும். குறிப்பிடத்தக்க ஒன்று இந்துஸ்தான் நியூஸ் ப்ரிண்ட் என்று கூடுதல் தகவல் தருகிறார் தலைவர். “இங்கு 270 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு பெருமளவு விவசாய ஆதிக்கம் செய்யும் நிலப்பரப்பாகும். ஆனால், வேலையாட்கள் இல்லாத காரணத்தினாலும், பருவநிலை

## லாட்டரியிலிருந்து ரோட்டரி வரை

DG சுரேஷ் மேத்யூ, REAP திட்டத்தின் முக்கிய நோக்கம், தரிசு மற்றும் ரசாயனத்தினால் பாதிக்கப்பட்ட நிலத்தை உயிரியல் ஊட்டச்சத்துக்கள் மற்றும் கரிம எருக்களோடு சேர்த்து வளமான, நிலமாக மாற்றுவது முதன்மையான குறிக்கோளாக இருந்து, ரோட்டரியின் பொது பிம்பத்தை மேம்படுத்துவதும் ஆகும்.

பெரும்பாலான இடங்களில், கேரளாவிலும், பெரும்பாலானோர் ரோட்டரியை ஐந்து நட்சத்திர விடுதிகளில் சந்தித்து கொண்டாடும் செல்வந்த உறுப்பினர்களைக் கொண்ட மேல்தட்டு நிறுவனத் துடன் இணைத்துப் பார்க்கிறார்கள். “நாம் செய்யும் மிகப்பெரிய நலத் திட்டங்கள் மக்களால் கவனிக்கப்படுவதில்லை. உண்மையில் கேரளாவில் பலர் ரோட்டரியை லாட்டரி என்று நினைத்தும் குறிப்பிட்டும் வருகிறார்கள்.''

ஆளுநரே, முந்தைய நாள் ஒரு சங்கத்திற்கு சென்றபோது இதை அனுபவித்தார். “இங்கே, அரசாங்கம் காருண்யா லாட்டரி என்பதற்கு உரிமையாளராக இருக் கிறது. அது அறுவை சிகிச்சைக்காக, தகுதியான மக்களுக்குப் பணம் வழங்குகிறது. நேற்று, ஒரு சங்கத்திற்கு சென்றபோது, ஒருவர் பரிந்துரை கடிதத்திற்காக சங்கத்திற்கு வந்தார், ஏனெனில் அரசாங்க லாட்டரி துறை யிடமிருந்து அத்தகைய கடிதத்தை அரசாங்க அதிகாரி கேட்டிருந்தார், அந்த பெண்மணி அது ரோட்டரி சங்கத்தைக் குறிக்கிறது என்று நினைத்திருந்தார்'' என்று கூறி சிரிக்கிறார் மாவட்ட ஆளுநர் மேத்யூ.

ரோட்டரி, சமூகத்திற் காக பெரும் முயற்சிகளை மேற்கொள்ளும் ஒரு சேவை அமைப்பு என்று உரத்தும் தெளிவாகவும் சொல்வதற்கு விதைப்பு மற்றும் அறுவடை நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்ட சங்கங்களினால் ஒரு உத்ஸவ் என்று கொண்டாடப்படுகிறது. 'இந்நிகழ்வுகளில் ரோட்டரியான் கள் மற்றும் அவர்களின் குடும்பத் தார்கள் மட்டுமல்லாமல், உள்ளூர் கிராமவாசிகள், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பஞ்சாயத்து பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். இந்நிகழ்ச்சி களுக்காக வயல்களுக்குச் செல்லும்போது கால்சட்டைகளுக்கு பதிலாக வேஷ்டி மற்றும் சட்டை அணியவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம், அதனால் நாம் உள்ளூர் சமூகத்துடன் ஒன்றிணைக்கிறோம்,'' என்று மேலும் கூறுகிறார்.

மாற்றத்தினாலும், ரசாயன பூச்சிக் கொல்லிகளின் மோசமான விளைவுகளினாலும் நாங்கள் வரும் வரை யாருக்கும் பயிரிடுவதில் எந்த ஆர்வமும் இல்லை.

அவரது சங்கத்தில் 42 உறுப்பினர் கள் இருக்கின்றனர். மற்றும் அவர்கள் அனைவரும் தங்கள் குடும்பத் துடன் சேர்ந்து, இந்த திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். பல சங்கங்களில் இது ஒரு சட்டமாகி விட்டது - D 3211 ல் இருக்கும் 130 சங்கங்களில், 60 சங்கங்கள் REAP திட்டத்துடன் தொடர்புடையவர்கள். பெரும்பாலும் சங்கக் கூட்டங்களை அவர்கள் பயிர் செய்யும் பசுமையான நெல் வயல்களில் நடத்துகிறார்கள். அந்த கூட்டங்களில் மதுபானங்கள் பரிமாறப்படுவதில்லை. உணவும் பாரம்பரிய கேரளா உணவே.

விதை விதைப்பு, அறுவடை செய்தல் மண்ணுக்கு இயற்கை உரம், வேப்பம் பசை வேப்ப பூச்சிக்கொல்லி போன்ற கூட்டுப்பொருள்களை வயல்களில் தூவி இடுதல் போன்ற நிகழ்வுகளின்போது ரோட்டேரியன்கள் பாரம்பரிய உடைகளையே அணிவதை வழக்கமாகக் கொள்கிறார்கள்; கால்சட்டைகள் அல்லது ஜீன்ஸ் ஆகியவை வேஷ்டி மற்றும் லுங்கிக்கு விட்டுக்கொடுக்கிறது. இந்நிகழ்ச்சியின்போது வேலையாட் கள், உள்ளூர் கிராமவாசிகள் எங்களோடு மகிழ்ச்சியுடன் இணைகின்றனர். மேலும் திட்டத் தைப்பற்றி கேட்டுத் தெரிந்து கொள்கின்றனர். ஏனெனில் இவர்கள் பென்ஸ் அல்லது BMW கார்களில் பயணிப்பவர்களானாலும் நம்மைபோன்றவர்களே என்று நினைக்கிறார்கள்'' என்கிறார் REAP தலைவர் குரியன்.

நகர்புறத்தில் இருக்கும் சங்கங்களாக இருப்பதால், நிலத்தைக் குத்தகை எடுத்து வேளாண்மை செய்ய முடியாத சங்கங்கள், “இத்திட்டத்தில் பங்கேற்கும் சங்கங்களோடு கூட்டுச் சேர ஊக்குவிக்கப் படுகிறார்கள்'' என்று கூடுதலாக சொல்கிறார் ஷைன் குமார்.

தாலொலப்பரம்பு ரோட்டரி சங்கம் குத்தகை எடுத்துள்ள வயல்களுக்கு அடுத்ததாகப் பயணக்கிறோம், சங்கத்தில் 21 உறுப்பினர்கள் உள்ளனர் மற்றும் 5.3 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளனர். நிலம் பசுமையாக இருக்கிறது, தூய காற்று, மற்றும் இன்னும் சிலநாட்களில் அறுவடை நடைபெற உள்ளது. ``நீங்கள், இரண்டு மாதத்திற்கு முன்பு வந்திருந்தால், இந்நிலம் ஒரு காடுபோல பாம்புகள் மண்டி இருந்ததைப் பார்த்திருப்பீர்கள். ஆனால், விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளிகளின் உதவியுடன் நாங்கள் அதை ஒரு






*இடது புறத்திலிருந்து:* AG ஷைன் குமார், பிஜு ஜோஸ், ஜேம்ஸ் குரியன், REAP தலைவர் பிஜுமோன் குரியன், செயலாளர் ராய் வர்கீஸ், வைக்கோம் சங்கத்தலைவர் ஷிஜோ மேத்யூ, AG சாபு வர்கீஸ்.

பசுமையான சொர்க்கபுரியாக மாற்றிவிட்டோம்'' என்கிறார் சங்கத்தலைவர் ஷிஜோ.

அருகிலுள்ள கால்வாய் வயல்களுக்கு தண்ணீரைக் கொண்டு வருகிறது, மேலும் சங்கம் 1,000 நாற்றுப்பைகளை உள்ளூர் மக்களுக்கு காய்கறிகளை வளர்க்க கொடுத்துள்ளது. அது, இளைஞர்களுக்கு இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப் பள்ளிகள் மூலம் கொடுக்கப் பட்டது. மரவள்ளிக்கிழங்கும் வாழையும் கூட இந்நிலங்களில் விளைவிக்கப்படுகின்றது'' என்கிறார் கூடுதலாக.

## அரவணைப்பும் கூட்டுறவும்

REAPன் வெற்றியை அதன் உள்ளடக்கிய அணுகுமுறை மற்றும் கூட்டாண்மை ஆகியவற்றிற்கு காரணமாக்கலாம். இந்த கிராமத் தில் உள்ளூர் பஞ்சாயத்து தலைவர் வி.எம்.மோகனை நான் சந்தித்தேன். “ரோட்டரியுடன் கூட்டாண்மை எப்போதுமே நல்லது. அவர்கள் முன்முயற்சிக்கு நன்றி, உள்ளூர் மக்களுக்கு வேலை கிடைக்கிறது மற்றும் மிக முக்கியமான, ஆரோக்கிய மான உணவும் கிடைக்கிறது,''என்கிறார் அவர்.

இந்த கிரீனிங் திட்டத்திலிருந்து மற்றொரு பெரிய விளைவு நிலத்தடி நீர்அதிகரிப்பது. கிணறுகள் நிரப்பப்படுவது மட்டுமல்ல, உப்பு நீர் மறுபடியும் நல்ல தண்ணீராக மாறுவதும் நடக்கிறது. இந்த பகுதியில் தண்ணீர் நிறைய இருந்தாலும், குடிநீருக்குப் பிரச்சனை இருந்தது, ஆனால் அது மெதுவாக தீர்ந்து வருகிறது.

ஒரு ரோட்டரியன் 8,500 வாழை மரங்களை இயற்கை விவசாயம் மூலம் பயிரிடத் தொடங்கினார் என்று கூடுதலாக சொல்கிறார் குரியன். குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஒவ்வொரு நெல் வயல்களிலும் ஒரு உள்ளூர் நபருடன் ஒரு கூட்டாண்மை உள்ளது என்பதை அவர் விளக்குகிறார். “REAP மூலமாக ஐந்து நட்சத்திர பிம்பத்தை தகர்த்தெறிய பெரும்பாடு பட்டோம், அதுவும் ஒரு வர்த்த கக்குறியீட்டு முயற்சி, இப்போது ரோட்டரியின் சின்னம் நாற்றுப்பைகள் விநியோகிக்கப்பட்ட இடங்களிலும் நெல் பயிரிட்ட சமூகங்களில் அறியப்பட்டிருக்கிறது.''

## சுத்தம், பசுமை, இயற்கை

சுத்தம், பசுமை, இயற்கை, ஆர்கானிக் ... இந்த நான்கு வார்த்தைகளே நான் எப்போதும் கேட்டது. அடுத்த நாள், நான், குமரகோமிலிருந்து 40 கி.மீ. தொலைவிலுள்ள திருவல்லாவில்



இருக்கும் இன்னும் இரண்டு நெல் வயல்களைப் பார்ப்பதற்கு சென்றேன். அங்கே ரோட்டரியன்கள் 11 ஏக்கர் நிலத்தை நெற்பயிரிடுவதற்குக் குத்தகை எடுத்திருந்தார்கள். மாவட்ட ஆளுநர் மேத்யூ ரோட்டரியான்களுடன் திட்ட ஆய்வில் சேர்ந்துகொண்டார். ரோட்டரியன்கள் வேஷ்டி/லுங்கி மற்றும் சட்டையுடன் வந்திருந்தனர் இணையாக வந்திருந்த அவர்களின் துணைவியர் பலவண்ணக் குடைகளுடன் வந்திருந்தனர்.

சங்கத் தலைவர் மாத்யூஸ் K ஜேக்கப் கூட்டத்தில் கலந்துகொள்ள பல சங்க உறுப்பினர்களுடன் வந்திருந்தார். திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் ஹரிகிருஷ்ணன், இந்த சங்கம் 11 ஏக்கர் நிலத்தை ஒரு கோவிலிலிருந்து குத்தகை எடுத்துள்ளது என்று விவரித்தார். ஒரு விவசாயி மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர், ஓமனா குமார், அவர் உருவாக்கும் சிறப்பான விதைகளைப் பற்றி விளக்கினார். செல்லப்பன், ஒரு தொழிலாளி, புன்முறுவலுடன் எங்களுக்கு ருசியான இளநீர் பருகக்கொடுத்தார்.

சுமார் ஒரு டஜன் பெண் தொழிலாளர்கள் களையெடுக்கும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அவர்களின் இனிமையான இசை பசுமையான வயல்களின் ஊடே தவழ்ந்து வருகிறது. அவர்கள் ஒரு நாட்டுப்புற பாடலைப் பாடுகிறார்கள். அந்தப் பாடல் ஒரு அபரிமிதமான அறுவடையைக் கொடுக்கும் அந்தத் தெய்வத்தைப் புகழ்கிறது. இங்கு, அறுவடை காலம் 120 நாட்கள் ஆகும் - சில வயல்களில் 90 நாட்கள் மட்டுமே.

நிலத்தின் ஒரு மூலையில் மாட்டுச் சாணம், கோமியம், மற்றும் தூள் ராஜ்மா, பட்டாணி, மற்றும் வெல்லம் போன்றவற்றின் கலவையான இயற்கை உரம், பயிர்களின்களின் விளைச்சலைக் கூட்டுவதற்காக சேமித்து இரண்டு பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. இயற்கை மற்றும் ஆர்கானிக் மைக்கு இடையிலான வித்தியாசத்தை ஹரிகிருஷ்ணன் விளக்குகிறார். இங்கு நாம் செய்யும் இயற்கை விவசாயத்தில் நாம் நுண்ணுயிரிகளை வளர்க்கிறோம் பின்னர் அவற்றை மண்ணில் இடுகிறோம். அது நுண்ணிய ஊட்டச்சத்துக்கள், மற்றும் பயிர்க்கு நோய்கள் மற்றும் பூச்சிகளுக்கு எதிராக, மிகவும் அவசியமான நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கிறது.''

மேலும், எருவை உரமாக அல்லாமல் வளர்ச்சி ஊக்குவியாக அவர் குறிப்பிடுகிறார். ''சுபாஷ் பாலேகர் (இயற்கை பண்ணைபடுத்து தலை ஊக்குவித்த/பரப்பிய விவசாயி) உரம் என்ற வார்த்தையை எப்போதும் உச்சரிப்பதில்லை. அவர் நீங்கள் இயற்கையோடு எவ்வித குறுக்கீடும் செய்ய வேண்டிய அவசியமில்லை... என்று எப்போதும் சொல்லி வருகிறார். எனவே, குறைவான குறுக்கீடு, ஒரு தாராளமான, தரமான மகசூல். எனவே இது ஆர்கானிக் மைக்கு ஒரு படி மேல். நாம் இயற்கையான சூழலை விவ சாயத்தில் கொண்டு வருகிறோம்.



உண்மையில் மாற்றியமைக்கிறோம் அல்லது அசல் சுற்றுச்சூழலை மறுபடியும் அறிமுகப்படுத்துகிறோம்.

“இந்த குறிப்பிட்ட மண் இப்போது மாற்றப்பட்டு, ரசாயனப் பூச்சி க்கொல்லிகளிலிருந்து விடுபட்டுள்ளது. அதாவது புதிய நுண்ணுயிர்கள் நிலத்தை வளப்படுத்த வளர்கின்றன என்பதாகும்.”



இடது புறத்திலிருந்து: REAP தலைவர் பிஜுமோன் குரியன், AG சந்தோஷ் ஜார்ஜ் மற்றும் DG சுரேஷ் மேத்யூ.

### TRFக்கு ரூ.10

REAP அரிசிக்கு இருக்கும் பெருமளவிலான புகழ் மற்றும் தேவையைப் பார்த்து “அதன் விலையை கிலோ ஒன்றுக்கு ‘ரூபாய் 50லிருந்து ரூ.60 ஆக உயர்த்த உள்ளோம், மேலும் கிடைக்கும் கூடுதல் ரூ10ஐ ரோட்டரி அறக் கட்டளைக்கு கொடுக்கவிருக்கிறோம். நான் இந்த அரிசியை அமெரிக்காவிற் கும் ஏற்றுமதி செய்யவிருக்கிறேன். ஏற்கனவே நான் உறைந்த உணவு ஏற்றுமதி வியாபாரத்தில் இருக்கிறேன் என்பதால், எனக்கு ஏற்கனவே வழிமுறை சேனல்கள் உள்ளன.”

களைகளை எடுத்தவாறு பாடுகிற பெண்களுடன் நாங்கள் அரட்டை செய்கிறோம். ஜோத்பூரில் ஒரு செவிலியாக பணியாற்றிய பிரசன்னா, தனது இரண்டு குழந்தைகளுடன் மிகவும் இளம் வயதிலேயே வீட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று. நன்றாக ஹிந்தி பேசுகிறார். அவர், மற்ற தொழிலாளர்களுடன் சேர்ந்து, காலை 8 மணி முதல் 2 மணி வரை வேலை செய்கிறார் மற்றும் தினசரி ஊதியம் ரூ.400 பெறுகிறார். அந்த பணம் அவள் தன் கணவர் சிறிய பான் கடை மூலம் சம்பாதிக்கும் தொகையுடன் சேர்ந்துகொள்கிறது. திலகம்மா, மூன்று பிள்ளைகளின் தாயார், அவருடைய கணவர் ஒரு வர்ணம் தீட்டுபவர். “இந்த வேலைக்கு நன்றி, நாங்கள் சிறிது கூடுதல் வருமானம் ஈட்டுகிறோம்'' என்கிறார். கல்யாணி, பல பாரம்பரியக் கதையில் தழைத்தோங்கிய நாட்டுப்புற பாடலை அவர்களுக்கு கற்றுத்தந்த தலைவி. “ரோட்டேரியன்களின் இந்த முயற்சி அவளுக்கு மிகவும் தேவையான வேலையைக் கொடுத்துள்ளது'' என்கிறார்.



ரோட்டரியனர் கொடுத்த நாற்றுப் பைகளுடன் உள்ளூர் விவசாயிகள்.

நான் 1 கிலோ REAP அரிசி வேண்டும் என்கிறேன், அதற்கு குரியன் புன்னகைகிறார். “நீங்கள் இன்று மதிய உணவில் அதை சுவைக்கப்போகிறீர்கள்.'' மதிய உணவுக்காக ஹரிகிருஷ்ணனின் வீட்டிற்கு நாங்கள் சென்று சேர்ந்தோம்; அவரது மனைவி ஒரு மருத்துவர் மற்றும் அவர் பணிக்குச் சென்றுள்ளார். ஆனால், அவரது தாயாரின் வழிகாட்டுதலின் கீழ், மற்ற ரோட்டரி துணைவியர். அடுக்களையை தம் வசம் எடுத்துக்கொண்டனர். ருசியான, ஆடம்பரமான உணவு, நான் உண்ட சிறந்த உணவுகளில் ஒன்று. இந்த பிராந்தியத்தின் புகழ்பெற்ற கறி மீன் ஒரு புதிய பரிபூரணமாக தயாரிக்கப்பட்டிருந்தது. சாம்பார் மற்றும் பிற காய்கறிகள் REAP அரிசியுடன் முழுநிறைவாக்கியது.

மற்ற மாவட்டங்கள் அவரது கனவுத் திட்டத்தை ஜெராக்ஸ் எடுத்தது போல் செய்தனவா என்று நான் மாவட்ட ஆளுனரான மேத்யூவைக் கேட்டேன். ‘இதுவரை இல்லை; இருப்பினும், கேரளாவில் உள்ள பல அமைப்புகளையும், பல பஞ்சாயத்துகளையும் நாங்கள் ஊக்கப்படுத்தி இருக்கிறோம். அவர்கள், கலப்பு வித்துக்களுக்கு பதிலாக வயநாடு மற்றும் பாலக்காடு ஆகிய இடங்களிலிருந்து கொண்டு வந்த பாரம்பரிய வித்துக்களை, நாங்கள் உபயோகிப்பதைக் கண்டு ஊக்கமடைந்துள்ளனர். “இப்போது, பாசுமதி அரிசி விதைகள் குஜராத் திலிருந்து கொண்டுவரப்பட்டு அந்த அரிசியும் பயிரிடப்படுகிறது'' என்கிறார் கூடுதலாக. இங்கிலாந்திலிருக்கும் ஒரு ரோட்டரி சங்கத்திலிருந்து 20 உறுப்பினர்கள், கேரளாவில் ஒரு சங்கத்திற்கு வருகை புரிந்தவர்கள், REAP நெல் வயல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். “அன்று நெல் அறுவடை செய்யப்பட்டது, அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள், இதுதான் நாங்கள் இணைந்திருக்க மற்றும் கூட்டாளிகளாக இருக்க விரும்புகிற சரியான திட்டம், எனவே எங்களுக்கு மேலும் விவரங்களை அனுப்பவும்'' என்று அவர்கள் கூறியதாக மேத்யூ கூறுகிறார்.■

## District Wise TRF Contributions as on January 2018

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| | | | India | | | | |
| 2981 | 23,612 | 1,215 | 0 | 0 | 24,828 | 142 | 3.3% |
| 2982 | 34,322 | 70 | 2,725 | 0 | 37,117 | 170 | 6.3% |
| 3000 | 27,550 | 7,159 | 88,541 | 0 | 123,250 | 802 | 15.9% |
| 3011 | 63,420 | 314 | 44,262 | 0 | 107,997 | 178 | 5.9% |
| 3012 | 38,482 | 6,693 | 46,590 | 3,016 | 94,780 | 213 | 6.1% |
| 3020 | 23,121 | 9,961 | 19,950 | 42,478 | 95,510 | 72 | 1.7% |
| 3030 | 455 | 22,724 | 1,050 | 0 | 24,228 | 3 | 0.1% |
| 3040 | 3,432 | 0 | 26,185 | 0 | 29,617 | 26 | 1.2% |
| 3053 | 5,602 | 78 | 11,550 | 0 | 17,230 | 15 | 0.5% |
| 3054 | (1,414) | 102 | 212,650 | 0 | 211,338 | 6 | 0.1% |
| 3060 | 34,999 | 640 | 206 | 18,000 | 53,845 | 385 | 10.1% |
| 3070 | 28,124 | 148 | 24,219 | 789 | 53,281 | 144 | 4.9% |
| 3080 | 99,765 | 11,149 | 15,578 | 92 | 126,585 | 159 | 4.9% |
| 3090 | 508 | 0 | 0 | 0 | 508 | 2 | 0.1% |
| 3100* | 5,975 | 0 | 0 | 0 | 5,975 | 32 | 2.0% |
| 3110 | 63,302 | 2,848 | 60,631 | 0 | 126,781 | 157 | 4.1% |
| 3120 | 77,342 | 508 | 0 | 0 | 77,850 | 103 | 3.5% |
| 3131 | 195,807 | (3,900) | 240,333 | 58,094 | 490,333 | 576 | 11.3% |
| 3132 | 29,655 | 906 | 7,875 | 0 | 38,435 | 120 | 2.8% |
| 3141 | 382,353 | 14,120 | 353,008 | 8,785 | 758,266 | 571 | 11.2% |
| 3142 | 193,383 | 2,901 | 350 | (1,000) | 195,635 | 399 | 14.8% |
| 3150 | 44,450 | 11,357 | 9,050 | 61,000 | 125,857 | 244 | 6.8% |
| 3160 | 80,502 | 1,000 | 0 | 8,469 | 89,971 | 133 | 5.7% |
| 3170 | 21,182 | 7,789 | 17,707 | 0 | 46,678 | 267 | 5.0% |
| 3181 | 46,560 | 559 | 0 | 78 | 47,197 | 298 | 9.9% |
| 3182 | 36,775 | 0 | 20,843 | 0 | 57,618 | 342 | 10.9% |
| 3190 | 99,449 | 300 | 36,620 | 16 | 136,384 | 72 | 1.4% |
| 3201 | 77,185 | 6,991 | 131,298 | 15 | 215,490 | 139 | 2.7% |
| 3202 | 20,768 | 2,056 | 0 | 0 | 22,824 | 61 | 1.3% |
| 3211 | 53,429 | 0 | 0 | 43,846 | 97,275 | 67 | 1.6% |
| 3212 | 189,648 | 34,322 | 32,500 | 1,000 | 257,470 | 311 | 8.4% |
| 3231 | 52,913 | 462 | 61,250 | 20,000 | 134,625 | 67 | 2.7% |
| 3232 | 53,337 | 11,300 | 83,312 | 500 | 148,448 | 153 | 4.2% |
| 3240 | 58,602 | 325 | 0 | 555 | 59,481 | 216 | 7.4% |
| 3250 | 47,271 | 100 | 0 | 0 | 47,371 | 128 | 3.6% |
| 3261 | 23,769 | 100 | 0 | 0 | 23,869 | 90 | 3.8% |
| 3262 | 71,982 | 150 | 0 | 0 | 72,132 | 248 | 7.5% |
| 3291 | 47,714 | 24,973 | 58,789 | 4,639 | 136,115 | 44 | 1.2% |
| **India Total** | **2,355,328** | **179,419** | **1,607,072** | **270,372** | **4,412,191** | **7155** | **4.6%** |
| 3220 **Sri Lanka** | 63,835 | 10,293 | 6,940 | 1,217 | 82,286 | 156 | 8.2% |
| 3271 **Pakistan** | 28,971 | 34,888 | 1,050 | 0 | 64,909 | 70 | 4.9% |
| 3272 **Pakistan** | 10,477 | 577 | 0 | 1,000 | 12,054 | 48 | 1.7% |
| 3281 **Bangladesh** | 317,592 | 13,085 | 175,328 | 44,025 | 550,030 | 514 | 9.1% |
| 3282 **Bangladesh** | 78,164 | 1,691 | 500 | 1,000 | 81,354 | 339 | 9.0% |
| 3292 **Nepal** | 120,722 | 19,960 | 145,485 | 0 | 286,167 | 417 | 9.5% |
| **South Asia Total** | **2,975,087** | **259,913** | **1,936,376** | **317,615** | **5,488,990** | **8699** | **4.8%** |
| **World Total** | **67,397,651** | **21,550,948** | **8,944,796** | **14,170,047** | **112,063,442** | | |

** Non-districted*

*Source: RI South Asia Office*

# பெஞ்சுகள் : புருலியா குழந்தைகளுக்கு ஒரு புது அனுபவம்

ரோட்டரி நியூஸ் குழு

ஜனவரி 28 அன்று மேற்கு வங்காளத்தின் புருலியாவில் உள்ள பகத்பாரி ஆரம்ப பள்ளி மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் பள்ளிக்குச் சென்றனர், ஏனென்றால், அவர்கள் முதல் முறையாக பெஞ்சில் அமரப்போகிறார்கள், இதற்கு D 3291 RC கல்கத்தா மிட்சவுத்தின் திட்டப் பணிக்கு நன்றி.

“இந்த உற்சாகமடைந்த பிள்ளைகள் வகுப்பறைக்குச் சென்று பெஞ்சுகளில் பயபக்தியுடன் உட்காருவதைக் பார்த்தபோது, எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு சாதாரண பெஞ்சு கூட சொகுசுப் பொருளாக மாறமுடியும் என்பதை அதுவரை நாங்கள் உணரவில்லை. இவை நமக்கு எவ்வளவு பழகிப்போய் விட்டதென்றால், இது போன்றதை கவனிப்பது கூட இல்லை” என்றார் சங்கத்தின் கடந்த பிரசிடென்ட் ராமபிரசாத் நாக்.

1905 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தப் பள்ளி, சத்துணவிற்காக அந்தப் பகுதியில் பிரபலமடைந்தது. ஒரு முறை நாக் இந்தப் பள்ளியை பார்வையிடும் போது குழந்தைகள் அனைவரும் தரையில் அமர்ந்திருப்பதைப் பார்த்து பெஞ்ச் மற்றும் டெஸ்க்குகளின் அவசியத்தை உணர்ந்தார்.




RC பேட்டர்ஸே, ப்ரிக்ஸ்டன் - க்ளாஃபெர்ம், (லண்டன்) நிதியுதவி கிடைத்த பின்பு இத்திட்டம் நனவானது. அவர்கள் இணைந்து இப்பள்ளிக்கு ஏறக்குறைய ரூ.1 லட்சம் மதிப்புள்ள பெஞ்சுகளை லண்டன் சங்கத்தின் இண்டர்நேஷனல் ப்ராஜெக்ட் தலைவரான அமர் பாசு முன்னிலையில் வழங்கினர், அவர் இப்பள்ளிக்கு சிறப்பு வருகை தந்திருந்தார்.

இந்தச் சங்கம் தனது வெள்ளிவிழா ஆண்டை கொண்டாடும் போது, கடந்த 25 ஆண்டுகளாக புருலியாவின் பல பின் தங்கிய பகுதிகளிலும் அதைச் சுற்றியும் பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

---

# ரோட்டரி இண்டர்நேஷலின் அடிப்படைகள் குறித்து பயிலரங்கம்

ரோட்டரி நியூஸ் குழு



இரண்டு நாள் தாராபுரம் ரோட்டரி சங்கம், D 3202, ஏற்பாடு செய்திருந்த ரோட்டரி லீடர்ஷிப் இன்ஸ்டியூட்டில் (RLI) ஆறு பயிற்சியாளர்களின் மேற்பார்வையில், 25 பங்கேற்பாளர்கள் ரோட்டரி தொடர்பான பலதரப்பட்ட தலைப்புகளில் சுவாரஸ்யமாக கலந்துரையாடினர்.

மாவட்ட பயிற்சியாளர் PDG சகாதேவன் முன்னிலையில், மாவட்ட கவர்னர் P M சிவஷங்கரன் இந்த இன்ஸ்டியூட்டை துவக்கி வைத்தார். PDGs ரேகா ஷெட்டி (D 3232), நவமணி (D 3212), ஜார்ஜ் சுந்தரராஜ் (D 3202), மைதிலி முரளிதரன், சேஷாத்ரி மற்றும் கிருஷ்ணா ஆகியோர் மற்ற பயிற்சியாளர்கள்.

மை ரோட்டரி வேல்ர்ட், தொழில் மற்றும் பணியில் நன்னெறிகள், வியூகங்களை வகுத்தல் மற்றும் பகுத்தாய்வு, உறுப்பினர் சேர்க்கை, தொடர்பு மற்றும் குழு வடிவமைப்பு, ரோட்டரி ஃபவுண்டேஷன், பொது மக்களின் அபிப்பிராயம் மற்றும் தலைமைப் பண்புக்கானத் தகுதிகள் போன்ற தலைப்புகளில் பயிலரங்கத்தில் விவாதிக்கப்பட்டது. கேரளா மற்றும் தமிழ்நாட்டிலிருந்து பல பங்கேற்பாளர்கள் வந்தனர்.

ரோட்டேரியன் மைதிலி முரளிதரன், தனது எண்ணத்தை வெளிப்படுத்தும் போது, “ சமுதாய திட்டங்களை செயல்படுத்துவதில் அனுபவம் முதிர்ந்த கவர்னர்களுடன் கலந்துரையாடவும் அவர்களிடமிருந்து உத்வேகத்தைப் பெறவும் பங்கேற்பாளர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு,” என்றார். ரோட்டரி கிளப் பழயங்காடி, D 3202 ஐ சேர்ந்த ஹரீஷ், “எல்லா அமர்வுகளும் தகவல் நிறைந்தவை. அவர்களுடைய சிறந்த, சாதகமான தாக்கத்திலிருந்து இன்னும் வெளிவர முடியவில்லை, மேலும் பயிற்சியாளர்களின் குரல் எனது காதுகளில் எதிரொலித்துக் கொண்டு, அடுத்த அருமையான செயலுக்குத் தயாராகு, என என்னை தட்டிக்கொண்டிருக்கிறது. இவர்கள் அனைவருமே, இந்த அமைப்பின் மீதான என் நேசத்தை மென்மேலும் அதிகரிக்க காரணமாக உள்ளனர்.”

பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

# சாகசப் பெண்மணிகள்

ஜெய்ஸ்ரீ

நாம் காரை எடுத்துக் கொண்டு 10 கி.மீ. ஓட்டுவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடுகிறது. மூன்று பேர், அதுவும் பெண்கள், சும்மா ஒரு கிலோ மீட்டர் 2 கி.மீ. இல்லை, 26,800 கி.மீ. கோயம்புத்தூரிலிருந்து 24 நாடுகளில் 70 நாட்கள் பயணம் செய்து அசத்தியிருக்கிறார்கள்!

நம்ம ஊரில் மேடு பள்ளத்தைத் தான் சாலைகளில் பார்க்க முடியும். ஆனால், அவர்கள் பார்த்ததெல்லாம், பள்ளத்தாக்குகள், சமதளங்கள் மலைகள், பாலைவனங்கள், பனிப் பகுதிகள் என்று ஏதோ திரைப்பட ஷூட்டிங் ஸ்பாட்களைத் தேடுவதைப் போல் சுற்றியிருக்கிறார்கள். ஜாலியாக அல்ல, சாகசமாகத்தான்!

மூகாம்பிகா ரத்தினம், மீனாட்சி அரவிந்த், ப்ரியா ராஜ்பால் மூவரும்தான் அந்தப் பெண்கள். ருக்மணி சேகர் என்ற பெண்ணும் இந்த சாகசப் பயணத்தில் சேர்ந்திருப்பார். உடல் நலம் காரணமாக அவரால் பயணத்தில் பங்கேற்க முடியவில்லை.

அந்த மும்மணிகள் 'XPD 2470' என்னும் குழுவை உருவாக்கி, 70 நாள் சாகசப் பயணம் முடித்துவிட்டு, கடந்த ஆண்டு ஜூன் 5ம் தேதி பிரிட்டனைச் சென்றடைந்து, லண்டனில் இந்திய ஹைகமிஷனர் முன்னிலையில் நம் நாட்டின் தேசியக் கொடியை ஏற்றிக் கம்பீரமாகப் பெருமையைத் தேடித் தந்தார்கள்.

இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தக் கொண்டாட்டத்தின் நினைவாக பிரிட்டனில் நமது கொடியை ஏற்றி யதைப் பெருமையுடன் கருதுகிறோம். என்கிறார் மூகாம்பிகா ரத்தினம்.

### பயனும் பயணமும்

அதெல்லாம் கிடக்கட்டும், எதற்காக இப்படி ஒரு சாகசப் பயணத்தை மேற்கொண்டார்கள்? என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. இப்படி சாகசம் செய்தால், அதற்கு நல்ல காரியத்துக்குத்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா..?

TEACH என்ற சமூகப் பணித் திட்டத்தை ரோட்டரி இந்தியாவின் எழுத்தறிவு இயக்கம் (RILM) வகுத்துள்ளது. TEACH என்றால் வேறு ஒன்றுமில்லை

ஆசிரியரின் ஆதரவு (Teacher Support), இணையவழிக் கல்வி (E-learning), முதியோர் கல்வி (Adult Literacy), குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (Child Development), மகிழ்ச்சியான பள்ளி நிறுவனம் (Happy School). இவற்றின் ஆங்கில முதலெழுத்துகளைத் தொகுத்தால் கிடைப்பதுதான் TEACH என்ற சொல்.

இது எழுத்தறிவு இயக்கத்தின் மிகப் பெரிய பயணமாகும். சாகசம் செய்திருக்கும் இந்த மூன்று பெண்களை விட வேறு யாரும் மகளிர்க்கு அதிகாரமளிக்கும் பணியிலும் எழுத்தறிவு




**இடது புறத்திலிருந்து:** *மீனாட்சி அரவிந்த், ப்ரியா ராஜ்பால் மற்றும் மூகாம்பிகா ரத்தினம் பாரீஸில் உள்ள ஈஃபில் கோபுரம் முன்.*



*வலது புறத்திலிருந்து: மீனாட்சி அரவிந்த், மூகாம்பிகா ரத்தினம், K.A. குரியச்சன் மற்றும் RC ஆக்ருதியின் தலைவர் லீமா ரோஸ் மார்டின் PRIP ஜான் ஜெர்முடன் சென்னையில் நடந்த ரோட்டரி எழுத்தறிவு மாநாட்டில்.*



இயக்கத்திலும் இப்படி ஒரு தீவிரம் காட்டியிருக்க முடியாது என்று இந்த XPD 2470 குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளர் முன்னாள் ரோட்டரி மாவட்ட ஆளுநர் (PDG) K.A. குரியச்சான் தெரிவித்தார். இந்த முயற்சியின் மூலம் அவர்கள் ரூ. 5 லட்சம் திரட்டியிருக்கிறார்கள். இந்த நிதி பள்ளிப் படிப்பில் இடைநின்ற 200க்கும் மேற்பட்ட சிறுவர்களை மீண்டும் பள்ளிப் படிப்பில் ஈடுபடுத்தியுள்ளது.

இந்த சாகசப் பயணத்திற்கு மொத்தம் ரூ. 60 லட்சம் ஆயிற்று. D 3201 யின் ஆக்ருதி ரோட்டரி சங்கம், கோயம்பத்தூர் டெக்ஸிட்டி ரோட்டரி சங்கம் ஆகியவற்றுடன் ராமகிருஷ்ணா குழும நிறுவனங்கள், ரூட்ஸ், CRI பம்ப் மற்றும் சில பரோபகாரிகள் கைகொடுத்து உதவியுள்ளனர்.

காரில் பயணம் செய்ததால், எரிபொருள் செலவு, வாகனத்தைப் பராமரித்தல், கட்டணம், உணவு, தங்குவதற்கான செலவுகள் ஆகியவை மட்டுமின்றி, சர்வதேச டிரைவிங் அனுமதி, 11 நாடுகளின் விசாக்கள், லண்டனிலிருந்து இந்தியாவுக்கான விமான பயணக் கட்டணங்கள், டிராவல் ஏஜெண்டுகளுக்குத் தரவேண்டிய கட்டணம் ஆகிய செலவுகளும் ஏற்பட்டன என்று மூகாம்பிகா கூறினார்.

இவர்கள் செல்வதற்கான வாகனத்தை டாடா மோட்டார்ஸ் நிறுவனம் வழங்கியுள்ளது. ஹெக்ஸா என்ற SUV காரைத்தான் ஓட்டிக்கொண்டு பயணம் செய்தனர். கூடவே, இந்தக் காரைப் பழுதுபார்ப்பதற்கான பயிற்சியையும் இவர்கள் புனே டாடா ஆலையில் பெற்றனர்.

லண்டனில் சாகசம் முடிந்த பிறகு, அந்தக் கார் கப்பல் மூலம் புனே நகருக்கு அனுப்பப்பட்டது.

இந்தக் காரில் கடினமான நிலத்தில் சிரமமின்றி ஓட்டுவதற்காக அதி நவீன 19 அங்குல டயர்கள் பொருத்தப் பட்டுள்ளன. மேலும், உபரியாக இரு சக்கரங்களும் காரில் பொருத்தப் பட்டன. இவை தவிர, தேவையான அளவுக்கு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், இதர உதிரி பாகங்களும் காரில் வைக்கப்பட்டிருந்தன.

நல்ல காலமாக அவை எதையும் நாங்கள் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை வரவேயில்லை என்றார் மூகாம்பிகா.

### உலக நாயகிகள்!

XPD 2470 குழுவின் பயணத்தை கோயம்புத்தூரில் கடந்த ஆண்டு மார்ச் 26ம் தேதி உள்ளாட்சித் துறை அமைச்சர் S.P. வேலுமணி கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். பிற மாநிலங்களைச் சேர்ந்த பலரும் பங்கேற்று மிக உற்சாகம், ஆரவாரத்துடன் இந்தப் பயணிகளுக்கு வழியனுப்பி வைத்தனர்.

மகளிர் நிகழ்த்தும் சாதனையைப் போற்றும் வகையில் புதுச்சேரியில் துணை நிலை ஆளுநர் கிரண் பேடி கொடியசைத்து வழியனுப்பினார். அதைப் போல் மணிப்பூர் மாநில ஆளுநர் நஜ்மா ஹெப்துல்லா இம்பால் நகரில் வழியனுப்பிவைத்தார். அதுதான் நாட்டின் எல்லை மாநிலம்.

அவர்கள் மியான்மர், சீனா, கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், ரஷ்யா, பெலாரஸ், போலந்து, ஸ்லாவாகியா, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா, மேசடோனியா, செர்பியா, குரேஷியா, செக் குடியரசு, ஸ்வீட்சர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து என்று பயணத்தைத் தொடர்ந்து, ஜூன் 5ம் தேதி லண்டனைச் சென்றடைந்தனர்.

### மகளிர் மூன்று, சாகசம் ஒன்று :

இந்த சாகசப் பயணத்தில் ஈடுபட்ட மூன்று பெண்களும் சாதாரணமான வர்கள் அல்ல. மீனாட்சி அரவிந்த் (45) கோவையைச் சேர்ந்த தொழில்முனைவோர் ஆவார். இவர்தான் குழுவின் தலைவி. பொள்ளாச்சியைச் சேர்ந்த மூகாம்பிகா ரத்தினம் (38) விவசாயத் தொழில் செய்வதுடன் யோகா பயிற்றுவிப்பவராகவும் இருக்கிறார். ப்ரியா ராஜகோபால் (55) மும்பையைச் சேர்ந்தவர். சாகசம் இவரது மூச்சு.

இவர்களில் மீனாட்சி அண்மையில் தாய்லாந்தில் சாலைவழியே பயணம் செய்து முடித்தவர். இவர் ஆன்லைன் மூலம் உலகப் பயணத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதற்கு மூகாம்பிகா, ப்ரியா, ருக்மணி ஆகிய மூவர் பதில் அனுப்பியிருந்தனர். அதையடுத்து, எந்த வழியாகப் பயணம் செய்வது என முடிவாயிற்று. நான் தனி ஒருத்தியாக நம் நாடு முழுவதும் பயணம் செய்பவள். கடல் தாண்டிச் செல்வதற்கு முன் நம் நாட்டை நன்றாக தெரிந்துகொள்ள ஆராயவேண்டும் என்பதே என் நோக்கம். ஆனால், மீனாட்சியின் திட்டம் என்னைக் கவர்ந்தது. இப்படி ஒரு பயணம் மேற்கொள்ளப் போகிறேன் என்று சொன்னதும் என் அம்மா உற்ச ாகம் ஊட்டினார் என்றார் மூகாம்பிகா. இத்தனைக்கும் அவருக்கு 7 வயதில் மகள் இருக்கிறாள்.

ஆரம்பத்தில் முகாம்பிகாவின் விசா மூன்று முறை நிராகரிக்கப் பட்டுவிட்டது. காரணம், அவரது வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லை என்பதுதான்.

நம்ம தொழில் விவசாயம். அதிலே பணம்தான் கைகளில் புரளும். நல்ல காலம் நம்ம நேரம் பண மதிப்பிழப்பை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். எனக்கு நல்லதாகப் போயிற்று. எல்லாப் பணப் பரிமாற்றமும் ஆன்லைன் மூலமாகவே இருந்ததால், கணக்குக்கும் ரெகார்டு கிடைத்தது. வங்கியில் பணம் கையிருப்பும் அதிகரித்தது. பெரிய போராட்டத்துக்குப் பின் விசாவும் கிடைத்தது என்றார் அவர்.

XPD 2470 பயணம்தான் மிகப் பெரிய, நீண்ட சாகசப் பயணமாகும். எந்த ஊர்களின் வழியாக இந்தப் பயணத்தை மேற்கொள்வது.. எந்தெந்த நாடுகளில் எனனென்ன நடைமுறைகள் இருக்கின்றன என்பதை மீனாட்சி ஓராண்டு ஆராய்ச்சி செய்து திட்டத்தை வகுத்தார். எங்களது பயணத்தில் ஒவ்வொரு மணியையும் மிகவும் கவனமாகத் திட்டமிட்டோம். கொஞ்சம் தாமதமானாலும் திட்டத்தில் சொதப்பல் ஏற்படக் கூடும். என்றார் மூகாம்பிகா.

இந்தப் பயணத்தில் அச்சமூட்டும் வகையில் ஏதாவது நடந்திருக்கிறதா? என்று மூகாம்பிகாவைக் கேட்டேன். அதற்கு ஆரம்பத்திலிருந்து தோள்கொடுத்து வந்த ஒருங்கிணைப்பாளர் குரியச்சன், இப்படி ஒரு பயணம் பற்றி பல நண்பர்களிடம் கூறியபோது, பரிகாசம் செய்தனர். எல்லோரும் இளைஞர்கள், எந்த நேரத்திலும் இந்தப் பயணத்தையோ முடிவையோ மூன்று பெண்களும் கைவிடக் கூடும். பிறகு உங்களுக்குத் தர்ம சங்கடமாகிவிடும் என்று எச்சரிக்கை செய்தனர்.

ஆனால், அதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. எனக்கும் கொஞ்சம் தயக்கம் லேசாக இருந்தது. அந்தப் பெண்கள் மூவரும் இதற்கு முன் சந்தித்ததில்லை. இருந்தாலும் நல்ல நண்பர்களாகவே இருந்தனர். எது எப்படியோ எல்லாம் வெற்றிகரமாகவே நடந்து முடிந்திருக்கிறது என்றார் அவர்.

இதையெல்லாம் கேட்டுக் கொண்ட மூகாம்பிகா, லேசான புன்முறுவலுடன், எங்களுக்குள் காரசார விவாதம் கூட நடந்திருக்கிறது. அற்ப விஷயங்களுக்கெல்லாம் கூட முரண்பாடான கருத்துகள் நிலவின. ஒரே இடத்தில் வெவ்வேறு நபர்களை அடைத்துவைத்தால் இப்படியெல்லாம் மன நிலையில் மாற்றம் ஏற்படக்கூடும். எனினும் சில விதிகளை வகுத்துக் கொண்டோம். உதாரணத்திற்கு, யார் கார் ஓட்டுகிறார்களோ அவர்கள் விரும்பும் பாட்டுதான் ஒலிக்கப்படவேண்டும் என்பன போன்ற விதிகள் உண்டு. பொறுமை, சகிப்புத் தன்மை ஆகியவற்றை இதனால் கற்றுக்கொண் டோம், என்றார் மூகாம்பிகா.



லண்டனில் இந்திய துணை ஹை கமிஷனர் தினேஷ் பட்நாயக் மற்றும் ஒருங்கிணைப்பு மந்திரி A.S. ராஜாவுடன் PDG T. ஜார்ஜ் சுந்தரராஜ், பாலக்காடு கிழக்கு சங்கத்தின் உறுப்பினர் சத்வந்த் சிங், PDG K.A. குரியச்சன் மற்றும் சத்வந்த் சிங்கின் துணைவி உமாவும் உள்ளனர்.

**சவால்கள்**

சீனாவிலிருந்து கிரிகிஸ்தான் செல்வதற்கு இர்கிஸ்தாம் கணவாய் வழியாகத்தான் வெளியேற முடியும். மாறாக, எங்களது கெய்டு தவறாக டோர்கட் கணவாய் வழியே அழைத்துச் சென்றுவிட்டார். அந்தப் பாதை கடல் மட்டத்திலிருந்து 13,000 அடி உயரத்தில் அமைந்திருந்தது. திடீரென்று பனிப்புயல் தாக்கியது. திக்குமுக்காடிப் போனோம். பனிப்பாதையில் காரைச் சமாளித்து ஓட்டுவதற்கு, காரில் பனிப் பாதைக்கு ஈடுகொடுக்கும் டயர்கள் எங்களிடம் இல்லை. வேறு வழியில்லாமல் அங்கேயே தங்க நேர்ந்தது. மூன்று நாடுகளின் எல்லைப் புறத்தில் அமைந்த இடத்தில் 10 அடிக்கு 10 அடி அறையில் மூன்று பேரும் தங்கினோம். வெளியே குளிர் 18 டிகிரி. எல்லைப் பகுதிகள் மூடப்பட்டிருந்தன. அடுத்த நாள் காலையில், காரை ஸ்டார்ட் செய்ய முடியவில்லை. காரணம், என்ஜின் உறைந்துவிட்டது. எரிபொருள் கெட்டியாகிவிட்டது. திணறிப் போனோம்.. என்றார் அவர்.

குவாஹத்தியிலிருந்து இம்பாலுக்குச் சென்ற பாதையும் கடுமையானது. கைகளால் சைகை காட்டுவது சாலையின் சிக்னல்களை புரிந்துக்கொள்ள முடியாமல் தவித்தோம். ஒரு நாளில் 6 மணி நேரம் மட்டுமே கார் ஓட்டினோம். பருவ நிலை மிகவும் வித்தியாசமானது. சுமார் 30 டிகிரி செல்சியஸில் காரை ஓட்டிச் செல்வோம். இரவு நேரம் ஓரிடத்தை அடையும்போது, மைனஸ் 16 ஆக இருக்கும். பகலில் வெப்பம், இரவில் படு குளிர். இப்படித்தான் நாட்களைக் கழித்தோம் என்றார் மூகாம்பிகா.

**நாட்டுக்கு நாடு வாசல்படி**

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான அனுபவங்கள், அதிசயங்களைச் சந்தித்தனர். சீனா, மியான்மர், கிர்கிஸ்தான் நாடுகளில் பயணம் செய்யும்போது, கெய்டு துணைக்கு எடுத்துக் கொண்டாகவேண்டும் என்பது விதிமுறை. உஸ்பெகிஸ்தானில் டீசல் கள்ளச் சந்தையில் கிடைக்கிறது. காரணம், அங்கே எல்லா வாகனங்களும் திரவமாக்கப்பட்ட மீதேன், ப்ரோபேன் ஆகிய எரிவாயுவில்தான் ஓடுகின்றன.

சீனாவில் கார் ஓட்டவேண்டுமானால், அந்நாட்டின் தற்காலிக டிரைவிங் லைசென்ஸ் மற்றும் உள்ளூர் நெம்பர் பிளேட்டும் வைத்திருக்க வேண்டும். உள்ளூர் டிராவல் ஏஜென்சி நிறுவனம் வகுத்துத் தந்த பயணத்தைத்தான் நாம் மேற்கொள்ள வேண்டும்.

மியான்மரில் நமது காரை அந்நாட்டில் பதிவுசெய்த பிறகே சாலையில் ஓட்ட வேண்டும். இப்படி நாட்டுக்கு நாடு வாசல்படி. தாய்லாந்தில் நமது காரை நாமே ஓட்டவேண்டுமானால் சிறப்பு அனுமதியைப் பெற வேண்டும். பாங்காக் நகரில்தான் உரிய பர்மிட் வாங்க வேண்டும். அதற்கு மூன்று வாரங்கள் ஆகும். ஆனால், எங்களுக்கு ஓர் சிக்கல். நாங்கள் வாங்கிய விசாக்கள் குறிப்பிட்ட காலத்துக் குத்தான். அதையும் முன்கூட்டியே வாங்கிவிட்டோம். இப்படி தாமதம் ஆனால் என்ன செய்வது என்று குழப்பம். இன்னொரு சோதனை, தாய்லாந்து நாட்டில் சோங்க்ரான் என்ற புத்தாண்டு கொண்டாட்டத்தை ஒட்டி, 10 நாள் கடைகள், அலுவலகங்களுக்கு விடுமுறை. என்ன செய்வது. பர்மிட் கிடைக்காவிட்டால், மூட்டை கட்டிக்கொண்டு தாய்நாட்டுக்குத் திரும்ப வேண்டியதுதான் என்று கவலைப்பட்டோம்.



சீனாவில்

இந்திய தூதரக அலுவலகத்தைத் தொடர்புகொண்டு நண்பர்களைத் தொடர்பு கொண்டு உதவி கோரினோம். கடைசியில் கோயம்புத்தூரில் ஒரு நண்பருக்கு தாய்லாந்து துணைப் பிரதமர் நல்ல பழக்கம் என்பதால் உதவ முன்வந்தார். எங்கள் அதிர்ஷ்டம் துணைப் பிரதமர் அலுவலகம் உதவியதால் 24 மணி நேரத்தில் பர்மிட் எல்லாம் கிடைத்துவிட்ட பிறகு நிம்மதியாக மூச்சை விட்டோம். இருந்தாலும் இந்த களேபரத்தில் நான்கு நாள் வீணாகி விட்டது. காலத்தை மிச்சப்படுத்துவதற்காக தாய்லாந்தைச் சுற்றிப் பார்ப்பதைக் கைவிட்டோம். சீனாவை நோக்கிப் புறப்பட்டோம்.

உஸ்பெகிஸ்தானில் அவர்களுக்குக் ஓர் அதிசயம் காத்திருந்தது.

அங்கே நம்ம மூன்று பெண்மணிக்களுக்கும் ராஜ மரியாதை. காரணம் கேட்டால் வியப்பாக இருக்கும். இவர்கள் மூன்று பேரும் உஸ்பெகிஸ்தான் சென்றதும் அவர்களிடம் அறிமுகம் செய்துகொள்வதற்காக, நாங்கள் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறோம் என்ற உடனே அவர்கள் கேட்ட கேள்வி: ஓ! நீங்கள் ராஜ்கபூர் மண்ணிலிருந்துதானே வந்திருக்கிறார்கள். என்று கூறிவிட்டு, ராஜ்கபூர் திரைப்படப் பாடல்களை இசைத்து, பலத்த வரவேற்பு கொடுத்தார்கள். பட்ட கஷ்டத்துக்கு இது மிகவும் ஆறுதலாக இருந்தது.

ஹங்கேரி நாட்டில்தான் நாங்கள் நீண்ட நேரம் பயணம் மேற்கொள்ள நேர்ந்தது. தலைநகர் புடாபெஸ்ட்டிலிருந்து புகாரெஸ்ட் நகரைத்தான் வேகமாகக் கடந்தோம். இரு நகரங்களுக்கும் இடையில் மொத்தம் 893 கி.மீ. தூரம். ஒரு நாளில் சராசரியாக 550 தொலைவு என்ற விகிதத்தில் கடந்தோம். ஆனால், கிரிகிஸ்தானில் நாளொன்றுக்கு 250 கிமீ தூரத்தைத்தான் கடக்க முடிந்தது. காரணம், சாலைகள் ரொம்ப மோசம்.

இந்த சாகசப் பயணத்தில் உறுதுணையாக இருந்தது தொழில்நுட்பம்தான். அவர்கள் வைத்திருந்த, செயற்கைக்கோள் வழி தொடர்புடைய கருவிதான் (gadget). (மடிக்கணினி, கைபேசி ஆகியவற்றுக்கு இணையத் தொடர்பு அளிப்பதற்கான ஹாட் ஸ்பாட் கருவியாக அது செயல்பட்டது) அது 200 நாடுகளில் வைஃபை இணைப்பு கிடைக்கக் கூடியது. ஆனால், தினமும் அதற்குச் செலுத்தவேண்டிய கட்டணம் 80 அமெரிக்க டாலர். இது போதாதா, எங்களது சமூக வலைதளங்களில் உடனுக்குடன் எங்களது பயணம், அனுபவம் எல்லாவற்றையும் பதிவேற்றி வந்தோம். உலகமே அறிந்துகொண்டது. குடும்பத்தினருக்கும் நாங்கள் எங்கேயெல்லாம் எப்படியெல்லாம் பயணம் செய்கிறோம் என்பது தெரிந்தது. அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடவேண்டாமா என்று அவர்கள் உற்சாகமாகக் கூறினர்.

சாகசப் பயணம் வெற்றிகரமாக முடிந்த பிறகு, தங்களை உலகம் முழுவதும் சுமந்து சென்ற காரை லண்டனிலிருந்து பத்திரமாக கப்பலில் ஏற்றி, தாய்நாட்டுக்கு வழியனுப்பினர். அதற்கெல்லாம் சர்வதேச சுங்க நடைமுறைகள், ஏற்றுமதி-இறக்குமதிக்கான ஆவணங்கள் என எல்லா சட்ட நடைமுறைகளும் தேவை. ஒவ்வொரு நாட்டின் எல்லையிலும் உரிய ஆவணங்களை ஸ்டாம்ப் இட்டுப் பெற்று வைத்துக் கொண்டனர்.

இத்தனை சிரமங்களுக்கு இடையிலும் சொல்லி வைத்த மாதிரி ஜூன் 5ம் தேதி லண்டனில் கால் வைத்தனர் என்றார் குரியச்சன். அவருடன் திட்ட தலைவர் கிருஷ்ணராஜ், ஆக்ருதி ரோட்டரி சங்கத் தலைவர் லீமா ரோஸ் மார்ட்டின் ஆகியோர் அந்த சாகசப் பெண்கள் மூவரையும் லண்டனில் வரவேற்று விழா நடத்தி அசத்தினர். இதற்கு முன்னோடியாக, ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் ஜான் ஜெர்மை சென்னையில் ரோட்டரி எழுத்தறிவு மாநாட்டில் சந்தித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

லீமா தாயைப் போல எங்களைக் கவனித்துக் கொண்டார். அதை மறக்கவே முடியாது. ஒவ்வொரு தினமும் காலையில் எங்களுடன் தொடர்புகொண்டு எப்படி இருக்கிறீர்கள். எங்கே இருக்கிறீர்கள் என்று குறுஞ்செய்தி அனுப்பி விசாரித்தபடியே இருந்தார். நெகிழ்ச்சியாக இருந்தது.

நாங்கள் பயணித்த இடங்களில் பல தரப்பட்ட மக்களைச் சந்தித்து வியந்து போனோம். இதில் நாங்கள் கற்றுக் கொண்டது ஏராளம் என்று உற்சாகமும் உணர்ச்சியும் பொங்கியபடி கூறி முடித்தார் முகாம்பிகா.■

# கழிவு - அதனைக் கழுவு!

ராகேஷ் பாட்டியா

இந்தியர்கள் வெளிநாட்டுக்குப் போய்த் தங்கும்போது, அங்கே கழிவறையில் குழாய் இருக்கிறதா என்று கேட்பதில்லை. மாறாக, மேலை நாட்டினரைப் போல காகிதத்தில் துடைப்பதையே செய்கிறார்கள். அது மட்டுமின்றி, துடைத்த காகிதத்தை கழிவுத் தொட்டியில் போட்டு நீர் பாய்ச்சாமல், அங்குள்ள குப்பைத் தொட்டியில் போட்டுவிடுகிறார்கள். கழிவுத் தொட்டியில் போட்டால் எங்கே சாக்கடை அடைத்துக் கொள்ளுமோ என்ற தயக்கம்தான் காரணம்.

அதைப் போல் இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு விருந்தினர்களின் வசதிக்காக கழிவறைகளில் டிஷ்யூ காகிதச் சுருள் போதிய அளவு இருக்கிறதா என்று உறுதி செய்துகொள்கிறார்கள். அவர்கள் கழிவறையைப் பயன்படுத்தும்போது, இந்திய சுகாதார வழியைப் போல் நீரைப் பாய்ச்சிக் கழுவும்படி கேட்டுக் கொள்வதுமில்லை. அப்படி யோசனை சொல்லவும் சங்கடப்படுகிறோம்.

உண்மையில், கழிவறையில் காகிதத்தால் மேலை நாட்டவரைப் போல் துடைப்பதை விட, நீர் பாய்ச்சி கழுவுவதே நல்லது ஆரோக்கியமானது. கழுவுவதைப் போல் துடைப்பது பலன் தருவதில்லை. துடைத்தாலும் முழுமையான சுத்தம் இருக்காது. தண்ணீரைப் போல் பின்புறத்தை ஒரே முறையில் சுத்தமாக்குவது வேறு எதுவும் இல்லை.

இந்தியர்கள் இதுபோல் கழுவும் பழக்கத்தை முன்னோர்களிடமிருந்து கற்றிருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இடக்கையைக் கழுவுவதற்கும், வலக்கையை சாப்பிடுவதற்கும் பயன்படுத்துவது நாம் கற்றது ஆகும். இன்றைய நவீன இந்தியாவில் கைக்குழாயைப் பயன்படுத்தி சுத்தமாக்கிக் கொள்கிறோம். இது மிகவும் ஆரோக்கியமானது, சுகாதாரமானது. காகிதத்தையும் மிச்சப்படுத்துகிறது. கழிவுப் பாதையில் அடைப்பு ஏற்படும் கவலையும் இல்லை. சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பு தருகிறது. கிருமிகள் தொற்றுவதும் குறைவு.

சுகாதாரப் பணியாளர்களும் மருத்துவர்களும் இப்படிக் காகிதத்தால் துடைப்பதால் ஆசனவாய்ப் பகுதியில் கழிவின் துளி தங்கிவிடும் வாய்ப்பு உள்ளது. இதனால், அங்கு கிருமிகள் தோன்றும். சிறுநீர்ப் பாதையில் கிருமித் தொற்று ஏற்படும். இதனால், கிருமிகள் உடல் முழுவதும் பரவும் அபாயமும் உண்டு.

அதே சமயம் நீரால் நன்கு கழுவினால், எல்லாமே அடித்துச் செல்லப்படும். உடல் உறுப்புகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கும். பின்புறம் நீரைப் பாய்ச்சுவதால் குடல் இயக்கமும் சுமுகமாக இருக்கும். ஒரு கிராம் மனிதக் கழிவில் ஒரு கோடி கிருமிகள் இருக்கின்றன. பத்துலட்சம் பாக்டீரியா கிருமிகள் நூறு புழுக்களின் முட்டைகளை உற்பத்தி செய்யும்.

துடைப்பது அழுக்கு. மேலும், அடிக்கடி கைகளும் மாசு படும். துடைப்பதற்கான காகிதம் வெள்ளை வெளேர் என்று இருப்பதற்குக் காரணம் அது குளோரின் பயன்படுத்தி, ப்ளீச்சிங் செய்யப்படுவதுதான். குளோரின் ப்ளீச்சை உடலில் தடவினால் என்ன ஆகும்? ஆபத்துதானே! உடம்பில் அது சேர்ந்து விட்டால், ஏகப்பட்ட உடல்நலக் கோளாறுக்கு வழியமைத்துவிடும்.

ரோட்டரி அமைப்புக்கு கழுவுதல் (WASH) என்பது மிகவும் பரிச்சயமான சொல்லாகும். அந்தச் சொல்லை உலகுக்கே கற்பித்து, அதைக் கழிவறையில் பயன்படுத்தி, நல்ல மாற்றத்தை உணர வேண்டும்.

*கட்டுரை ஆசிரியர் டி 3291 பேலூர் ரோட்டரி சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.*



# பரூச்சில் வீதி வேடிக்கை

*ரஷீதா பகத்*




பொதுவாக குஜராத்திகள் குளிர்காலத்தை வித்தியாசமாக வரவேற்பார்கள். காலை நேரத்தில், அந்நாள் முழுக்க உடலை வெது வெதுப்பாக வைத்துக் கொள்ளும் உணவுகளை உண்டு மகிழ்வார்கள். பசுமையான பூண்டு இலைகள், இனிப்பு — ஆம், இனிப்பே தான், இவர்கள் குஜராத்திகள் அல்லவா! — வெந்தயம், வெல்லம், கம்பு ரொட்டி என பலதும் அவ்வுணவுகளில் அடங்கியிருக்கும்.

என்றாலும், கடந்த இரண்டு வருடங்களைப் போலவே இந்த வருடக் குளிர் காலத்தையும் பரூச் நர்மதா நகரி ரோட்டரி சங்கம், D3060, குஜராத்தில் வித்தியாசமாகக் கொண்டாடத் தீர்மானித்தது, அதற்காக 'ரோட்டரி நிதமால் கல்லி' (Rotary ni Dhamal Galli) அல்லது ஸ்ட்ரீட் ஃபன் (Street Fun) என்ற பெயரில் ஒரு புதுமையான நிகழ்ச்சியை நடத்தத் திட்டமிட்டது!

''குளிர்காலக் காலைப் பொழுதில் நிறைய மக்களை நகரின் ஒரு பிரதான இடத்தில் ஒன்றுகூட்டி வேடிக்கை விளையாட்டும், நட்பும் மிகுந்த சூழலை வழங்க இந்தத் திட்டத்தை வகுத்தோம். மக்கள் மனதில் ரோட்டரியின் அடையாளத்தைப் பதிய வைப்பதும், ரோட்டரி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி, சமூக அளவில் அதைப் பிரபலப்படுத்துவமே இதன் நோக்கம்'' என்று சங்கத்தலைவர் பூனம் சேத் கூறினார்.

எனவே இந்த வேடிக்கை விளையாட்டு மற்றும் PR நிகழ்ச்சிக்காக பரூச்சின் ஒரு கலகலப்பான, பலரும் நடமாடிக் கொண்டிருக்கிற வீதியைத் தேர்ந்தெடுத்தோம். ''பரூச் போலீஸ், நகராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் சிறப்பு அனுமதி பெற்று, அவர்களின் ஒத்துழைப்புடன் அந்தச் சாலையை அடைத்தோம், போக்குவரத்து வேறு பாதையில் திருப்பி விடப்பட்டது'' என்றும் அவர் கூறினார்.

ஏராளமானவர்களை, குறிப்பாக இளைஞர்களை, ஒன்றுதிரட்டும் நோக்கில் ஞாயிறு காலை இதை ஏற்பாடு செய்திருந்தோம், நிறைய வேடிக்கை விளையாட்டுக்கள் திட்டமிடப்பட்டன. ஜும்பா நடனம், கார்பா, ராக் இசைக் குழுக்கள் எல்லாம் நிகழ்ச்சிக்குக் கலைநயத்தைச் சேர்த்தன.

கில்லி தண்டா, பட்டம் பறக்க விடுதல், டக் ஆஃப் வார், கோலி குண்டு, டயர் ஓட்டுதல், தெரு கிரிக்கெட், மருதாணி போடுதல், தெருக்கூத்து நாடகங்கள் போன்ற பாரம்பரிய நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. உணவு ஸ்டால்களை அமைக்குமாறு பள்ளிக் குழந்தைகள், இண்டராக்டர்கள் (Interactors) மற்றும் ரோடராக்டர்கள் (Rotaractors) உள்ளிட்ட இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியை நடத்துவதில் இண்டராக்ட் மற்றும் ரோடராக்ட் தவிர, கிளீன் பரூச் கிரீன் பரூச் (Clean Bharuch Green Bharuch), சீனியர் சிட்டிஸன்ஸ் கிளப் ஆஃப் பரூச் (Senior Citizens Club of Bharuch), பரூச் அகர்வால் சமாஜ் (Bharuch Agarwal Samaj), ஆர்ட் ஆஃப் லிவிங் ஃபவுண்டேஷன் பரூச் (Art of Living Foundation Bharuch), அஸ்மிதா ஸ்கூல் ஃபார் மெண்டல்லி சேலஞ்டு சில்ரன் (Asmita School for mentally challenged children) போன்ற NGOகளும் பங்குகொண்டனர்.

சுமார் 2,500 பேர் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் ரோட்டரி பற்றியும், அதன் மனிதாபிமான நலத்திட்டங்கள் பற்றியும் நிறைய தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஜனவரி 28 ஆம் தேதி போலியோ NID இருப்பதை முன்னிட்டு, அங்கே போலியோ பூத் அமைக்கப்பட்டது, அதில் சுமார் 70 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டது.■



குழந்தைகளுக்கான ஓவியப்போட்டி.

# இரண்டு முன்னாள் RI தலைவர்கள் DGE-களின் மனதைக் கொள்ளை கொண்டனர்

*ரஷீதா பகத்*

இந்த ஆண்டு ஜனவரி மாதம் சான் டீகோவில் நடந்த இண்டர்நேஷனல் அசெம்பிளியில் (International Assembly) இரண்டு முன்னாள் பன்னாட்டு ரோட்டரி தலைவர்கள் — ஜான் ஜெர்ம் மற்றும் K R ரவீந்திரன் அசத்தலான உரைகளை ஆற்றினர்.

IA எல்லா புதிய ஆளுனர்களுக்கும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி என்றாலும், ஒவ்வொருவரும் அதன் வெவ்வேறு தருணங்களை வெவ்வேறு விதமாக உணர்ந்து புரிந்து கொண்டனர் என்று தன் பேச்சைத் தொடங்கிய ரவீந்திரன், இதை இவ்வாறு விளக்கினார்: ''இது எண்ணற்ற வண்ணங்களைக் கொண்ட எண்ணற்ற நூல்களால் வேயப்பட்ட ஒரு வண்ணக்கோல ஆடையின் பல்வேறு கூறுகள் போன்றது. தலைமை நெச வாளர் உயரமான இடத்தில் உட்கார்ந்து இந்த வண்ணக்கோல ஆடை நெய்யப்படுவதை கண்காணிக் கிறார், எனவே அவர் மட்டுமே அதன் சம்பூரண அழகைக் கண்டு ரசிக்க முடியும்.'' எனினும் அரிய சந்தர்ப்பங்களில் சில மனிதர்களும் கூட 'நம் கைகள் படைத்த கனியைக் கண்டுகளிக்கும் பாக்கியத்தைப் பெறுகின்றனர்''.


பிறகு ரவீந்திரன், மங்கோலியாவில் ஜச்சாரி என்ற ஒரு பச்சிளங் குழந்தையின் உண்மைக் கதையை DGEகளுக்குச் சொன்னார். அதில் தானும் பிற ரொட்டேரியன்களும் எப்படி தனித்துவமாகப் பங்காற்றினர் என்பதைக் கூறிக்காட்டினார். ஒரு துரதிஷ்டவசமான நாளில், அந்த 7 மாதக் குழந்தை ஓர் கொதிக்கும் நீர் நிரம்பிய எலக்ட்ரிக் பேன் கைப்பிடியை தற்செயலாக இழுத்தபோது, அது அப்படியே அவன் மீது கவிழ்ந்தது.

மங்கோலிய கிராமப் பகுதிகளில் ஆம்புலன்ஸ் வசதி ஏதும் இல்லை. அருகிலுள்ள கிளீனிக்குக்குச் செல்ல கிட்டத்தட்ட ஒரு நாள் எடுத்தது, பிறகு அவனை ஒரு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல மேலும் இரண்டு நாட்கள் ஆனது. அதற்குள் அவனது தீக்காயம் மோசமான தொற்றுக்கு ஆளானது, ஆனால் ''மருத்துவ மனையிலோ, அவனுக்குச் சிகிச்சையளிக்க அடிப்படை ஆன்ட்டிபயோடிக் மருந்துகள் கூட இல்லை''.

மருத்துவர்கள் கைவிரித்து விட்டனர், வெளிநாட்டில் உள்ள ஒரு சிறப்புச் சிகிச்சை மருத்துவமனை மூலமே அவன் உயிரைக் காப்பாற்ற முடியும் என்றனர். ''பரிதவிக்கும் பெற்றோர்கள் தங்களுக்குத் தெரிந்த எல்லா நண்பர்கள் மற்றும் எல்லா உறவினர்களையும் அணுகிப் பார்த்தனர். ஆனால் ஜச்சாரிக்கு அவகாசம் முடிந்து கொண்டிருந்தது. பாதி உடலுக்கு மேல் மூன்றாம் நிலை தீக்காயம் ஏற்பட்டிருந்தது மட்டுமல்லாமல், தொற்றும் செப்டிக் அடைந்திருந்தது.''

சின்சினாட்டியில் உள்ள ஷ்ரைனர்ஸ் (Shriners) என்ற ஒரு தொண்டு மருத்துவமனை அவனை அனுமதிக்க ஒப்புக் கொண்டது, பதற்றத்தில் இருந்த பெற்றோர்கள் எப்படியோ விமான டிக்கெட்டிற்கு பணம் திரட்டி, தங்களுடன் அழைத்துச் செல்ல ஒரு மருத்துவரையும் கண்டறிந்தனர். ஆனால் ''எந்தவொரு விமானச் சேவையும் இவ்வளவு நலிந்துபோய், நோய்வாய்ப்பட்ட, விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த கைக்குழந்தையை கொண்டுசெல்லத் தயாராக இல்லை. குழந்தைக்கோ, இன்னும் இரண்டு நாட்களே இருந்தன!'' பெற்றோர்களோ, என்ன செய்வதென்று தெரியாமல், இறைவனிடம் இரவு முழுக்க பிரார்த்தித்தனர், குழந்தையின் நிலைமையோ மென்மேலும் மோசமானது.

திடீரென்று மறுநாள் காலை மங்கோலியா மருத்துவமனையின் தீக்காயப் பிரிவின் வாசலில் தெரியாத ஒருவர் நின்றிருந்தார். தான் அவர்களுக்கு உதவப் போவதாகக் கூறி, ஆவணங்களைப் பெற்றுச் சென்றார். பிறகு மாலை நேரம் திரும்பிவந்து, குழந்தையையும் பெற்றோர்களையும் சின்சினாட்டிக்கு விமானத்தில் அழைத்துச் செல்லத் தேவையான



PRIP ஜான் ஜெர்ம்

அங்கீகாரத்தைக் காட்டினார். அது ஏதோ மாய மந்திரம் போல் தோன்றியது. ஆம்புலன்ஸ் முதற்கொண்டு சகல வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குடும்பத்தார் தக்க தருணத்தில் சின்சி னாட்டி மருத்துவ மனையை அடைந்து, ஜச்சாரியின் உயிரைக் காப்பாற்றினர்.

என்றாலும், இந்த அற்புத நிகழ்வின் பின்னணியில் வேறொன்று நடந்து கொண்டிருந்தது...

வெகு தொலைவிலுள்ள ரோட்டரி தலைமையகமான இவான்ஸ்டனில். தொடக்கமாக, RI பிரசிடென்ட்டின் அலுவலகத் தொலைபேசி மணி அடித்தது; அன்று பதவியில் இருந்த ரவீந்திரன் தொலைபேசியை எடுத்ததும், RI ஊழியர் ஒருவரின் உணர்ச்சிப்பூர்வமான வேண்டுகோள் கேட்டது. அவள், மங்கோலியாவில் உள்ள தனது தோழியின் அவதிப்படும் பேரக் குழந்தையின் உயிர் எப்படியாவது காப்பாற்றப்பட வேண்டும் என்றாள். ''நீங்கள் ரோட்டரியின் தலைவர், உங்களால் இதைச் செய்துகொடுக்க முடியும் என்று சொன்னாள், உண்மையிலேயே என்னால் இதைச் செய்யமுடியும் என்று நான் நினைக்கவில்லை,'' என்று ரவீந்திரன் அசெம்பிளியில் உள்ளவர்களிடம் கூறினார்.

எனினும், தான் முயற்சிப்பேன் என்று அவர் உறுதியளித்தார்; பிறகு ஹாங்காங்கில் இருந்த மாவட்ட ஆளுநர் பீட்டர் பேங்கை தொடர்புகொண்டார். அங்கே அது நடுநிசி நேரம், என்றாலும் உதவி வழங்குவதாக உறுதிசெய்தார். காலை விடிவதற்குள், அந்த DG மங்கோலியாவில் உள்ள உலான்பாட் டர் ரோட்டரி சங்கத் தலைவரை அணுகியிருந்தார், அவர் அரசின் மேல் அதிகாரிகளுக்கு அழுத்தம் தந்து, குழந்தையை விமானத்தில் கொண்டு செல்வதற்கான உத்தரவை வாங்கினார். பிற ரொட்டேரியன்கள் மருத்துவமனைக் குச் சென்று, நுழைவுக் காரியங்களைப் பூர்த்தி செய்தனர், ''இவான்ஸ்டனில், எங்கள் ஊழியர் இரவு நீண்ட நேரம் வரை உறங்காமல் அந்த நலிவுற்ற குழந்தைக்குத் தேவையான விசேஷ டிக்கெட்களை முன்பதிவு செய்தார். விமானச் சேவை அதிகாரிகள் விமான நிலையத்தை அழைத்து, 'இவர்கள் விஜபி-க்கள், எனவே கண்டிப்பாக நன்கு வசதிசெய்து கொடுக்க வேண்டும்' என்று கூறினார்.


அடுத்து, ரவீந்திரன் DGE களுக்கு இக்கதையின் படிப்பினையை வழங்கினார்: ''அன்றைய தினம் நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு நூலை மட்டுமே கையில் பிடித் திருந்தோம், ஆனால் அந்த ஒரு நூலில் எங்கோயிருந்த மங்கோலியாவிலுள்ள ஒரு குடும்பத்தின் உலகமே தொங்கிக் கொண்டிருந்தது. நீங்களும் அடுத்த வருடம், பல உலகங்களைச் சுமக்கும் நூல்களை உங்கள் கையில் பிடிக்கப் போகிறீர்கள். அவற்றை நன்றாக, உறுதியாக நெய்வது உங்கள் பொறுப்பு.''

DGEகள் தங்களுக்காக வகுக்கப்பட்ட திட்டங்களைப் பின்பற்றி, தங்களுக்கு முன் சென்றவர்களின் பணிகளை வளர்த்து, அடுத்து வருபவர்களுக்காக அடித்தளம் போட வேண்டும் என்றார். அவர்களின் நற்பணியில் தான், இது போன்ற துன்ப, துயரத்தில் உள்ளவர்களின் எதிர்காலம் இருக்கிறது. ''இந்த ஒரு வருட காலம், உங்கள் பதவியின் அவசரத்தை நீங்கள் உணர வேண்டும், உங்களுக்காகக் காத்திருப்பவர்களுக்கு உங்கள் வசமுள்ள அந்தக் காலகட்டத்துக்குள் உங்களால் முடிந்தளவு அதிகபட்சம் செய்யவேண்டும். உயிர்கள் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே ஊசலாடும் போது இதே தரநிலை, இதே தரம், இதே அர்ப்பணிப்புடன் வேலை நடப்பதை வலியுறுத்த வேண்டும்''.

ரவீந்திரன், ரோட்டரி தலைவர் பதவியில் தன் அனுபவத்தை இப்படி வெளிப்படுத்தினார்: ''நேர்மையாகச் சொல்லவேண்டும் என்றால், இது இவ்வளவு கடினமாக இருக்கும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. என் வாழ்விலேயே மிகக் கடுமையான வருடங்கள் அவை.'' ஆக, அவர் ரோட்டரியிலிருந்து நீண்ட விடுமுறையை எதிர்பார்த்து, வீட்டுக்குச் செல்ல விமானத்தில் ஏறும்போது, ''நான் மனதில் சொல்லிக் கொண்டேன்: நான் செய்ய நினைத்துப் புறப்பட்டதை செய்துமுடித்தேன். தீ பந்தத்தை ஒப்படைத்து விட்டேன். என் பணி நிறைவேறியது.'' ஆனால் ''ரொட்டேரியனின் வேலை'' அவரோடு வீட்டுக்கும் வந்தது.

அங்கே, தனது கொழும்பு ரோட்டரி சங்கம் பத்தாண்டுகளுக்கு முன் செய்திருந்த நலத்திட்டத்தை ஒரு புதுக் கண்ணோட்டத்தில் அவர் பார்த்தார். கொழும்பில் உள்ள ரோட்டரி கேன்சர் டிடக்ஷன் சென்டரில் 40,000 பெண்களுக்கு கர்ப்பப்பை-வாய்ப் புற்றுநோய் ஸ்கிரீனிங் செய்தது, அப்பரிசோதனையில் அந்நோய் இருப்பதாக அறியப்பட்ட 7,000க்கும் அதிகாமனோர் மேற்கொண்டு சிகிச்சைக்காக பரிந்துரைத்து அனுப்பி வைக்கப்பட்டனர். சங்க உறுப்பினர்கள் எல்லோரும் இந்த இரு எண்ணிக்கைகளை தங்கள் சாதனையின் அளவுகோளாகச் சுட்டிக்காட்டினர்.

ஆனால், அவர் தன் புதுக் கண்ணோட்டத்தில் இன்னொரு எண்ணிக்கையையும் பார்த்தார். ஆண்டுதோறும் இலங்கையில் 2,000 பெண்களுக்கு கர்ப்பப்பை-வாய்ப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்படுகிறது, அதில்



PRIP K R ரவீந்திரன்

ஏறக்குறைய பாதிப் பேர் இறந்து விடுகிறார்கள். HPV வைரஸால் உண்டாகும் ஏறத்தாழ இந்நோய்த் தொற்றுக்கள் அனைத்தையும், தடுப்பூசி மூலம் தடுத்திருக்க முடியும்.

ஆக, ஒரு புதுத் திட்டம் பிறந்தது. நாட்டிலுள்ள 15-18 வயதுக்கு இடைப்பட்ட ஒவ்வொரு சிறுமிக்கும் தடுப்பூசி அளிப்பது, 35-60 வயதுக்கு இடைப்பட்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் ஸ்கிரீனிங் செய்வது என்ற இலக்கு வகுக்கப்பட்டது. எனவே, சங்கம் இப்போது ரோட்டரி அறக்கட்டளையுடனும் (TRF) இலங்கை அரசுடனும் கைகோர்த்து, தடுப்பூசி அளிப்பதற்கும் நோய்த் தடுப்பு விழிப்புணர்வுக்கும் கூட்டுநிதி வழங்கப்போகிறது, இதன் மூலம் தனது நாட்டை கர்ப்பப்பை-வாய்ப் புற்றுநோய் இல்லாத நாடாக அவர் மாற்ற முனைவார்.

மாவட்ட ஆளுனர்கள் இடையே உரையாற்றும் போது, PRIP ஜான் ஜெர்ம், ''நீடிக்கின்ற மேலும் பெரிய, மேலும் பலருக்குப் பயனளிக்கின்ற நலத்திட்டங்களை'' செய்யவேண்டியதன் தேவையை வலியுறுத்தினார், அதற்காக பலதரப்பட்ட அமைப்புகளுடன் கைகோர்த்துச் செயல்பட வேண்டும் என்றார்.

உலகுக்கு ''முன்பு எப்போதையும் விட இன்று ரோட்டரியும், நமது தைரியமும், நமது சாதக மனப்பான்மையும், நமது இலட்சிய வேட்கையும் தேவைப்படுகிறது. எல்லாவற்றையும் விட, சகல நாட்டுக் குடிமக்களும் ஒன்றுசேர்ந்து நட்புடன் வெற்றிகரமாகப் பணியாற்ற முடியும் என்று நிரூபித்துக் காட்டிய அமைப்பின் நல்லுதாரணம் அதற்குத் தேவை.''

ரொட்டேரியன்கள் தங்கள் செயலின் முழு தாக்கத்தை அறிவதில்லை. ஒரு சம்பவம் இதை அவருக்கு உணர்த்தியது. அவர் தன் மனைவி ஜூடியுடன் பெய்ரூட்டுக்குச் சென்று PDG ஜமீல் முவாதைச் சந்தித்தார். அங்கே, மாசடைந்த தண்ணீரைக் குடித்து நோய்வாய்ப்படும் மாணவர்களைக் கண்ட அவர், லெபனான் முழுவதுமுள்ள ரொட்டேரியன்கள், அரசு, தனியார் வணிகக் கழகங்கள் மற்றும் TRF-ஐ ஒன்றுதிரட்டிக் களமிறங்கினார். இப்போது, 700க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்குச் சுத்தமான நீர் கிடைக்கிறது. இதேபோன்று, லெபனானில் உள்ள எல்லா பள்ளிகளுக்கும் கிடைக்க செய்வது இலக்கு.

ஒரு முழுமாற்றத் திட்டம் என்பது பெருத்த செலவையும், ஏராளமான கூட்டாளர்களையும், பெரும்பாலான ரொட்டேரியன்களையும் கண்டிப்பாக ஈடுபடுத்த வேண்டும் என்பது அவசியமில்லை. ஓர் இளம் தொழில்முனைவருக்கு எப்படி வியாபாரத்தைத் தொடங்குவது என்று கற்றுக்கொடுத்து, கடன் வசதிக்கான வழியைப் பெற்றுத்தந்து, அவரின் மற்றும் அவரது குடும்பத்தின் வாழ்வையே மாற்றிக்காட்ட முடியும்.

> இந்த ஒரு வருட காலம், உங்கள் பதவியின் அவசரத்தை நீங்கள் உணர வேண்டும், உங்களுக்காகக் காத்திருப்பவர்களுக்கு உங்கள் வசமுள்ள அந்தக் காலகட்டத்துக்குள் உங்களால் முடிந்தளவு அதிகபட்சம் செய்யவேண்டும்.
>
> PRIP K R **ரவீந்திரன்**

ரோட்டரிக்காக இரண்டு வருடங்களுக்கு மேல் பயணித்த அனுபவத்தில், சிறந்த திட்டங்களுக்கு இடையே சில ஒற்றுமைகள் இருப்பதை அவர் கண்டார். அவை நன்கு ஆராய்ந்து திட்டமிடப்பட்டன.

- அவை சமூகத்தின் உண்மையான தேவைகளுக்குத் தீர்வு அளித்தன, ரொட்டேரியன்களின் மனதில் இருந்த யோசனைகளுக்கு அல்ல.
- அவை பயனாளிகளை ஈடுபடுத்தி, அவர்களின் யோசனைகள் மற்றும் கருத்துகளைக் கேட்டு, உள்ளூர்ச் சவால்களை கருத்தில் கொண்டன.
- அவை நீடிப்பவையாக இருந்தன; அதாவது, வருடக் கணக்காக வரப்போகும் காலத்தில் வாழ்வுகளில் சொல்லுமளவுக்கு தொடர்ந்து மாற்றம் ஏற்படுத்திக் கொண்டே இருந்தன.

குவாத்தமாலாவில் கண்ட ஒரு நலத்திட்டத்தின் உதாரணத்தை அவர் மேற்கோள் காட்டினார். அங்கே ஒரு தொலைதூர கிராமத்துக்கு அவர்கள் சென்றார்கள், கிராமத்தில் X-ray வசதியை பெற விரும்புபவர்கள் 6-8 மணிநேரம் கரடுமுரடான புழுதியடைந்த சாலையில் பயணித்துச் செல்ல வேண்டும். சென்ற பிறகு, அந்த கிளினிக்கில் நோயைக் கண்டறிய முடியாவிட்டால், ''நோயாளியின் சட்டையில் அல்லது ஜாக்கெட்டில் ஒரு காகிதத்தை வைத்து, 'நோயைக் கண்டறிய முடியவில்லை' என்ற குறியுடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள்''.

பிறகு, ரோட்டரி ஒரு டிஜிட்டல் X-ray தொழில்நுட்பம் அடங்கிய திட்டத்தைக் கொண்டுவந்தது. அது அச்சமூகத்துக்கு மருத்துவச் சிகிச்சை பெறும் வசதியை முற்றிலும் மாற்றியமைத்தது. ''மக்கள் சந்தோஷம் அடைந்தனர். அந்த இயந்திரத்தின் பலனாக மருத்துவரால் அவர்களைக் கவனித்துக் கொள்ள முடிந்தது, அவர்களும் ஒருவரையொருவர் கவனித்துக் கொண்டனர்.''

அந்த ஒரு கிளினிக் 29 ஊர்ப்புற கிராமங்களில் உள்ள 10 லட்சத்தும் மேற்பட்டவர்களுக்கு சேவையளிக்க உதவும்.

ஆளுநர்கள் என்ற வகையில், ஒரு முழுமாற்றத்தை ஏற்படுத்தும் பணியைச் செய்யும் தொலைநோக்குப் பார்வை அவர்களுக்கு அவசியம்; ''தவறு என்ன என்று பார்த்து, தீர்வளிப்பதற்கான காரணங்களை இனங்காண வேண்டும். ஒவ்வொரு வாரமும், இதோ ஒரு ரோட்டரி நலத்திட்டம் நிகழத் தயாராக இருக்கிறது என்று நான் நினைக்கும் அளவுக்கு ஏதாவதொன்று நடந்தது'', என்றார் ஜெர்ம்.

இதுபோன்ற இன்னொரு சாத்தியமான திட்டம், உழவர்களுக்கு அறுவடைக்குப் பின் நிலத்திலுள்ள கசடுகளை அப்புறப்படுத்த ஒரு சுற்றுச்சூழல்-நட்பான வழிமுறையை வழங்குவது. இப்போது அவர்கள் அந்தக் கசடுகளை எரிக்கிறார்கள், எனவே மிக மோசமாக புகையும், பனிப்புகையும் உருவாகி மக்கள் மூச்சு விடத் திணறுகின்றனர், விமானங்கள் தரையிறங்க முடிவதில்லை. ''ரொட்டேரியன்கள் என்ற வகையில், இதற்கான தேவையை நம்மால் பார்க்க முடிகிறது, ஆனால் இதற்குத் தீர்வளிக்கும் கற்பனை சக்தி நமக்கு இருக்கிறதா? ஆம், கற்பனைக் குறைபாடு மட்டுமே நமக்குத் தடையாக இருக்கிறது'' என்றார் அவர்.■

# சைக்கிள் கொண்டாட்டம், ரோட்டரி பாணியில்





ரோட்டரி நியூஸ் குழு

எங்கும் காணப்படுகிற சைக்கிளின் முதன்முதல் முன்மாதிரி வடிவம் எப்படி இருந்தது என்று எப்போதேனும் வியந்திருக்கிறீர்களா?

நீங்கள் சமீபத்தில் பெங்களூருவில் இருந்திருந்தால், 1817ல் பரோன் கார்ல் வான் ட்ரைஸ் கண்டுபிடித்த ''டென்டி ஹார்ஸ்'' இன் மாடல், நகரத்தின் மால்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த் திருப்பீர்கள்.

இது, சைக்கிள் கண்டுபிடிப்பின் 200 ஆண்டை நினைவுகூறும் வகையில், பெங்களூர் ரோட்டரி சங்கம், D3190, ஏற்பாடு செய்த கொண்டாட்டங்களின் ஒரு பகுதி. இந்தச் சங்கம் பெங்களூருவின் முக்கியப் பகுதிகளில், அந்த மாடலைக் காட்சிப்படுத்த ஏற்பாடு செய்திருந்தது. அந்த நிகழ்ச்சி ரோட்டரி பற்றிய பொதுத்தோற்றத்தை மேம்படுத்த ஓர் உந்துதலாக இருந்தது, ஏனெனில் அது கண்கவரும் வகையில் இருந்ததுடன் ஊடக கவனத்தையும் ஈர்த்தது.

இச்சங்கம் 'எளியோருக்கான சைக்கிள்' எனும் திட்டத்தை ஊக்குவித்தது. அதில், அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன், விவசாயிகள், தேநீர் விற்பனை யாளர்கள், வீட்டு வேலையாட்கள், காவல்காரர்கள் மற்றும் மாணவர்கள் போன்ற தினசரி பயணத்திற்காக இரு சக்கர வாகனம் தேவைப்படுவோரைக் கண்டறிந்துள்ளது. இதுவரை சுமார் 60 பேருக்கு அடிப்படை வடிவ சைக்கிள்களை வழங்கியுள்ளது.

மேலும், சென்னப்பாட்னா ரோட்டரி சங்கத்துடன் இணைந்து இரண்டு சைக்லோத்தான் நிகழ்ச்சி யையும் நடத்தியது. அதில் மற்ற ரோட்டரி சங்க உறுப்பினர்கள், ரோட்டரி சைக்ளிங் பெல்லோஷிப்பின் உறுப்பினர்கள் மற்றும் RAC ஜோதி நிவாஸ் கல்லூரி ரோட்டராக்டர்கள் பங்கேற்றனர். நகரின் பல்வேறு பகுதிகளில் நடுவதற்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு மரக்கன்று கொடுக்கப்பட்டது. இதுவரை இச்சங்கம் சுமார் 600 க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நகரத்திலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் நட்டுள்ளது.



*சங்கத்தலைவர் ஜானட் யக்னேஷ்வரன், செயலாளர் கனேஷ் ப்ரபு, துணை ஆளுநர் ப்ரசன்னக்குமார், DG ஆஷா ப்ரசன்னக்குமார், AG ரவீந்திரநாத், செயலாளர் ப்ரகாஷ் பெலவாடி சைக்கிள் வழங்குகின்றனர்.*

# கரும்பலகையிலிருந்து டிஜிட்டல் பலகைக்கு

ரஷீதா பகத்

‘அரசாங்கம் எல்.ஈ.டி விளக்குகளின் விலையை குறைத்துள்ளது, அதே போல நாமும் டிஜிட்டல் போர்டுகளின் விலையை குறைத்து, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கும் குறைந்த பட்சம் ஒரு டிஜிட்டல் போர்டு இருப்பதை உறுதி செய்வோம்’ என்று மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை மந்திரி பிரகாஷ் ஜவ்டேகர் புனேயில், ரோட்டரி இந்திய எழுத்தறிவு மிஷன் (RILM) ஏற்பாடு செய்திருந்த ரோட்டரியின் ஈ-சிக்ஷா திட்டத்தைத் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில் கூறினார்.

தொடக்கத்திலேயே, கல்வி என்பது அரசாங்கத்தின் பொறுப்பாக மட்டுமே இருக்க முடியாது, மேலும் இந்தியா முழுவதும், முழுமையான மற்றும் தரமான கல்வி, பொதுமக்கள் பங்கேற்கின்ற போது மட்டுமே நிறைவேறும். RILM தலைவர் PRID சேகர் மேத்தாவின் ஈ-லேர்னிங் முயற்சியை வரவேற்றார். பலருக்கு இது தெரியாமல் இருக்கலாம், ஈ-லேர்னிங் புரட்சியை ஆரம்பித்தவர்கள் மகாராஷ்டிராவில் தொலைதூர கிராமப்புறப் பகுதிகளில் பணிபுரியும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே என்பது. ‘நம் நாட்டின் பல நல்ல விஷயங்களைப் போலவே, இந்த டிஜிட்டல் புரட்சியும் அரசாங்கத்தின் பங்களிப்பில்லாமல் நடந்தது. ஒரு திட்டம் சமூகத்தின் பங்கேற்பினால் மட்டுமே வெற்றியடைய முடியும்’’ என்றார்.

1960களில், ‘ஆபரேஷன் பிளாக் போர்டு’ என்பது பிரபலமான முழக்கமாக இருந்ததாக ஜவ்டேகர் கூறினார். ‘ஆனால் நவீன காலத்தின் தேவையை மனதில் வைத்து, ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு ‘டிஜிட்டல் போர்ட்’ வழங்க நாங்கள் விரும்புகிறோம்.’

## ரோட்டரியின் நம்பகத்தன்மை

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அவரது நெருங்கிய நண்பரான PDG பிரமோத் ஜெஜுரிகெர், ‘‘என்னிடம் வந்து, ரோட்டரி ஈ-லேர்னிங் திட்டத்தை முன்னெடுக்க விரும்புவதைப் பற்றிப் பேசினார். பலர் எங்களிடம் வந்து பெரிய திட்டங்களைப் பற்றி பேசுவார்கள்; அதன் பின்னர் எதுவும் நடப்பதில்லை இது போல இருக்குமோ என நினைத்தேன். ஆனால் இது ரோட்டரி என்பதால், ஓரளவு நம்பகத்தன்மை



இருந்தது. மேலும் அரசாங்கம் எல்லாவற்றையும் செய்வதற்கு ஒரு பார்ட்னர் தேவைப்படுகிறது, அதற்கு ரோட்டரியைத் தவிர சிறந்த பார்ட்னர் இருக்க முடியுமா என்ன?'' என்றார். எனவே, அவருடைய அமைச்ச கம், கடந்த ஆண்டு சென்னையில் நடந்த தெற்காசிய எழுத்தறிவு உச்சி மாநாட்டில், ஈ-லேர்னிங்-ஐ மகாராஷ்டிராவின் 18,000 பள்ளிகளில் அறிமுகப்படுத்த ரோட்டரியுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய PRID மேத்தா, 'ரோட்டரிக்கு வரலாற்றுசிறப்பு மிக்க தருணமாகும், ஏனெனில், இந்த மாபெரும் திட்டத் தின் தாக்கம், இந்தியாவில் 40 லட்சம் குழந்தைகளைச் சென்றடையக்கூடியது. மேலும், இத்திட்டத்தின் மதிப்பு 75 கோடி ரூபாய்க்கும் அதிகமானது. போலியோ தவிர, இந்திய ரோட்டரியில் நீங்கள், ரூ.75 கோடி மதிப்புள்ள ஒரு திட்டத்தை பார்த்திருக்கிறீர்களா?''

இது வெறும் ஆரம்பமே என்று மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சருக்கு உறுதி அளித்தார். ''18,000 பள்ளிகள் மகாராஷ்டிரா அரசாங்கத்துடன் மட்டுமல்லாமல், 30,000 பள்ளிகளுக்காக மத்தியப் பிரதேச அரசுடனும், 20,000 பள்ளிக்காக பஞ்சாப் அரசுடனும் கடந்த மாதம் ஒப்பந்தங்களில் கையெழுத் திட்டுள்ளோம்.'' மேலும் ஹரியானா முதல்வர் 2,000 பள்ளிகளுடன் தொடங்குவதாகவும், பின்னர் மேலும் அதிகரிப்பதாகவும் கூறியுள்ளார்.

இறுதியாக, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கும் ஈ-லேர்னிங் சென்றடைய வேண்டும் என்பதுதான் இலக்கு. 'ஆனால் மகாராஷ்ட்டிரா உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்ட பிறகே இது வேகம் எடுத்தது. மொத்தமாக, இந்த திட்டத்தின் மதிப்பு ரூ.150 கோடி. ரோட்டரியில் காலமாற்றம் ஏற்பட்டது. இப்போது பெரியதாக, தைரியமாக, மேலும் பெரிதாக யோசிக்க வேண்டும். இந்த திட்டத்தின் மூலம் நாம் ஒரு லட்சம் பள்ளிகளை அடைவோம், ஒரு பள்ளிக்கு சராசரியாக சுமார் 200 குழந்தைகள் என்று வைத்தாலும் கூட, சுமார் 2.5 கோடி குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைவர்.'

அங்கிருந்த, மகாராஷ்டிரா கல்விச் செயலாளர் நந்த குமாரை, 'நீங்கள் செயலாற்றும் வேகத்திற்காக' மற்றும் ரோட்டரி உடன் TEACH திட்டத்தைக் கூட்டாக வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக இன்னர் வீலுக்கும் மேத்தா நன்றி தெரிவித்தார்.

## 10,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி

மேலும் 10,000 பள்ளிகளுக்கு 10,000 tab வழங்க ஒப்புக்கொண்ட புனே வடக்கு ரோட்டரி சங்கத் திற்கு அவர் நன்றி தெரிவித்தார். மேலும், ராக்குவெல் ஷெராப் தலைமையிலான ICEDC, 10,000 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க ஒப்புக்கொண்டது. பாடத்திட்ட மானது இரண்டாம் நிலை கல்வி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ''இதற்கு முழுவதுமாக ரோட்டரி மூலம் நிதியளிக்கப்படும், நந்த குமார் செய்ய வேண்டியதெல்லாம் 10,000 ஆசிரியர்களின் பெயர்களை எங்களுக்கு வழங்குவது மட்டுமே. PRIP கல்யாண் பானர்ஜியின் ''முழுவதும் கல்வியறிவு பெற்ற இந்தியா'' என்ற கனவை நிறைவேற்ற அனைத்தையும் செய்ய தயாராக இருக்கிறோம், ஆனால் தயவுசெய்து எங்களை எழுத்தறிவிப்பில் அரசாங்கத் தின் விருப்பமான பார்ட்னராக இருக்கச் செய்யுங்கள்.''

முதியோர் கல்வி மற்றும் நூலகங்கள் அமைப்பதைத் தவிர, RILM திறன் மேம்பாட்டிலும் பணிபுரிந்து கொண்டிருக்கிறது. மேலும், கடந்த மாதம் மட்டும் PRIP பானர்ஜி, லண்டனில் லூம்பா பவுண்டேஷன் செர்ரி பிளேயருடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார், அதில் 30,000 விதவைகள் வேலைவாய்ப்புக்கான திறன் மேம்பாட்டில் பயிற்சி பெறுவர்.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பானர்ஜி, இந்தியாவில் செயல்படும் ரோட்டரி சங்கங்கள், இந்தியாவை விரைவாக எழுத்தறிவில் முழுமையடைந்த நாடாக்குவதற்கு, இந்திய அரசாங்கத்தை ஆதரிக்கவும், கைகோர்த்து பணியாற்றவும் உறுதியுடன் இருப்பதாக தெரிவித்தார். 'இந்தியா டிஜிட்டல் மயமாக உதவுவது மிகவும் முக்கியமான படி நிலை. மகாராஷ்டிரா இந்த முயற்சியில் நாட்டின் பல மாநிலங்களைவிட முன்னோடியாகத் திகழ்கின்றது.''

இந்தியாவில் டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் பரிணாம வளர்ச்சிக்கே நன்றி பாராட்ட வேண்டும், பள்ளிகளில் கற்றல் சம்பந்தமான

*இடது புறத்திலிருந்து : PRID சேகர் மேத்தா, மனிதவள மேம்பாடு மந்திரி பிரகாஷ் ஜாவ்டேகர், PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் PRID அசோக் மகாஜன்*



# பானர்ஜி பெண் கல்வி பற்றி பேசுகிறார்



PRIP கல்யாண் பானர்ஜி, பெண் குழந்தை கல்விக்காக ஒரு உணர்வுப்பூர்வமான வேண்டுகோள் வைத்து, 'நியாயமான கோபத்தை' வெளிப்படுத்துவதைக் கடந்து செல்ல நேரம் வந்துவிட்டது என்று கூறினார்.

தெற்காசியாவில் பெண் கல்விக்காக அவர் பேசிக்கொண்டிருந்ததை மீண்டும் வலியுறுத்தி, கல்வி மட்டுமே அவர்களுக்கு 'ஒரு நியாயமான வாய்ப்பை, வறுமையிலிருந்து வெளியேறும் வழியை வழங்குவதாக கூறினார். மேலும் உலகத் தலைவர்கள், நிலையான வளர்ச்சி இலக்குகளில் நோக்கமாக 2030-ஆம் ஆண்டுக்குள் கல்வி அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்தி, பெண்களுக்கும் கிடைக்கும் படி ஆக்க வேண்டும்.

'இந்த எல்லா அநீதிகளுக்கு நியாயமான கோபத்தைத் தவிர, வன்முறைக்கு எதிரான கொதித்தெழ வேண்டியுள்ளது - அது உடல் ரீதியாகவும், உணர்ச்சி பூர்வமாகவும், சட்டபூர்வமாகவும் இருக்க வேண்டும் — இது பெண்களுக்கு எதிரான அத் தகைய அநீதியை நிரந்தரமாக்குகிறது. ஆனால் நம்பிக்கைக்கு இடமும் இருக்கிறது. ஏனெனில் ஆராய்ச்சி தெளிவாகத் தெரிகிறது-காகிதத்தில் இது தெளிவானது மற்றும் களத் தில் நிரூபிக்கப்பட்டது — பெண் கல்விக்கான நிதி என்பது தொண்டு அல்ல முதலீடு, மற்றும் அதன் பயன்கள் மாற்றத்தை உருவாக்குபவை.

பெண்களுக்கு பள்ளியில் ஒரு வருட கூடுதல் கல்வி அளியுங்கள், அவர்களின் ஊதியங்கள் 12 சதவிகிதம் அதிகரிக்கும். 'பையன்களைப் போன்று அவர்களுக்குக் கல்வி கொடுங்கள், விஷயங்கள் உண்மையிலேயே மாறும். கல்வியில் பாலின இடைவெளியை குறைத்தால், தெற்காசியாவில் வளரும் நாடுகள் வருடத்திற்கு $112 - $152 பில்லியன் வரை உருவாக்கும். நீங்கள் சிறுமிகள் மற்றும் பெண்களில் முதலீடு செய்யும் போது, அவர்கள் தங்கள் குடும்பங்களையும், சமூகத்தையும், உயர்த் துவார்கள். அவர்கள் உயர்வார்கள் — அவர்கள் வழி நடத்து வார்கள்.'

இந்த நாடுகளில் 130 மில்லியனுக்கும் அதிகமான சிறுமிகள், ''கூட்டு நடவடிக்கைகளை ஒருமைபடுத்துவதற்கும், நல்ல கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கவும், மேலும் என்ன செய்ய வேண்டும் என்பதை அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்ளவும் பெண்களையும், ஆண்களைம் நம்பி இருக்கின்றனர்'' என்றும் அவர் கூறினார். 'அமைச்சர் (ஜவடேகர்) ஐயா, இந்தியா இதற்கு வழி காட்டட்டும்.'

## தடுமாறும் நிலை

'இந்தியாவில் கல்வி தடுமாற்றமான நிலையில் உள்ளது' என்று பானர்ஜி கூறினார். அரசாங்கம் அதற்கு அதிக மான பணத்தை செலவழிக்கிறது. ஆனால் விளைவுகள் எல்லா இடங்களிலும் எதிர்பார்ப்பது போலவோ, விரும்பியது போலவோ இல்லை. வருடாந்திர கல்வி நிலையின் ஆண்டு அறிக்கை (ASER) அரசாங்கத்தில், 'ஓரளவிற்கு மோசமானது' விவரிக்கப்பட்டது. 52 சதவிகித ஐந்தாம் வகுப்பு மாணவர்களால் இரண்டாம் வகுப்பு பாடப் புத்தகங்களை வாசிக்க முடியவில்லை மற்றும் 58 சதவிகித எட்டாம் வகுப்பு மாணவர்களால் சாதாரண வகுத்தல்களை செய்ய முடியவில்லை. மேலும் ஆசிரியர்கள் வராமல் இருப்பது அதிகமாக இருந்தது. பட்ஜெட் தனியார் பள்ளிகளுடன் ஒப்பிடுகையில், அரசாங்க ஆசிரியர்கள் அதிக ஊதியம் பெற்றனர், ஏறக்குறைய அனைவரும் முழுநேர நிரந்திர பணியில் இருந்தனர். இதனால் அவர்களுக்கு மேம்படுத்து வதற்கோ அல்லது தரமான கல்வியை வழங்கவோ எந்த காரணமும் இல்லை. பிறகு எப்படி அவர்களை பொறுப்பாளர்களாக ஆக்கி நம்முடைய பணம் சரியாக செலவழிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துவது? இதற்கு ஒரே வழி பள்ளி வவுச்சர் கள். இது அமெரிக்காவில் புகழ் பெற்று வரும் ஒரு திட்டம். இங்கே அதை செயல்படுத்த முடியுமா? என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.'

வவுச்சர் முறையின் கீழ், அரசாங்க பள்ளிகளுக்கு பணத்தை வழங்குவதற்குப் பதிலாக, அரசாங்கம், பெற்றோர்களுக்கு வவுச்சர்களை அளிக்கிறது, பின்னர் அவர்கள் தங்கள் குழந்தைளுக்கான சிறந்த பள்ளிக்கூடத்தை தேர்வு செய்து, அங்கு வவுச்சரை சமர்ப்பிக்கிறார்கள். பிறகு அந்த பள்ளி, அரசாங்கத்திற்கு வவுச்சரை கொடுத்து, ஆசிரியர்களுக்கு கொடுப்பதற்காகப் பணம் பெறுகிறது.

இது அரசாங்க பள்ளி ஆசிரியர்களுக்கான ஊக்கத் தொகைகளாக மாறுகிறது. 'அவர்கள் இப்போது நல்ல பணி செய்து, தரமான கல்வி வழங்க வேண்டும், அல்லது பெற்றோர்கள் வேறு இடங்களில் தங்கள் குழந்தைகளை சேர்க்க நேரிடும். போட்டி, பொறுப்பைக் கொண்டுவருகிறது. இது பெற்றோர்களுக்கு தேர்வு செய்யும் அதிகாரத்தைக் மேம்படுத்துகிறது; தங்கள் குழந்தைகளுக்கு சிறந்தது எது என்பதை அவர்கள் தீர்மானிக்க முடியும். சுருக்கமாக, அரசு பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, பள்ளிப்படிப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்' என்று பானர்ஜி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் அவர் எப்போதும் சிறிய, சமூகத்தில் உள்ள தொண்டு அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகளையே ஆதரித்ததாக கூறினார். '70 வருடங் களாக, நாம் சட்டத்திட்டகளை கொண்டிருந்தோம். சமயங்களில் அது தனியார் பள்ளிகளுக்கு அனுமதி மறுத்தும் ஊக்கமளிக்க மறுத்தும் இருந்தது. குறிப்பாக ஏழைகளுக்கு. ஒரு பள்ளி, குழந்தைகளுக்கு குறைந்த கட்ட ணத்தில் கல்வியைத் தரும்போது மைதானம் போதுமான அளவு பெரியதாக இல்லை என்பது ஏன் கேள்வியாக வேண்டும்? பெற்றோர்கள் அவர்கள் எதற்கு மதிப்பீடு கொடுக்கிறார்கள் என்பதை அவர்கள் தீர்மானிக்க ட்டும்.''

ஏழை பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இலவச அரசாங்கப் பள்ளியில் சேர்ப்பதைவிட குறைந்த கட்டண தனியார் பள்ளியில் சேர்க்க விரும்புகிறார்கள். ''சந்தையில், இலாப நோக்கம் சிறந்த ஊக்குவிப்பாகும் என்று நான் நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் மற்றவர்களுக்கு கூடுதல் மதிப்பை வழங்குவதன் மூலம் இலாபத்தை செய்ய முடியும். போட்டி மற்றும் இலாப நோக்கம் ஆகியவற்றின் காரணமாக, நாம் சிறப்பு அடைகிறோம். ஆனால் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான கல்விக்கு இது செய்யப்படவில்லை'' என்று பானர்ஜி கூறினார்.



*இடது புறத்திலிருந்து:* DG வ்யங்கடேஷ் சன்னா, PRIP கல்யாண் பானர்ஜி, PRID அசோக் மகாஜன், PDGs கோபால் மன்தானியா, வினய் குலகர்ணி, ப்ரஷாந்த் தேஷ்முக், சுபின் அமாரியா மற்றும் ரத்ன ப்ரபாகர் ஆனே.

யோசனைகள் மாறிவிட்டன. 'தொழில்நுட்ப மாற்றங்களுக்கு தகுந்தது போல பள்ளிகள் டிஜிட்டல் தீர்வுகளுக்கு தங்களை மாற்றிக்கொள்வது அதிகரிப்பதால், பாரம்பரியமான முறை கலந்துரையாடி கற்பிக்கும் முறைகளுக்கு வழிவகுத்துள்ளது.' இத்தலைமுறை மாணவர்கள் லேப்டாப்கள், ஐ-பேட்கள் மற்றும் ஸ்மார்ட்போன்கள் முதலியவற்றில் கைத்தேர்ந்தவர்களாக இருப்பது, இந்த புதுமையான கற்பிக்கும் முறைகள் மாணவர்களிடமிருந்து அதிக பங்கேற்றலை உறுதிசெய்கிறது, என்று அவர் கூறினார்.

இன்று, இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநிலங்கள், டிஜிட்டல் கல்வியில் மூழ்கிவிட்டனர். ஆயிரக்கணக்கான பள்ளிகள் அதை ஏற்றுக்கொண்டுள்ளன. ஆசிரியர்களும் டிஜிட்டல் முறைகளுக்கு கற்றுணர்ந் தவர்களாக ஆக்கப் படுகின்றனர். 'பள்ளியில் முதலும் மிக முக்கியமான அம்சம் நல்ல ஆசிரியர்கள் தான் என்று ரோட்டரியில் நாங்கள் நம்புகிறோம். இதுதான் நமக்கு முக்கியத் தேவை' என்று அவர் அழுத்தமாகக் கூறினார்.

மகாராஷ்டிராவின் கல்வித் துறை செயலாளர் நந்த குமார், மாநிலத்தின் விழிப்புணர்வு டிஜிட்டல் எழுத்தறிவில் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டது என்று கூறினார். ''இங்கே 66,000 அரசு பள்ளிகள் இருக்கின்றன, இதில் 63,458 பள்ளிகளில் குறைந்தபட்சம் ஒரு வகுப்பறை டிஜிட்டலுக்கு மாறியுள்ளது.'' மேலும், 3 லட்சம் ஆசிரியர்களில் ''சுமார் 1.6 லட்சம் ஆசிரியர்கள், அவர்களில் பலர் இங்கு அமர்ந்துள்ளனர், தொழில்நுட்ப நுண்ணறிவில் ஆர்வமுள்ளவர்கள் என்று தாங்களாகவே பிரகடனப் படுத்திக் கொண்டுள்ளனர். இது ஒரு அரசாங்கத் திட்டம் அல்ல, ஒரு மக்களின் திட்டம். இந்த நடவடிக்கை களுக்கு செலவு செய்யப்பட்ட 350 கோடி ரூபாயும் கார்ப்பரேட் மற்றும் சமூக பொறுப்புணர்வு கம்யூனிட்டி இரண்டிலிருந்தும் வந்துள்ளது. இது எல்லாம் நடந்ததற்கு, ரோட்டரி தலைமைக்கு நன்றி.''

கற்பித்தல் முறையில் கொள்கை யளவில் மாற்றம் நிகழ்ந்துள்ளது புதிய தொழில்நுட்பம் கற்றலை மிகவும் பயனுள்ள மற்றும் சுவார ஸ்யமானதாகச் செய்துள்ளதாக PRID அசோக் மகாஜன் தெரிவித்தார். மஹாராஷ்டிராவில் பள்ளி சேர்க்கை மற்றும் வருகை, ஈ-லேர்னிங் அறிமுகத் தைத் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக சர்வேகளில் கண்டறியப்பட்டுள்ளது.

மாவட்ட ஆளுநர்கள் அபே காட்கில் (D 3131), பிரஃபுல் சர்மா (3141) மற்றும் வ்யங்கடேஷ் சன்னா (3132) ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.■

# தொடர்ந்து பயணிப்பீர், தொடர்வீர் பணிகளை

ஜெய்ஸ்ரீ



PRID ஃப்ரெட்ரிக் லின் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் பொழுது.

ஓர் இந்தியத் திருமணத்தைப் போல இந்த D3000 ஆண்டு மாநாடு நடக்கிறது. மனத்துக்கு நிறைவாக இருக்கிறது. என்ன பந்தம்! என்ன பாசப் பிணைப்பு! என்று நெகிழ்ந்து போனார் PRID ஃப்ரெட்ரிக் லின்.

தைவான் நாட்டைச் சேர்ந்த ஃப்ரெட்ரிக் மதுரையில் நடைபெற்ற ரோட்டரி சங்கம் D 3000 மாவட்டத்தின் ஆண்டு விழாவில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் பிரதிநிதியாகப் பங்கேற்றார்.

DG பி. கோபாலகிருஷ்ணனின் சிந்தனையில் உதித்த, தொடர்ந்து பயணிப்பீர், தொடர்வீர் பணிகளை (Go the Extra Mile and Serve-GEMS) என்ற கருத்தியலைப் பற்றிக் குறிப்பிட்ட ஃப்ரெட்ரிக், உறுப்பினர்களை இணைப்பதில் கூடுதல் பலனைப் பெறுகிறது என்று பாராட்டினார். அது தேசிய போலியோ ஒழிப்பு தினமாதலால் போலியோ சொட்டு மருந்து முகாமில் பங்கேற்ற ஃப்ரெட்ரிக், மாவட்ட ஆளுநர் ஆகியோர் மாநாட்டு மண்டபத்தில் சில குழந்தைகளுக்குச் சொட்டு மருந்து செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் இயான் ரிஸ்லி விடுத்துள்ள அழைப்பை நினைவு படுத்தி, ரோட்டரி அமைப்புகளில் கூடுதலான பெண்களைச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தற்போது மொத்த ரோட்டரி உறுப்பினர்களில் 34 சதவீதம் பேர்தான் பெண்கள். இது மிகவும் குறைவு என்றார்.

அதைப் போல் இளைஞர்களையும் ரோட்டரி பணிகளில் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஃப்ரெட்ரிக் சுட்டிக் காட்டினார்.



RID C பாஸ்கர் மற்றும் PRID ஃப்ரெட்ரிக் லின்.

### இயக்குநரின் தமிழ்ப் பேச்சு

RI இயக்குநர் C. பாஸ்கர் தனது உரையைத் தாய் மொழியான தமிழில் நிகழ்த்தினார் அதற்கு பார்வையாளர்களை வசீகரித்தது. நல்ல வரவேற்பு இருந்தது.

1991-92ம் ஆண்டில் நடை பெற்ற மாவட்ட மாநாட்டு நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்த இயக்குநர் C. பாஸ்கர், அப்போது நான் கரூர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக இருந்தேன். 32 சங்கங்கள்

மட்டும் பங்கேற்றிருந்தாலும், ஏதோ குடும்ப விழாவைப் போல கோலகலமாகவும் கொண்டாட்டமாகவும் இருந்தது. இன்றோ 120 சங்கங்கள் இணைந்து இந்த மாநாட்டை நடத்து கின்றன. திருவிழாவைப் போலத்தான் இருக்கிறது என்றார்.

நிகழ்ச்சிகளை அமைத்ததற்கும், பேச்ச ளார்களைத் தேர்ந்தெடுத்ததற்கும் DG கோபால், மாநாட்டின் தலைவர் வி. ரமேஷ் ஆகியோரை அவர் பாராட்டினார்.

உள்ளூர் மக்களின் தேவைகளுக் காக சேவைபுரிய வேண்டியது குறித்து வலியுறுத்தினார். அவர்களது தேவைகள் குறித்து கவனித்துச் செயல்படுவதன் மூலம் ரோட்டரியின் புகழ் மக்கள் மத்தியில் அதிகரிக்கும் என்றார்.

தாங்கள் பணியாற்றுவதற்கான நோக்கம் குறித்து ஆழமான புரிதலையும் நம்பிக்கையையும் ரோட்டரி சங்கத் தினர் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தி, உங்களது நம்பிக்கை எப்போதுமே எதையும் சாத்தியமாக்கும். நம் நாட்டில் மிகப் பெரிய இளைஞர்கள் பலம் இருக்கிறது. சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த, இளைஞர்கள் தங்களது பலத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும்படி இளைய தலைமுறையினருக்குக் கற்றுத் தருவோம் என்று கூறினார்.

முன்னதாக, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ப்ரீகால் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வனிதா மோகன், கோயம்புத்தூரில் நீர் நிலைகளை மீட்டெ டுப்பதற்காக சிறுதுளி என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் எடுத்துக் கொண்ட முயற்சிகள், பணிகளைப் பற்றி விவரித்தார்.

கோவையில் புதராகவும் களைகள் நிறைந்ததாகவும் இருந்த 300 ஏக்கர் பரப்புள்ள ஏரியை நாங்கள் சுத்தப் படுத்தினோம்.

கடந்த ஆண்டு பருவ காலம் இல்லாதபோதும் எதிர்பாராமல் நல்ல மழை



DG கோபால், PDG முருகானந்தம், அவர் துணைவி சுமதி, நீலா கோபால் சரத்குமாருடன்.

பெய்ததால், அந்த ஏரிப் பகுதி முழுவதும் நீர் நிரம்பியிருந்தது கண்டு குதூகலித்தோம்.

கரூர் வைஸ்யா வங்கியின் மேலாண்மை இயக்குநரும் முதன்மைச் செயல் அலுவலருமான பி.ஆர். சேஷாத்ரி பேசுகையில், மாவட்டத் தில் டயாலிசிஸ் மையங்களை அமைப்பதற்கு ரோட்டரி சங்கத்துடன் இணைந்து செயல்படுவதாகத் தெரிவித்தார்.

அட்சயபாத்திரம் அறக்கட்டளை யின் துணைத் தலைவர் சஞ்சலபதி தாஸா பேசு கையில், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் ஒரு லட்சத்து 60 ஆயிரம் குழந்தைகளுக்கு உணவு அளித்து வருகிறோம். இப்பணியில் சில இடங்களில் ரோட்டரி கைகொடுத்தது என்றார்.

SCAW என்ற கனடாவிலிருந்து வந்த அமைப்பின் குழுவினர் இந்த மாவட்டத் தில் வாடும் ஏழை, எளிய குழந்தைகள் தொல்லையின்றி உறங்குவதற்கான போர்வை, தலையணை, படுக்கைகளை வழங்கி உதவுகிறது. அந்த அமைப்பு இந்த மாநாட்டு நிகழ்ச்சியில் சிறப்பிக்கப்பட்டது.

மேலும் நவீன வசதிகளுடன் ஆட்டோ ரிக்ஷா ஓட்டும் அண்ணாதுரை, போலியோவால் பாதிக்கப்பட்ட விளையாட்டு வீராங்கனை மாதவி, லதா ஆகியோரும் சிறப்பிக்கப்பட்டனர்.

இவற்றுடன் தற்போதைய தொழில்நுட்பம் வரமா சாபமா என்ற தலைப்பில் சுவையான பட்டிமன்றமும் நடைபெற்றது. கவிஞர் ஜோ மல்லூரி வாழ்க்கை - ''ஆசிர்வாதமா சாபமா'' என்ற தலைப்பில் சிந்தனையைத் தூண்டும் வகையில் நிகழ்த்திய உரை பார்வையாளர்கள் அனைவரையும் கட்டிப் போட்டது.

திருச்சி டைமண்ட் ரோட்டரி சங்கம் நடத்திய ஓவியப் போட்டியில் மாற்றுத் திறனாளிகள் வரைந்த ஓவியங்களில் ஏழு ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏலம் விடப் பட்டன. அதன் மூலம் கிடைத்த தொகை TRFக்கு வழங்கப்பட்டது.

நடிகரும் சமத்துவ மக்கள் கட்சி த் தலைவருமான ஆர். சரத்குமார் தான் உருவாக்கிய App ASK என்ற கைபேசி செயலியை அறிமுகம் செய்தார். இதன் மூலமாக மக்களின் குறைகள், கோரிக்கை களை பெறப்படும். அதனை சரத் குமாரின் உதவியாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் கவனத்துக்கு எடுத்துச் சென்று தீர்வு காண உதவுவர். சுமார் 1,000 சமூகப் பிரச்சி னைகள் பைசல் செய்யப்பட்டுள்ளன என்று சரத்குமார் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சியில் தமிழக துணை முதலமைச்சர் O. பன்னீர் செல்வம் பங்கேற்றுச் சிறப்பித்தது குறிப்பிடத் தக்கதாகும். நிகழ்ச்சியில் பேசிய அவர், பெரியகுளம் ரோட்டரி சங்கத்தில் 1986ம் ஆண்டு உறுப்பினராக இருந்து பணியாற்றியதையும், போலியோ நோய்த் தடுப்புக்காக இளையராஜா இசை நிகழ்ச்சி க்கு ஏற்பாடு செய்து, நிதி திரட்டியதையும் நினைவு கூர்ந்தார்.

பெரியகுளத்தில் டயாலிசிஸ் மையத்தை அமைப்பதற்கு உதவி அளிப்பதாகவும் O.P.S. அறிவித்தார்.■



நீலா மற்றும் DG கோபால் துணை முதலமைச்சர் O. பன்னீர் செல்வத்தை கௌரவப்படுத்துகிறார். மாநாட்டுத் தலைவர் V. ரமேஷ் உடன் உள்ளார்.

# ரோட்டரி இண்டர்நேஷனல் தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

- ஜூலை 2017 ஆம் ஆண்டிற்கான சங்க நிலுவையை செலுத்தாததால் ரத்து செய்யப்பட்ட சங்கங்கள், மீண்டும் புதுப்பிக்க ரத்து செய்யப்பட்ட தேதியில் இருந்து 150 நாட்களுக்குள் கீழ்க்கண்ட இணக்கங்களை நிறைவேற்ற ஊக்குவிக்கப்படுகின்றன:
    - ❖ ரத்துசெய்யப்படும்போது இருந்த செலுத்த வேண்டிய பாக்கிகளை செலுத்தவும்.
    - ❖ தொடர்ந்து சேர்ந்து வந்த அனைத்து உறுப்பினர் சந்தா பாக்கிகளையும் செலுத்தவும்.
    - ❖ ஒவ்வொரு உறுப்பினர் மறுசேர்க்கைக்கு, கட்டணம் $30 உடன் சரக்கு மற்றும் சேவைகள் வரி @ 18% செலுத்தவும்.
    - ❖ மறுசேர்க்கை படிவம்.

ரத்துசெய்யப்பட்ட தேதியில் இருந்து 150 நாட்களுக்குப் பிறகு, சங்கம் நிரந்தரமாக ரத்து செய்யப் படும், மறுசேர்க்கை செய்ய முடியாது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

- வருமான வரிச் சட்டம் 1961ன் தேவைக்கு ஏற்ப, நடப்பு நிதி ஆண்டில் வழங்கப்பட்ட பங்களிப்புகளை தெரிவிப்பதற்கு, அனைத்து நன்கொடையாளர்களும் தங்கள் பங்களிப்புப் படிவத்தில்/ கடிதத்தில் தங்கள் நிரந்தர கணக்கு எண்ணை (PAN) தெரிவிக்கவும் அல்லது PAN கார்டின் ஸ்கேன் செய்த நகலையோ எங்களுக்கு அனுப்பவும்.
- தற்போதைய கிளப் அதிகாரிகள், புதிதாக சேர்ந்த அதிகாரிகளின் விவரங்களை விரைவில் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தரவுகளை சரியான நேரத்தில் புதுப்பித்து வழங்குதல் உள்வரும் அதிகாரிகள், ரோட்டரி இண்டர்னேஷனலிருந்து மின்னஞ்சல் தகவல் தொடர்புகளைப் பெறுவதற்கும், அவர்களுடைய பெயர்கள் 2018-19 ரோட்டரி இண்டர்நேஷனலின் பெயர்கள் குறிப்பு நூலில் இடம்பெறுவதற்கும் ஏதுவாக்கும்.
- ரோட்டரி உறுப்பினர்கள், <http://video.rotary.org/> என்ற இணையதளத்திலிருந்து நாம் யார், நமது குறிக்கோள், நமது இளம் தலைவர்கள், நமது வரலாறு, இண்டர்நேஷனல் அசம்பளி உரைகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் உள்ள வீடியோக்களைப் பார்க்கலாம். தயவுசெய்து இந்த ஆதாரங்களைப் பயன்படுத்தி, ரோட்டரியின் குறிக்கோள்கள் மற்றும் செயல்பாட்டை நன்றாக புரிந்து கொள்ளவும்.
- மாவட்ட மாநாடுகள், புதிதாக சேர்ந்த சங்கங்கள் மற்றும் மாவட்ட அதிகாரிகளின் வருடாந்திர பயிற்சி சுற்றுகள் நடைபெறுவதால், ரோட்டரியில், இந்த மாதங்கள் மிகவும் சுவாரஸ்யமானவை. ரோட்டரி இண்டர்நேஷனல் இணையத்தளத்தில் (மை ரோட்டரி மூலம்) லேர்னிங் அண்ட் ரெஃபரென்ஸ் மெனுவின் கீழ் பல பயனுள்ள பயிற்சியாதாரங்கள், ஆவணங்கள் மற்றும் கையேடுகள் உள்ளன. மாவட்ட மாநாடுகள் மற்றும் எதிர்வரும் பயிற்சி நிகழ்வுகளின் வெற்றிக்கு எங்களின் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். ரோட்டரி, கூட்டு முயற்சியின் சக்தியை நம்புகிறது மற்றும் கார்ப் பரேட் சமூக பொறுப்புணர்வு ஆணை மூலம் கார்ப்பரேட்களுடன் இணைந்து பணியாற்றுகிறது. இன்று, நமது மாவட் டங்கள்/சங்கங்களின் உலகளாவிய மானியம் வழங்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த பல கார்பரேட் நிறுவனங்களுடன் சேர்ந்து பணியாற்றுவதை ரோட்டரி பெருமையாகக் கருதுகிறது.

**நெருங்குகிற காலக்கெடுவை கவனத்தில் கொள்க:**

- ரோட்டரி இண்டர்நேஷனல் கன்வென்ஷனுக்கான முன்பதிவின் தள்ளுபடிக்கான காலக்கெடு வேகமாக நெருங்கி வருகிறது. $10 தள்ளுபடியைப் பெற, ஆன்லைனில் மார்ச் 31, 2018 அல்லது அதற்கு முன்பாக http://www.riconvention.org/en/toronto/register-இல் பதிவு செய்யுங்கள்.
- மானிய அறிக்கைக்கான காலக் கெடு-அனைத்து மானியங்களின், மார்ச் 31 2018 ஆம் தேதி வரையிலான நடவடிக்கை களுக்கான இடைக்கால அறிக்கையை மே 31, 2018-க்குள் சமர்ப்பிக்கவும்; இல்லையென்றால், ஜூன் 1, 2018-லிருந்து மானியம் தவணை கடந்த பாக்கியாகிவிடும். கிராண்ட் ஸ்பான்ஸர் ஏதேனும் ஃபவுண்டேஷன் தவணை கடந்த பாக்கி அறிக்கையை உடையவரானால் புதிய மானிய விண்ணப்பங்களை ஃபவுண்டேஷன் ஏற்காது.
- 2019&20 Rotary Peace Fellowship programme-கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்கப்படுகின்றன. Rotary Peace Fellowship programme விண்ணப்பத்தைப் பற்றி மேலும் அறிய, https://my.rotary.org/en/peace&fellowship&application. லிங்கை கிளிக் செய்யவும். விண்ணப்பதாரர்கள் தங்கள் மாவட்டத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க கடைசி நாள் மே 31, 2018. மாவட்டங்கள் ஆதரவளித்த விண்ணப்பங்களை கூட The Rotary Foundation-க்கு ஜூலை 1 ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். சந்தேகங் கள் இருந்தால், தயவுசெய்து rotarypeacecenters@rotary.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

**Corporate Donors (RY 2016-17)**

**Corporate Donors (RY 2017-18)**

# ரோட்டரி ஒரு விரும்பப்படும் பார்ட்னர் மட்டுமல்ல

ரஷீதா பகத்

''நாங்கள் இப்போது அனைத்து இ-லேர்னிங் திட்டங்களிலும் ரோட்டரியைச் சம்பந்தப்படுத்துகிறோம்'' என்கிறார் புனேவில் உள்ள டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் நிறுவன செயலாளரும், கார்ப்பரேட் சஸ்டைனபிலிட்டி தலைவருமான அனுபவ் கபூர்.

அதனால், ரோட்டரி உங்கள் நம்பகமான பார்ட்னர் என்று கூறுவீர்களா? என்று புனேயில் ஒரு பேட்டியின்போது நான் கேட்கிறேன். அதற்கு, ''ஓ, அவர்கள் அதற்கும் மேலானவர்கள். 5லிருந்து 6 ஆண்டுகளுக்கு மேலாக இணைந்து செயலாற்றியதில், அவர்கள் எங்களின் நண்பர்கள், தத்துவவாதிகள் மற்றும் வழிகாட்டிகளாகவும் மாறிவிட்டனர்,' என்பது அவரின் பதிலாக இருந்தது.



அவருடைய களிப்பை, ''டாட்டா டெக்னாலஜிஸ் கடந்த நான்கு ஆண்டுகளில், மகாராஷ்டிரா பள்ளிகளின் ரோட்டரி இ-லேர்னிங் திட்டத்தில் சுமார் 1 மில்லியன் டாலர் வரை பங்களித்து ம்,700-க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு 1,000 இ-லேர்னிங் உபகரணங்களை வழங்கியுமுள்ளது.'' என்பதிலிருந்து அளவிட முடியும். இத்திட்டத்தைப் பற்றி நான் மிகவும் விரும்புவது என்னவென்றால், ''அதன் செயல்படுத்துவதில் உள்ள எளிமையே, குறிப்பாகக் கிராமப்புறப் பள்ளிகளில்'' என்றார் கூடுதலாக.

ஆறு வருடங்களுக்கு முன்பு, ஒரு செயல்திட்ட கூட்டத்திலும் நிறுவனத்தின் அடுத்த ஐந்து ஆண்டுக்கான வளர்ச்சித் திட்டமிடலின் போதும், டாடா டெக்னாலஜிஸ் $1 பில்லியன் மதிப்புள்ள நிறுவனம் என்றாக வேண்டும் என்பதே அப்போது முன்னிறுத்தப்பட்ட ஒரு குறிக்கோள். ''அப்போது நாங்கள் $400 மில்லியன் வருமானமுள்ளவர்களாக இருந்தோம்'' என்கிறார் ரோட்டரியுடனான உறவின் தொடக்கத் தடத்தில் சென்ற கபூர். அடிப்படையில் பொறியியல் தீர்வுகளை வழங்கும் நிறுவனமானது, 'நாங்கள் பில்லியன் டாலர் என்ற இலக்கை எட்ட வேண்டுமென்றால் அதிமுக்கியமானதொரு தேவை மனிதவளமாகவே இருக்குமென்றும் அப்போது எங்களுக்கு 25,000 பொறியாளர்கள் தேவைபாடுவார்களென்றும். தற்சமயத்தில் நாங்கள் 4,000 பொறியாளர்கள் மட்டுமே இருந்தோம்' என்றும் நாங்கள் கண்டறிந்தோம்.

மேலும், அனைத்து பொறியியல் துறைகளின் பரப்பு விஸ்தாரமாகி வருகிறது. ''உலகளவில் தேவைக்கும், கிடைப்பதற்கும் இடைவெளி உள்ளது. அதனால், நாங்கள் ''தயார் நிலைப் பொறியாளர்'' எனும் ஒரு கருத்துரு வாக்கத்தை முன்னிறுத்தியும், கல்வி, கண்டுபிடிப்பு மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றி ஏதேனும் செய்யவும் முடிவெடுத்தோம்''. திறமையான பொறியாளருக்கு, நல்ல பள்ளிக்கல்வியும், STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்) தீவிரமாக முன்னெடுத்தலும் தேவை என்பதைத் தரவுகள் மிகத்தெளிவாகக் காட்டுகின்றன. நிறுவனமும் இதில் மிக்கக் கவனம் செலுத்துகிறது.

**ஒரு கூட்டு பங்காற்றலின் துவக்கம்**

2013 ல், DGN ரவி டோத்ரே, கபூரை சந்தித்து, கல்வி மேம்படுத்துதலில் ரோட்டரியின் வேட்கையைப் பற்றியும், இந்தியாவில் இதை அடைவதற்கும், இந்தியாவை எழுத்தறிவில் முழுமைப்பெறச் செய்வதற்கும் ரோட்டரி உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைப்பற்றியும் பேசினார். ''நான் உண்மையிலேயே ஆர்வம் கொண்டேன், ஏனென்றால் 100 மாணவர்களில் இரண்டு மாணவர்கள் மட்டுமே அறிவியல் பாடப்பிரிவை எடுக்கிறார்கள், ஒருவேளை 0.2 சதவித மாணவர்கள் பொறியியல் படிப்பில் சேர்கிறார்கள் என்று எங்களிடமிருந்த தரவுகள் காட்டுவதாலேயே. நாங்கள் இதற்கான காரணத்தைத் ஆராய்ந்தபோது, அது, தரக்குறைவான கல்வியாலேயே, ஏனெனில் அறிவியலை கற்பிப்பதும், கற்றலும் கடினமானது என்பதால். நாம் கைகோர்த்தால், நம்மால் திறமையான மற்றும் நிலையான இ-லேர்னிங் திட்டங்களைப் பள்ளிகளுக்கு, குறிப்பாகக் கிராமபுற பள்ளிகளுக்கு எடுத்துச்செல்ல முடியும்'' என்றார் டோத்ரே.

பல வித கலந்துரையாடல்களுக்குப் பின்னர் - முன்னமே, PDG தீபக் ஷிகார்பூர் கூட அவரை அணுகியிருந்தது - மேலும், பள்ளிகளில் இ-லேர்னிங்கை எவ்வாறு மிகச் சிறந்த முறையில் செயல்படுத்த முடியும் என்பதைத் தீர்மானிக்கச்

சோதனையோட்டங்களாலும், ''ரோட்டரி ஒரு சிறந்த பங்களிப்பாளராக இருக்க முடியும் என்று நாங்கள் தீர்க்கமாக நம்பினோம். ஐந்து வருட கூட்டுப் பங்களிப்பின் பின்னர் அவர்கள் நிரூபித் துள்ளனர் என்றே நான் கூறவேண்டும்.

எனவே டாட்டா டெக்னாலஜிஸ் பள்ளிகளுக்கு இ-லேர்னிங் உபகரணங்களை வழங்குவதற்கு $1 மில்லியன் முதலீடு செய்துள்ளது என்று கூறுகிறார் கபூர். இத்திட்டத்தில் எனக்கு மிகவும் பிடித்தது இதன் எளிமையான நடைமுறைப்படுத்தலும், அதன் வளர்ச்சியுமே. திட்டம் செயல்படுவதைக் காண நாங்கள் களத்திற்குச் செல்கிறோம். இ-லேர்னிங் உபகரணங்கள் பொருத்தப்பட்ட வகுப்பறைக்குச் செல்லும்போது, இதை நடைமுறைப்படுத்து வது மாணவர்களே என்பதை நான் காண்கிறேன். இதன் பொருள், நாம் ஆசிரியர்களை மாற்ற வேண்டியதில்லை என்பதே. அவர் மேலும் கூறுகையில், டிஜிட்டல் பலகை அறிவியலின் அற்புதங்களை மாணவர்களுக்குத் திறந்து காண்பிக்கும்போது, ஆசிரியர், வகுப்பறையில் ஒரு ஓரமாக நின்றபடி இருக்கிறார். அப்போது சந்தேகமிருப்பின் மாணவர்கள் ஆசிரியரைக் கேட்கிறார்கள். ''இதுவே கற்றலுக்கு ஆகச் சிறந்த வழி என்று நாம் அனைவரும் அறிவோம்; கேள்வியும், பதிலும் கற்றலை துரிதப்படுத்துகிறது.''

**கற்பதற்கான உற்சாகத்தைத் தூண்டல்**

முந்தைய வருகைகளைப் போலல்லாமல், அவருக்குக் கொடுக்கப்பட்ட மாலை அல்லது ரோஜாக்கள் இப்போது குழந்தையின் எளிமையான ஒரு பொருளைக்கொண்டு மாற்றப்பட்டுள்ளது என்பதினால் அவர் மகிழ்ச்சியடைந் துள்ளார். 'இவை சிறு விஷயங்களாக இருக்கலாம், ஆனால், நாம் இளம் மனதில் ஆர்வத்தைத் தூண்டுகிறோம். மேலும் இதுவே குழந்தைகளில் உற்சாகத்தைத் தூண்டுவதற்கும், அறிவியலில் புதுமைக்கு இட்டுச்செல்வதற்கும் சிறந்த வழியாகும். விளைவுகள் அற்புதம். புதுமையின் மூலம் நம்மால் மதிப்புக்கூட்ட முடிந்தால் மட்டுமே நாடு உண்மையான வளர்ச்சியை அடைய முடியும். மனிதவளத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவ்டேகர், சென்னையில் ரோட்டரி எழுத்தறிவு உச்சிமாநாட்டில் இதே கருத்தைக் கூறியுள்ளார்''

இந்த ஆண்டு இ-லேர்னிங் முறை 100 பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப் பட்டதாகவும், 'வருகை, கற்றல் தரம், கிரேடுகளில் முன்னேற்றம் அல்லது விட்டு விலகும் விகிதத்தில் குறைவு போன்ற 6 காரணிகள் அனைத்தும் சாதகமாகவே இருக்கின்றன என்பதை நாம் பார்க்கலாம்' எனவும் கூடுதலாகத் தெரிவித்தார் கபூர்.

''பின்னர், புனே தூர கிழக்கு சங்கத்தின் முன்னாள் தலைவர் பங்கஜ் படேல் காட்சியினுள் வந்தார். அவர், புனேயருகில் உள்ள தம்பே கிராமத்தின் ஒரு குறிப்பிட்ட பள்ளியின் மீது அக்கறையுடன் இருந்தார். அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு எங்களுடைய பங்களிப்பை விரும்பினார் அவர். அந்தப் பள்ளி, மலைகளும் பள்ளத்தாக்குகளும் அருகமைந்த ஓர் எழில் நிறைந்த இடத்தில் அமைந்துள் ளது''. கபூர், அந்தப் பள்ளியைச் சிலர் ஆய்வு செய்ய வைத்தார். ''அவர்கள் அதை அற்புதமாகவும், ஏறக்குறைய ஒரு இலட்சிய பள்ளியாகவும் இருக்கிறது என்றும் கண்டனர்''.

படேல், பள்ளியில் ஓர் அறிவியல் ஆய்வுக்கூடம் நிறுவுவதற்கான திட்டத்தை முன்மொழிந்தார். ''பொதுவாக, நாங்கள் இது போன்ற நடவடிக்கைகளைச் செய்வதில்லை, நாங்கள் திட்டங்களையும், தாக்க அளவீடுகளையும் நம்புகிறோம். எனவே, ஆரம்பமாக ஒன்றல்ல, 15 தொடங்குவோம் என்று அவரிடம் நான் கூறினேன், ஏனெனில் கடைசியில், மாணவர்கள் அறிவியலின் ஆற்றலை உணராவிட்டால்... நாம் மாணவர்களை அறிவியல் கற்க உற்சாகப்படுத்த முடியாது. மேலும் அறிவியல் ஆய்வுக்கூடமே மிகச்சிறந்த வழியாகும்.

சிறு நகரங்களிலும், குறிப்பாகக் கிராமப்புறங்களிலும் மேற்கொள்ளும் இத்தகைய முன்னெடுப்புகள் ''இந்தியாவிலேயே தங்கியிருந்து தங்களுடைய பகுதியை முன்னேற்றக் கூடிய தயார் நிலை பட்டதாரிகள்/ பொறியாளர்களை உண்டாக்கும், என்று டோத்ரே மற்றும் கபூர் ஆகிய இருவரும் உறுதியாக நம்புகின்றனர்.

''பெரும்பாலான ஆட்சேர்ப்பு, இந்தியாவின் சிறிய நகரங்களிலேயே நடைபெறுகிறது என்பதையும் நாம் காண்கிறோம். மேலும், டாடா டெக்னாலஜஸில் உள்ள நாங்களும், திறமைவாய்ந்த அடுத்ததலைமுறையும் இங்கிருந்தே வரும் என்று நம்புகிறோம்''. இதன் விளைவாக, அவருடைய நிறுவனம் ஏற்கனவே 1,000 இ-லேர்னிங் உபகரணங்களை 700-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு வழங்கியுள்ளது. இதற்கான அவர்களின் அடிப்படை நிபந்தனை என்னவென்றால், அப்பள்ளியில் 8-10 வகுப்புகளில் குறைந்தது 220-250 மாணவர்கள் இருக்க வேண்டும் என்பதே.

அறிவியல் ஆய்வுக்கூடங்களுக்கு வந்தோமேயானால், ''நாங்கள் ஊழியர்களுக்கான ஆதரவு, ஆசிரியர்களின் தரம், அறிவியலைக் கற்பித்தலில் பள்ளியின் முனைப்பு ஆகியவற்றில் தேவையான கவனம் கொடுத்தப்பின்னர் தான் அறிவியல் ஆய்வுக்கூடத்தை வழங்குகிறோம். ஒவ்வொரு ஆய்வுக்கூடத்



இடது புறத்திலிருந்து: *அனுபவ் கபூர், DGN ரவி தோத்ரே மற்றும் பங்கஜ் பட்டேல்.*

# *Jugaad* மற்றும் kookabara

டாட்டா டெக்னாலஜிஸின், தலைவர்-கார்ப்பரேட் சஸ்டைனபிலிட்டி, அனுபவ் கபூர், இந்திய jugaad மற்றும் kookabara பறவை ஆகிய இரண்டின் மீதும் நியாயமான கேள்விகளை எழுப்புகிறார்.

Jugaad எனும் சொல், இந்திய கண்டுபிடிப்புகளின் சாரம்சத்தைக் கூறு வதே என்கிறார். ‘‘அது, உண்மையான அசல் கண்டுபிடிப்புகளை உணர்த்தும் போதிலும், ஏற்கனவே எதிர்மறை உணர் பொருளைப் பெற்றுவிட்டது, பஞ்சாப் மற்றும் குஜராத் கிராம மக்கள் உண்டாக்கும் இயந்திரங்களைக் கவனியுங்கள். அல்லது, கேரளத்தில் உண்டாக்கிய தேங்காய் பறிப்பதற்கான எளிய கருவியைப் பாருங்கள். அவை மிகவும் எளிமையானவை இருப்பினும் செயல்திறன் மிக்கவை. அவை காப்புரிமை பெறாததால், நாம் IP மற்றும் அது போன்ற சொற்களைப் பற்றிப் பேசுவதில்லை. அதனால் அவை jugaad ஆகின்றன. தேவை இருக்குமிடத்தில் கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன. மேலும் இந்தியாவின் வளர்ச்சியானது பண்ணைகள், உற்பத்தி மற்றும் செயலாக்கம் இருக்கும் கிராமங்களில் இருக்கின்றது. எனவே, நாம் அப்பகுதியைச் சேர்ந்த மக்களை, அறிவியலில் ஈடுபாடு ஏற்படுத்தித் தூண்டுதல் செய்ய வேண்டும், அதுவும் இளம் பருவத்திலிருந்தே.

நாம் ஏன் கண்டுபிடிப்புகளுக்கான சிந்தனை மாணவர்கள் பட்டம் பெற்ற பின்னர் தான் வரவேண்டும் என்று காத்திருக்கவோ, எதிர்பார்க்கவோ வேண்டும்? என்ற ஓர் எண்ணம் RA மஷேல்கர் எங்களுக்குக் கொடுத்தது. இளைய மனத்தினைத் தூண்ட வேண்டும், ஏனெனில் அவர்கள் புதுமையான அணுகுமுறைகளை அதிகப்படியாகக் கிரகித்துக் கொள்ளும் தன்மைப்படைத்தவர்கள்.

கபூர் மேலும் கூறுகையில், ‘‘வெறுமனே கற்பித்தல் உபகரணங்கள் அல்லது மின் உபகரணங்களோ கொடுப்பது மட்டும் போதாது, நல் முடிவுகளை ஈனுவதற்கு நமக்கு உட் பொருள், கற்பித்தல், வழிநடத்துதல், போன்றவற்றின் சரி விகிதக் கலவைத் தேவை’’. சிலநேரங்களில், முட்டாள்தனமான பாடத்திட்டம் பின்பற்றப்படுகிறது என்று கூறி உதாரணமாக "Kookabara sits on the old gum tree' என்ற நர்சரி பாடலைக் காட்டுகிறார்.

தலைமுறைகளாக, ஆசிரியர்கள் இந்தப் பாடலைக் கற்பிக்கிறார்கள் மற்றும் மாணவர்கள் அதை ஓதுகின்றனர். ஆனால் இந்தப் பறவை இந்தியாவில் காணப்படுவதில்லை; இது ஆஸ்திரேலியாவில் மட்டுமே காணப்படுகிறது. ‘ஆனால், இதில் முரண்பாடு என்னவென்றால் ஒரு கிராமப் பள்ளிக்கூட ஆசிரியர் கூடக் குழந்தைக்கு இந்தப் பாட்டைக் கற்பிக்க வேண்டும் மற்றும், ஆசிரியரோ, குழந்தையோ இந்தப் பறவை பற்றிக் கேள்விப்பட்டதே கிடையாது, காண்பது என்பது அதற்கு அப்பாற்பட்டது.

அவர் ஓர் உபநிகழ்ச்சியாக, ஒரு பள்ளிக்குச் சென்றபோது ஓர் ஆசிரியை “kookabara” என்ற வார்த்தையை உச்சரிக்கவே தடுமாறியதைத் தொடர்புபடுத்து கிறார். “அந்த ஆசிரியையோ, குழந்தைகளோடு அந்த பறவை என்னவென்று அறிந்தவர்களில்லை. அவர்கள் அது மரத்தின் மீது அமர்ந்திருக்கும் மனிதன் என்று கூட நினைத்திருக்கலாம். நாம் நமது பழைய பாடத்திட்டங் களுடன் கண்மூடித்தனமாக இருந்துள் ளோம், ஆகையால் நாம், அது எவ்விதம் பொருத்தமானது என்ற ஒரு கேள்வி கூட கேட்காமல் பாடம் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இந்த மனப்போக்கு மாறவேண்டும்.’’

திற்கும் தேவையான உபகரணங்கள் சுமார் ரூ.60,000 பெறுமானமுள்ளவை, ஆய்வுக்கூடம் கட்ட ரூ.1.75 லட்சத் திலிருந்து 2 லட்சம் வரை செலவாகும். ‘‘நாம் இப்போது 15 ஆய்வுக்கூடங்களின் செயல்பாடுகளுக்கான செலவுகளுக்கு ஆதரவு கொடுத்து வருகிறோம். அதற்கான மூலதனத்தொகை உலகளாவிய மானியத்தின் மூலம் தரப்படுகிறது. இதுவே கூட் டுச்செயல்பாடு’’ என்கிறார் கபூர்.

பகுப்பாய்வுச் சிந்தனையைத் தூண்டக்கூடிய இந்த ஆய்வகங்கள், கண்டுபிடிப்புகளைத் தூண்டும் என்ற நம்பிக்கையுள்ளது. மேலும், மாணவர்கள் அறிவியல் பாடங்களைக் கற்பதில் பெறும் நன்மைகளை அளவிடும். ‘‘இது ஒரு மாதிரித் திட்டம், இந்த ஆய்வுக்கூடங்கள் STEM-காகத் தயாரிக்கப்பட்ட ஆன்லைன் நிரல் வழியாகவும் முழுமைப்பெறும். ஒரு கட்டத்தில், ஓர் கருத்தாய்வு மேற்கொள்ளப்பட்டுத் தாக்கம் அளவிடப்படும்.

### வருங்காலக் கூட்டுமுயற்சிகள்

எதிர்காலத்தில் ரோட்டரியுடன் டாடா டெக்னாலஜீஸின் கூட்டு தொடர்பாக DGN டோத்ரே கூறுகையில், ‘‘அவர்கள் புனேவில் நிறுவி வரும் திறன் மேம்பாட்டு மையத்தில் கூட்டுமைப்பு வாய்ப்புத் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். கபூர் மேலும் கூறுகையில் ‘‘இந்நிறுவனம், புனேவில், புனே பொறியியல் கல்லூரியின் ஒத்துழைப்போடு நிறுவப்படும் அந்தக் கண்டுபிடிப்பு மையத்தின் கட்டிடங் களுக்கு மட்டுமே கிட்டத்தட்ட ரூ20 கோடியை முதலீடு செய்துள்ளது. நாங்கள் ஐஐடி பம்பாயினால் கண் காணிக்கப்பட்டும் டாடா அறக்கட் டளை யினால் ஸ்பான்ஸர் செய்யப்பட்டும் வருகிறோம்.’’

எல்லோரும், ஒரு கல்லூரியில் சேருவது, ஒரு பட்டம் பெறுவது மற்றும் பின்னர் ஒரு வேலையைத் தேடிக்கொள்வது தற்போதைய நிலைமையைச் சரி செய்வதற்கே இந்த யோசனை என்கிறார் அவர். ‘‘யாரும் ஓர் தொழில் முனைவோராகவேண்டும் என்று கல்லூரிக்கு செல்வதில்லை. இது ஏனென்றால் அவரிடத்தில் நிதி இருப்பதில்லை அல்லது தனது கருத்தை நிதி பெறக்கூடிய சரியான தளத்தில் வெளிப்படுத்த முடிவதும் இல்லை. பிரகாசமான கருத்துக்களைக் கொண்ட அத்தகைய மாணாக்கர்களுக்குச் சரியான வழிகாட்டுதல் இல்லை, அதிகபட்சம் இறுதியாண்டு திட்டப்பணியோடு அவர்களுடைய கண்டுபிடிப்பு நின்று விடுகிறது, ஆனால், இந்த இளைஞர்களை, அவர்களின் கருத்துக்களை நம்முடன் பகிர்ந்துகொள்ள ஊக்கப்படுத்த முடிந்தால், நாம் அவர்களுக்கு வழிகாட்டிகளுடன் ஓர் இணைப்பை உருவாக்கித்தர முடியும், வழிகாட்டிகள் இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ இருக்கும் மிகச்சிறந்த அல்லது மிகத் திறமை வாய்ந்த பேராசிரியர்களாக இருக்கலாம், ஏனெனில் டாடா, MIT போன்ற கல்வி நிறுவனங்களுக்கும் ஆதரவளிக்கிறார்கள்.

‘‘2019 ம் ஆண்டு ரோட்டரி தனது நூற்றாண்டை கொண்டாடவிருக்கிறது. இந்தியாவின் முதல் ரோட்டரி சங்கமான கல்கத்தா ரோட்டரி சங்கம், 1919 இல் தொடங்கப்பட்டது. அந்த வருடத்திற்கு நாங்கள் 100 மகிழ்ச்சியான பள்ளி களுக்குச் செய்யவிருக்கிறோம். அந்த முயற்சியிலும் டாடா டெக்னாலஜிஸுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம்’’ என்று டோத்ரே மேலும் கூறுகிறார்.■

# உதவும் கரங்கள்

ரஷீதா பகத்

22 ஆண்டுகள் நிஹல் கவிரத்னே யூனிலீவர் நிறுவனத்தின் உலகின் பல பகுதிகளில் பணியாற்றியவர். பின்பு அதிலிருந்து ஓய்வு பெற்று, 2005ஆம் ஆண்டு மும்பைக்கு திரும்பினார், அப்போது, மும்பையில் புற்றுநோய் சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற டாடா மெமோரியல் ஹாஸ்பிட்டலில் (TMH) அவரும் அவருடைய மனைவி ஷியாமாவும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும் அவர்களின் பெற்றோர் அங்கிருந்த நடைபாதையில் படுத்துக் கொண்டிருப்பதையும் பார்த்து மன வேதனைப்பட்டனர்.

TMH சில அறக்கட்டளைகளுடன் இணைந்து இலவச சிகிச்சையளிப்பதையும் வேறு தன்னார்வ நிறுவனங்கள் மருத்துகளுக்கு பணம் தருவதையும் கண்டறிந்தனர், மும்பை போன்ற ஒரு பெருநகரத்தில் தங்குவது ஒரு மிகப்பெரிய சவால். பெற்றோர்கள், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தங்கள் பிள்ளைகளுடன் இந்தியா முழுவதிலிருந்தும் வருகிறார்கள். குறைவான பணம் வைத்திருக்கும்போது, குடும்பங்கள் தர்மசாலாவில் (மலிவான விடுதி) தங்கள் கையிருப்பு காலியாகும் வரை தங்குகிறார்கள், அதன்பின் பெரும்பாலானோர் ரயில் நிலையங்கள் அல்லது மருத்துவமனைக்கு வெளியிலுள்ள பாதையில் தங்கி விடுகின்றனர். ''தெருக்களில் சுகாதாரமற்ற சூழல்களுக்கு இடையே தங்குவது ஏற்கனவே பலவீனமாக உள்ள குழந்தைகள் தொற்றுக்களுக்கு எளிதாக ஆளாகலாம். கீமோதெரபி உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தை பலவீனமாக்கி, சிகிச்சை முடிவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, குழந்தைகள் அடிக்கடி நியூமோனியா மற்றும் காசநோய்க்குப் பாதிக்கப்படுகிறார்கள்,'' என்கிறார் பாம்பே மிட்சிட்டி ரோட்டரி சங்கச் செயலாளர் மாலா ஸ்வரூப்.

*கேன்சர் நோயாளிகள் St. ஜூட் சென்டரில்.*



ரோட்டரி இண்டர்நேஷனல் டிஸ்ட்ரிக்ட் 3141-ஐச் சேர்ந்த ஒன்பது சங்கங்களில் இதுவும் ஒன்று, அவர்கள் இந்தத் திட்டப்பணிக்கு பெரியளவில் உதவிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் கவிரத்னே சொல்கிறார், ''நான் கொஞ்சம் அதிகமாக விசாரிக்கும் போது, மும்பையில் தங்குவது இந்த மக்களுக்கு ஒரு பெரிய சவால், தெருக்களில் அதிகமானோர் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்படுவதைப் பார்த்தேன். இதில் மோசமான விஷயம் என்னவென்றால் நிறைய குடும்பங்கள் தெரு வாழ்க்கையின் போராட்டத்தால் சோர்வடைந்து தங்கள் பிள்ளையின் சிகிச்சையை நடுவிலேயே நிறுத் திவிடுகின்றனர் என்பது தான்.

தங்கள் கிராமங்களுக்குச் செல்வதையும் அங்கே தங்கள் பிள்ளைகள் சில மாதங்களாவது வாழ்ந்து, பெருநகரத்தின் தெருவில் இருப்பதை விட தங்கள் வீடுகளில் நிம்மதியாகவும் மரியாதையுடனும் இறக்கலாம் என்பதையும் விரும்புகிறார்கள்.''

புற்றுநோய் பாதித்த குழந்தைகளில் அதிக இறப்பு விகிதத்திற்குக் காரணம் சிகிச்சையைப் பாதியில் கைவிடுவது தான் என்பதை கவிரத்னே பார்த்து, ஏதாவது செய்ய வேண்டும் என முடிவெடுத்தார். எனவே, இந்த



நோயுற்ற குழந்தைகளுக்கு ஒரு நாகரீகமானத் தங்கும் வசதியைத் தந்து, அவர்களின் பெற்றோர்களுடன் இலவசமாகத் தங்க ஒரு சுத்தமாக வும் சுகாதாரமான மையத்தை ஏற்படுத்த அவர்கள் வேலையைத் தொடங்கினார்கள். இப்படித்தான் செயின்ட் ஜூட் இந்தியா சைல்ட்கேர் சென்டர் (SJICC) உருவானது. நம்பிக்கையற்றோரை ஆதரிக்கும் புனிதரான ஜூடின் பெயர் இதற்கு பொருத்தமாக இருந்தது.

இந்த மையம், BDD சாவல் ஆஃப் பாரெலில் ஒரு சிதிலமடைந்த கட்டடத்தில் எட்டு குடும்பங்களுடன் சாதாரணமாக ஆரம்பிக்கப் பட்டது, முன்னாள் மும்பை போலீஸ் கமிஷனரும் பாம்பே மதர்ஸ் அண்ட் சில்ட்ரென் வெல்ஃபேர் சொசைட்டியின் தலைவருமான ஜூலியோ ரிபீரோ தாராளமனதுடன் வழங்கினார்.

இதுபோன்ற அனைத்து மையங்களுக்கும் முன்னுதாரணமாக இருக்க ஒரு மாதிரி-வடிவம் இருக்க உருவாக்கப்பட்டது. இந்த பத்து ஆண்டுகளில், SJICC மிகப்பெரிய அடிகளை எடுத்து வைத்து இப்போது ஐந்து நகரங்களில் - மும்பை (22), டெல்லி (4), கொல்கத்தா மற்றும் ஜெய்பூரில் மூன்று மற்றும் ஹைதராபாத்தில் ஒன்று என மொத்தம் 33 மையங்கள் உள்ளது. இந்த மையங்களில் 418 குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் தங்கலாம். நல்வினை நன்மையைச் சேர்க்கும் என்பது போல, டாடா மெமோரியல் ஹாஸ்பிட்டலுக்கு 2016ம் ஆண்டில் பாம்பே போர்ட் ட்ரஸ்டின் தாராளமான கொடை, இந்த அமைப்பிற்கு வழங்கியுள்ளது. காட்டன் க்ரீனில் உள்ள பயன்படுத்தாத மூன்று கட்டடங்கள், இரண்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி கொண்ட ஒரு அழகான குடியிருப்பாக மாற்றப் பட்டுள்ளது.





யோகா மற்றும் பாட்டு வகுப்பு.



## களத்தில் இறங்கிய ரொட்டேரியன்கள்

2013-14 ஆம் ஆண்டுகளில், D 3141 சேர்ந்த ரொட்டேரியன்கள், மதிப்புமிக்க இந்தத் திட்டப்பணியைப் பற்றி தெரிந்தபோது இதில் ஈடுபட முடிவு செய்தனர். புற்றுநோய் என்று சொன்னாலே ''ஆயுள் தண்டனை கிடைத்தது போல'' என்பதை குறிப்பிட்டுச் சொல்கிறார் மாலா. பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு புற்றுநோய் இருப்பதை கண்டறிந்த பின்பு மிகுந்த அழுத்தம் மற்றும் மனக்கவலையுடன் வருகிறார்கள்.''சிறுநகரங்கள் மற்றும் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் அடித்தட்டு மக்கள் தங்களுடைய குழந்தைகளைச் சிகிச்சைக்காக ஒரு பெரிய மெட்ரோ சிட்டிக்கு கொண்டு வருவதால் கடுமையான செலவினங்களைத் தாங்க வேண்டியுள்ளது. அத்துடன் வெளியிலிருந்து வரும் சாதாரண மக்களை, குறிப்பாக மும்பை அச்சுறுத்துகிறது. சில குடும்பங்கள் தங்களிடம் சொந்தமாக உள்ள கொஞ்ச நஞ்ச நிலத்தின் ஒரு பகுதி, மாடு அல்லது ஏதாவது ஒரு சொத்தை விற்று அடிக்கடி இங்கே வந்து தங்களுடைய பிள்ளைகளுக்காக சிகிச்சையை பார்க்கிறார்கள்.''

ஒன்பது ரோட்டரி சங்கங்கள் ஒன்றாகக் கரங்களைக் கோர்த்து, புற்றுநோயுள்ள குழந்தைகளுக்கு சேவை செய்ய பணத்தைத் திரட்டுகிறார்கள். 2013ம் ஆண்டிலிருந்து இப்போது வரை SJICC-ஐச் சார்ந்த பதினோரு குடும்பங்களுக்கு ஸ்பான்சர் செய்து ரூ.49.5 லட்சம் வரைத் திரட்டியுள்ளனர்.

கடந்த ஆண்டு மும்பையில் உள்ள இரண்டு மையங்களுக்கான மொத்தத்தொகை மும்பை மலபார் ஹில் ரோட்டரி சங்கம் மற்றும் மும்பை குயின் நெக்லஸ் ரோட்டரி சங்கத்தால் திரட்டப்பட்டது; நீண்ட காலமாக இருக்கும் இயக்குநர் மற்றும் இந்த அமைப்பின் உறுப்பினர்களில் ஒருவரான ரொட்டேரியன் ஜெய் திவான்ஜி மற்றும் ஸ்பான்சர் அன்ட் டோனர்ஸ் டீமின் மற்றொரு குழு உறுப்பினர் ஸ்விட்சர்லாந்து பாசிலைச் சேர்ந்த ஒரு PDG டாக்டர். அஜய் பாட்நகர், என ஒவ்வொருவரும் ரூ.1 கோடி திரட்டினர் என்று மாலா சொல்கிறார்.

புற்றுநோய் குழந்தைகளுக்காக மேலும் செயின்ட் ஜூட் மையங்கள் வேலூர் (டீம் லீடர் ரொட்டேரியன் செல்வின் ரத்னராஜன்), சென்னை (டீம் லீடர் PDG ரேகா ஷெட்டி, டிஸ்ட்ரிக்ட் 3232) மற்றும் கவுகாத்தியில் வந்து கொண்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில், ஜூரிச் பெல்வாயர் ரோட்டரி சங்கம், SJICC-ஐ நடத்துவதற்கு நிதிகளைத்

திரட்டிக்கொண்டிருக்கின்றது. மார்ச்சில் வேலூர் மையம் துவக்கப்பட உள்ளது, அதே வேளையில், சென்னை மற்றும் கவுகாத்தியில் இந்த ஆண்டில் தொடங்கப்படும்.




## SJICC இல் வசதிகள்

செயின்ட் ஜூட் குழந்தைகள் மையத் தில் ஒரு படுக்கை, மெத்தைக்கான இடைவெளி, பல அடுக்குகள் கொண்ட ஒரு இரும்பு அலமாரி அடங்கியவைகளை ஒவ்வொரு குடும்பமும் கொண்டுள்ளது. ஒரு நோயுற்ற குழந்தையும் அதனுடைய பெற்றோர்களையும் தங்கவைக்கலாம். ஒரு அடுப்பு கொண்ட கேஸ் ஸ்டவை ஒவ்வொரு குடும்பமும் பயன்படுத்தி ''சாப்பாட்டைத் தயாரிக்கவும், குடும்பப் பயன்பாட்டிற்கு அரிசி, சீனி, டீ மற்றும் எண்ணெய், பயன்படுத்துவதற்கான பாத்திரங்கள், தட்டுகள் அடங்கிய ஒரு இடமும் இலவசமாக பயன்படுத்தலாம். ஒவ்வொரு மையமும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு பொதுக் குளியலறையும் கழிப்பிடமும், ஒரு சமையல் மற்றும் சாப்பிடும் அறையும் ஓய்வெடுக்க பொது இடமும் கொண்டுள்ளது. அனைத்து மையங்களும் நெறிமுறைப்படி உருவாக்கப்பட்டுள்ளது.''

சிகிச்சை பெறும் மருத்துவமனைக் குச் செல்ல இலவச போக்குவரத்து தவிர, குழந்தைகளின் நோயெதிர்ப்புத் திறனை அதிகரிக்க ஊட்டச்சத்துகளும் இலவசமாக குடும்பங்கள் பெறுகிறது.

கல்வியியல் மற்றும் புத்து ணர்வளிக்கும் கலை சார்ந்த தெரபிகளான மியூசிக் தெரபி மற்றும் யோகா போன்றவையும் செயல்படுத்தப்பட்டு ஆதரவளிக்கிறது. வீடு மற்றும் பள்ளியிலிருந்து தொலைவில் சிகிச்சை பெறுவதால் பாதிக்கப்பட்ட குழந்தையின் கல்வியை தொடர அடிப்படை கம்ப்யூட்டர், ஆங்கிலம், வாசித்தல், கணக்கு மற்றும் அறிவியல் போன்றவைகளை புதுமையான மற்றும் ஈடுபாடு மிக்க வகையில் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ''D 3141-ஐச் சேர்ந்த ரொட்டேரியன்களான நாங்கள், இந்த NGO உடன் இணைந்து செயலாற்றுவது சந்தோஷமாக இருக்கிறது, இது நம்பிக்கை மற்றும் சந்தோஷத்தை புற்றுநோயுடன் போராடும் குழந்தைக்குத் தருகிறது'' என்று சொல்கிறார், SJICC உடன் தன்னார்வலராக இணைந்து நிர்வாக விஷயங்களில் உதவும் மாலா.



செயின்ட் ஜூடின் இந்த முயற்சி களுக்கு ரோட்டரி ஒரு பெருமைமிகு பார்ட்னர் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை......

## குணமடைந்த குழந்தைகள்

மருத்துவமனை வழங்கும் சிகிச்சை மற்றும் மருந்தைத் தவிர சௌகரியமான மற்றும் சுகாதாரமான இருப்பிடம், ஊட்டசத்தான உணவு மற்றும் அவர்களின் பெற்றோர்களின் பராமரிப்பைப் பெறும் இந்த குட்டி புற்றுநோயாளிகளுக்கு நன்றி. நிறைய குழந்தைகள் குணமடைந்து மற்றும் படிப்பைத் தொடர வீட்டுக்குச் சென்று வழக்கமான வாழ்க்கைக்குச் செல்கின்றனர்.

''புற்றுநோய்க்கு சிகிச்சை பெறும் ஒவ்வொரு குழந்தைக்கான ஆதரவை உறுதி செய்வதே லட்சியம், இந்தியாவின் முதன்மையான புற்றுநோய் மருத்துவ மனையான டாடா மெமோரியல் ஹாஸ்பிட்டல், எங்கெல்லாம் மருத்துவ மனைகளை நிறுவுகிறார்களோ அங்கெல்லாம் பார்ட்னராக இருக்கும் படி SJICC-யிடம் கேட்டுள்ளனர். பொருத்தமான மற்றும் சரியான நேரத்தில் கவனிக்கப்பட்டு முடிக்கப்பட்டால், இளம் வயது புற்றுநோயாளிகளின் குணப்படுத்தும் விகிதம் அதிகரிக்கும். SJICCயினால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் புற்றுநோயிலிருந்து மீண்டு வர உறுதி செய்ய முடிகிறது. அத்துடன் ரொட்டேரியன்களான நாங்களும் இந்த மனிதத்தன்மையுள்ள சேவையில் பங்கு கொள்வதில் முன்னேறியுள்ளோம் என்பதை உணருகிறோம்'' என்று மேலும் கூறுகிறார் மாலா.■

# நீரிழிவு விழிப்புணர்விற்கான வாக்கத்தான்

ரோட்டரி நியூஸ் குழு

RC நிக்டி, டி 3131 அக்ருதி சுப்ரீம் மருத்துவமனையுடன் இணைந்து நீரிழிவு குறித்து அறிவூட்ட நடத்திய வாக்க த்தானில் சுமார் 800 மக்கள் பங்கேற்றனர். துணை மேயர் திரு ஷைலஜா மோர் அவர்கள் தொடங்கி வைக்க அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் நடக்கத் தொடங்கும் முன்பு இரத்த சர்க்கரைப் பரிசோதனை செய்யப்பட்டது. ரோட்டரியினர் , வாக்கத்தான் பாதையில் அது குறித்த பேனர்களை வைத்தனர். 2 கி.மி. வாக்கத்தானைத் தொடர்ந்து காலை உணவும், நீரிழிவிற்கான உணவு, நீரிழிவினால் உணர்விழத்தல் மற்றும் நீரிழிவினால் அறுவை சிகிச்சைக்கு ஏற்படும் சவால் குறித்து விவாதிக்கும் கருத்தரங்கு நடைபெற்றது.

போக்குவரத்து காவலர்கள் நடையை ஒழுங்குப்படுத் தினர். தன்னார்வலத் தொண்டர்கள் தண்ணீர் பாட்டில்களையும் குளுகோன் டி பொட்டலங்களையும் வழங்கினர். அவசர காலத்திற்காக ஆம்புளன்ஸ் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. பங்கேற்ற அனைவருக்கும் டி சட்டை மற்றும் தொப்பிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு ரோட்டரி குறித்த மக்கள் பார்வையை மேலும் உயர்த்தியது.



# உடல்நலத்திற்கு சைக்ளோத்தான்

ரோட்டரி நியூஸ் குழு

ரூர்கேளா ராயல் ரோட்டரி சங்கம் டி 3261, சமீபத்தில் நகர மக்களின் உடல்நலத்திற்காக மாபெரும் சைக்ளோத்தானை நடத்தியது. அதில் புறநகரில் உள்ள 200 பழங்குடி மாணவர்களுட்பட 900 நபர்கள் பங்கேற்றனர். துணை ஆளுநர் அஜய் அகர்வால், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி, என்றார்.

சுமார் 1500 மக்கள், பங்கேற்பாளரை உற்சாகப்படுத்த விடியற்கலையில் கூடினர். நான்கு வகையான மாரத்தான்களை, எட்டு முறை தேசிய சாம்பியனான, துறைதேர்ந்த சைக்கிளாளர் மினதி மொஹபத்ராவும் **PDG** சஷி வர்வந்த்கரும் தொடங்கி வைத்தனர்.

முதல் பரிசு 11000, 2ஆம் பரிசு 5000 மற்றும் 3ஆம் பரிசு 3000 என்ற தொகைகளுடன் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக 16 கி.மீ. போட்டிப் பந்தயம் நடக்கும் போதே, இளைஞர்களுக்காக 16 கி.மி., 8 கி.மி., மற்றும் 4 கி.மி. வேடிக்கை பந்தயம் நடைபெற்றது. பார்வையாளர்களுக்காக பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. காலை 10 மணியளவில் நிகழ்ச்சி நிறைவடைந்த போது மகிழ்ச்சியான முகங்களும் சமூக ஊடக த்தின் பதிவுகளும் மக்கள் பார்வையில் சங்கத்தை உயர்த்தியது.

சைக்ளோத்தான் தலைவரும் தேசிய மற்றும் பன்னாட்டு மாரத்தான்களில் பங்கேற்ற புகழ்பெற்ற சை க்கிளாளருமான ராகேஷ் அகர்வால் இந்நிகழ்வின் பின்புல அறிவாக செயல்பட்டார். சங்க தலைவர் விவேக் லால் இதை 2018ம் ஆண்டிலும் நடத்த திட்டமிட்டார்.

கார்பரேட் நிறுவனங்களான ஸ்கான் ஸ்டீல்ஸ், ட்ராக் ட்ரெயில், ஆடி புபனேஷ்வர், கோல்ஃபீல்ட்ஸ் மற்றும் பெட்ரோல் ஆய்வு பாதுகாப்பு அதிகாரிகளும் இந்நிகழ்ச்சி ஆதரவாளர்களுடன் கலந்து கொண்டனர்.



# D 3160 மாவட்ட மாநாடு

ஜெயஸ்ரீ

இந்தியாவில் நடைபெறும் மாநாடுகள் எல்லாம் திரைப்படங்களைப் பார்ப்பது போன்று அமைந்துள்ளது. மாநாடுகளில் எல்லாம் அத்தனை சுவாரஸ்யம் பொங்கி வழிகிறது. அப்படி ஓர் அற்புதமான அனுபவம் கிடைக்கிறது! என்று பூரிப்படைகிறார் ஸ்வீடன் நாட்டிலிருந்து வந்துள்ள ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநரும் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் பிரதிநிதியுமான மைக்கேல் ஆல்பெர்க் (Mikael Ahlberg). இப்படி அவர் பேசியது, DG மதுபிரசாத் குருவடி ஏற்பாடு செய்திருந்த 3160 மாவட்ட ரோட்டரி சங்க மாநாட்டில்தான்.

இங்குள்ள ரோட்டரி சங்கத்தினர் ரொம்பவும் நட்பும் அன்பும் காட்டுகிறார்கள். சேவை புரிவதில் அர்ப்பணிப்பு உணர்வுள்ளவர்கள். இங்கே இருக்கும்போதுதான், இந்தியாவில் ரோட்டரி இயக்கம் எப்படி வலுவாக இருக்கிறது என்பது விளங்கும் என்றார் அவர்.

ஆல்பெர்க்குடன் வந்திருந்த அவரது மனைவி ஷார்லட் (Charlotte), இந்தியா எப்போதுமே எங்களுக்குச் செல்லமான நாடு. ரோட்டரி சங்கத்தினரிடம் பரவியுள்ள இந்தியர்களின் ஆற்றல் அவர்கள் காட்டும் அன்பு, இந்தியப் பண்பாடுதான் முக்கிய காரணம். அது மட்டுமல்ல, இங்கே ரோட்டரி இயக்கம் மேலும் மேலும் வளர்வதற்கான வாய்ப்புகள் இருப்பதைப் பார்க்கிறேன் என்றார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டுக்கு சித்ரதுர்கா RCs, கோட்டை சின்முலாத், வின்ட்மில் சிட்டி ஆகியவை ஏற்பாடு செய்துள்ளன. இந்த மாநாட்டில் மொத்தம் 1,200 பேராளர்கள் பங்கேற்றனர்.

*RID மைக்கெல் ஆல்பெர்க், PRID அசோக் மஹாஜன் மற்றும் ஷார்லட் அவர்களுக்கு பூர்ணகும்ப மரியாதை வழங்கப்பட்டது. DG மதுபிரசாத் மற்றும் DGND சின்னப்ப ரெட்டி அருகில் உள்ளனர்.*



மாநாட்டின் குழுத் தலைவர் M.K. ரவீந்திரா, அவரது மனைவி, வேதா ஆகியோர் கொண்ட குழுவினர் அளித்த பாரம்பரியமான அன்பான வரவேற்பைக் கண்டு ஆல்பெர்க், அவரது மனைவி ஷார்லட் இருவரும் நெகிழ்ந்து போனார்கள்.

சம்ஸ்கிருத ஸ்லோகங்கள் முழங்க, அவர்களுக்கு பூர்ணகும்ப மரியாதை அளிக்கப்பட்டது. PRID அசோக் மகாஜன், இந்திய விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப நிறுவனத் தின் (Indian Institute of Space Science and Technology) நிறுவன இயக்குநர் டாக்டர் B.N. சுரேஷ் ராவ் ஆகியோர் சி றப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றுச் சி றப்பித்தனர்.

PRID மகாஜன் 'கொடுப்பதுதான் வாழ்க்கை' என்ற தலைப்பில் பேசினார். ஆதித்ய பிர்லா குழுமத் தின் தலைவர் ராஜஸ்ரீ பிர்லாவின் தாராளமான மனத்தைப் பாராட்டினார். பிர்லா குடும்பத்தினருக்கு பணத்தின் அருமை தெரியும். அதனால், அதை முறையாகவே செலவிடுவர். ராஜஸ்ரீ அம்மையாரைப் போன்ற நல்ல மனம் படைத்தவர்கள் செய்த உதவியினால், நமது போலியோ நிதியும் உலகத்தை போலியோ இல்லாமல் ஆக்குவதற்குத் துணை புரிந்தது என்று குறிப்பிட்டார்.

PDG வத்லாமணி (D 3150) அண்மையில் சுமார் இரண்டரை லட்சம் டாலர் அளவுக்கு நன்கொடை அளித்து ள்ளார். அவரிடம் யாரும் நன்கொடை கேட்கவில்லை. தாமாகவே முன்வந்து பரந்த மனத்துடன் அளித்திருக்கிறார் என்றார் மகாஜன்.

தற்போதைய நன்கொடை இரண்டரை லட்சம் டாலர். அதை மேலும் அதிகரித்து 265,000 டாலர் திரட்டுவது என்று இலக்கு நிர்ணயிக்கவேண்டும் என்று மகாஜன் கேட்டுக் கொண்டார். அதற்கு DG மதுப்பிரசாத் இசைவு தெரிவித்தார்.

இதற்காக, அவரது சொந்த ஊரில் உள்ள சித்ரதுர்கா ரோட்டரி சங்கம் ஏற்கெனவே, தனது 56 உறுப்பினர்களிடமிருந்து 40,000 டாலர் திரட்டியுள்ளது.

இதுபோன்ற சேவைகளுக்கு உலகளாவிய மானிய உதவியைப் பெறுவது குறித்து வத்லாமணி 'மானியம் பெறுவது எப்படி?' என்ற தலைப்பில் நடந்த மாநாட்டு அமர்வில் விவரித்தார். ரோட்டரி நிறுவனத்துக்கு (TRF) அளிப்பதை ஊக்குவிக்கும் வகையில் அவர் பேசினார்.



ரோட்டரி நிறுவனத்தின் மானிய உதவியில் குண்டூர் மாவட்டத்தில் உள்ள ரோட்டரி சங்கம் எப்படி அரசு மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக் கூடத்தை அமைக்க முடிந்தது என்று அவர் விளக்கினார். குண்டூர் ரோட்டரி சங்கத்தால் ஆறாயிரம் ரூபாய் மட்டுமே நன்கொடை அளிக்கும் நிலை இருந்தபோது, அந்த சங்கத்தால் ரூ.3 கோடி அளவு மதிப்பிலான திட்டத்தை நிறைவேற்ற இயன்றதற்கு அந்த மானியமே காரணம் என்றார் அவர்.

ரோட்டரி நிறுவனத்திடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று முன்னாள் மாவட்ட ஆளுநர் டிக்கு (D 3150) ரோட்டரி சங்கத்தினரைக் கேட்டுக் கொண்டார். அந்தப் பலன்களைப் புரிந்துகொண்ட பிறகே, நிறுவனத் தின் சக்தியை உங்களால் மதிப்பிட முடியும். அப்போதுதான் உதவி செய்யவேண்டும் என்ற உத்வேகம் உங்களுக்கு ஏற்படும் என்றார் அவர்.

புகழ்பெற்ற விஞ்ஞானி விக்ரம் சாராபாய், மறைந்த குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் ஆகியோரை நினைவுகூர்ந்து புகழஞ்சலி செலுத்திப் பேசிய டாக்டர் ராவ், இந்தியாவின் விண்வெளித் திட்டத்தில் ஏற்பட்டுள்ள குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தையும் அதனால் ஒவ்வொரு துறைக்கும் கிடைக்கும் பலன்களையும் அழகாக விவரித்தார்.

தொழில்நுட்பம் என்னவோ கடுமையான பணிதான். ஆனால், உங்களது உயரிய இலக்குகளை நிர்ணயிக்கும்போது, ராக்கெட் வேகம் என்றுதானே சொல்கிறீர்கள்? என்று குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் நட்சத்திரங்களைப் போல பலர் பேசினர். ரோட்டரி பரிமாணம் மற்றும் அமெரிக்காவின் ஈவான்ஸ்டன் நகர ரோட்டரி உத்திக்கான இன்டர்நேஷனல் மேலாளர் (RI's Manager for Evaluation and Strategy) ஹில்லாரி லீவ், ராஜதந்திர திட்டங்களை விவரித்தார்.

வலியை வலிமையாக்குவது எப்படி என்று உளவியல் நிபுணர் லாவண்யா பட்டேல் பார்வையாளர்களிடம் அழகாக விளக்கினார்.

திருநங்கை மாநாட்டில் பங்கேற்ற திருநங்கை உரிமைகளுக்கான சமூகப் போராளி லட்சுமி மாய், பெற்றோர்கள் தங்களது ஆண் குழந்தைகளுக்கு நிறைய வழிகாட்ட வேண்டும், பெண்களை எப்படி மதித்து நடக்க வேண்டும். அவர்களது உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயல்படவேண்டும் என்றெல்லாம் ஆண் மகன்களை வலியுறுத்திப் பழக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அப்போதுதான் பெண் சிசுக் கொலை, கருவிலேயே பெண்

இருப்பது தெரியவந்தால், கொல்வது போன்ற கொடுமைகள் குறைய வழிகிடைக்கும் என்றார் அவர்.

ரோட்டரி சங்கத்தினர் திருநங்கைகளுக்காகத் தனி இரவு தங்குமிடங்களை (night shelters) அமைக்க உதவும்படி கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் குடும்பத்தால் உதறித் தள்ளப்பட்ட அவர்கள் தெருவோரம் வசிக்கும் அவலம் நீடிக்கும். அது அவர்களுக்கு ஆபத்தும் கூட என்றார். மூன்றாம் பாலினமான திருநங்கைகளுக்குத் தொழில் பயிற்சி அளிக்கவேண்டும் என்றும் லட்சுமி மாய் யோசனை தெரிவித்தார்.

அவர்களுக்கு வேண்டியது உங்களது அனுதாபமும் இட ஒதுக்கீடும் அல்ல. கண்ணியமாக வாழ்வதற்கு வழி செய்தாலே போதும் என்று நெகிழ்ச்சியோடு கேட்டுக் கொண்டார். கல்வியாளர் குருராஜ் கர்ஜாகி அறிவார்ந்த உரையை பார்வையாளர்கள் அனைவரும் கேட்டுப் பயன் பெற்றனர். அவரது உரையில் பல பயனுள்ள தகவல்கள் கிடைத்தன.

## அதன் தேன் துளிகள் சில

- யார் தனக்காக வாழ்கிறார்களோ, அவர்களைக் காலம் மறந்து விடும். மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், அன்னை தெரசா போல மற்றவர்களுக்காகவே வாழ்கிறவர்கள் எப்போதும் மறக்கப்படுவதேயில்லை.
- மற்றவர்கள் உங்களிடமிருந்து எதையாவது எதிர்பார்க்கிறார்கள் என்றே எப்போதும் நினைக்க வேண்டாம். உங்களது தோளின் மீது சாய்ந்து ஆறுதல் தேடுவதற்கும் உங்களை அவர்கள் அணுகலாம்.
- மற்றவர்களது வேலை சின்னதாக இருந்தாலும், அதன் மீது அக்கறை செலுத்துங்கள். அந்தச் சின்ன வேலை அவர்களைப் பொறுத்த வரையில் மகத்தான சாதனைக்கு உரியதாக இருக்கலாம்.
- ஆசிரியர் தொழில் மட்டும்தான் எதிர்கால வாழ்க்கையுடன் உரையாடக் கூடியது.
- யாரும் நீங்கள் சொல்வதைப் பின்பற்ற மாட்டார்கள். நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதைத்தான் பின்பற்றுவார்கள்.




டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீராங்கனை நைனா ஜஸ்வால், கூகுள் பையன் (Google Boy) என்று வருணிக்கப்படும் அவரது சகோதரர் அகஸ்தியா, இருவரும் நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கான புதுமையான முறையை நிகழ்த்திக் காட்டினர். பல்வேறு தகவல்களைச் சங்கிலியைப் போல் தொடர்புபடுத்திக் கொண்டால், அனைத்தும் நினைவில் நின்றுவிடும். மனப்பாடம் செய்வதை விட இது தான் மிகவும் எளிமையானது, வெற்றிகரமான வழியும் கூட என்று அவர்கள் விளக்கினர். இதை அங்கே கூடியிருந்த பார்வையாளர்கள் உற்சாகமாக கைதட்டிப் பாராட்டினர். தனது எட்டு வயதிலேயே 10ம் வகுப்புத் தேர்வை பூர்த்தி செய்துவிட்டதாகக் கூறிய நைனா எனக்கு இப்போது 17 வயதுதான் ஆகிறது. இந்த வயதில் டாக்டரேட் பட்டம் பெறுவது நான் மட்டுமாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறினார்.

அவருக்குச் சளைக்காத குழந்தை மேதையான அகஸ்தியா கடந்த ஆண்டு வரலாற்றுச் சாதனை படைத்துவிட்டார். 11 வயதிலேயே இன்டர்மீடியட் தேர்வுகளை (Intermediate examinations) முடித்துவிட்டதாகக் கூறினார்.

### சாதனைகளும் அங்கீகாரங்களும்

நெல்லூர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த வோமினா நாகா சதீஷ்பாபு ஆகியோர் ரோட்டரி நிறுவனத்துக்கு நன்கொடை அளித்ததற்கு DG மதுப்பிரசாத் பெரிதும் பாராட்டிச் சிறப்பித்தார். நெல்லூர் ரோட்டரி சங்கம் மாவட்டத்தின் முதல் நன்கொடையாளர் என்பது குறிப்பிடத் தக்கது. அது போல் தொடர்ந்து 25 ஆண்டுகளாக ஆண்டுதோறும் ஆயிரம் டாலர் (சுமார் ரூ.65 ஆயிரம்) நன்கொடை அளித்து வரும் டாக்டர் சஜ்ஜன் குமாரும் நிகழ்ச்சியில் பாராட்டப்பட்டார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் ரோட்டரி சேவையில் மதிக்கத் தக்க பணியாற்றியதற்கான விருது பெற்றதற்காக முன்னாள் மாவட்ட ரோட்டரி ஆளுநர் சுரேந்திர ரெட்டி நிகழ்ச்சியில் பாராட்டப்பட்டார்.

ஏழைகளுக்கு இலவசமாக 65 ஆயிரம் பேருக்குக் கண்புரை அறுவைச் சிகிச்சை (cataract surgeries) நடத்தியதைப் பாராட்டி டாக்டர் அக்பர் சாஹேப் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அதிக அளவில் நன்கொடை அளித்து உதவியவர்களை ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநரும் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் பிரதிநிதியுமான மைக்கேல் ஆல்பெர்க் பாராட்டி சிறப்பித்தார். நிகழ்ச்சியின்போது, மாவட்ட ஆளுநர் உடன் இருந்தார். ஹோஸ்பெட் ரோட்டரி சங்கம் PHF club என்ற சிறப்பு அங்கீகாரம் பெறுவதற்கான இசைவு அளிக்கப்பட்டது.■

# ரூபெல்லா விழிப்புணர்வை அதிகரிப்பது

ரோட்டரி நியூஸ் குழு




இந்தியாவின் ரோட்டரியினர், தடுக்கப்படக்கூடிய நோய்களான ரூபெல்லா, மிசெல்ஸ், காசநோய் போன்ற நோய்களுக்கும் பொருத்தமான நோய்த்தடுப்பை அனைவருக்கும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட தயாராகிக்கொண்டிருக்கும் போது, ஒரு ரூபெல்லா அவேரத்தான் வாக் நிகழ்ச்சியை, சென்னை எலியட் கடற்கரையில், இன்னர் வீல் டிஸ்ட்ரிக்ட் 323 நடத்தியது.

ரூபெல்லாவின் தீவிரத்தன்மையை முன்னாள் IW தலைவர், நளினி பிரபாகர் விளக்குகையில் இது எவரையும் பாதிக்கக் கூடிய, ஒரு மிதமான தட்டம்மையின் வடிவமாகும். ஆனால் ''அதிகப் படியான ஆபத்தில் இருப்பது கர்ப்பிணி பெண் தான்; ஏனென்றால் அவள் கர்ப்ப காலத்தில் ரூபெல்லா வால் பாதிக்கப்பட்டால், குழந்தை குறைபாடுகளுடன் பிறக்கலாம். ஆனால் ஒரேயொரு தடுப்பூசி, போடுவதால் தடுக்கப் படலாம். ''ஒவ்வொரு பெண்ணும் 15 வயதில் அல்லது திருமணத்திற்கு முன்பே போட்டுக் கொள்ள வேண்டும்.''

ஏறக்குறைய 300 இன்னர் வீல் உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள், ரூபெல்லாவின் ஆபத்தையும், தடுப்பூசியின் முக்கியத்துவத்தையும் விவரிக்கும் பதாகைகளை ஏந்திய படி அணிவகுத்து சென்றனர். நளினியைத் தவிர, இந்த பொதுக் கல்வி பிரச்சாரத்தைத் திட்டமிடுவதில் ஈடுபட்ட மற்றவர்கள் மாவட்ட தலைவர் பத்மா பிரீதா சுமன்த் மற்றும் விசேஷ திட்டங்கள் ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி ஆவார்.

இந்த நடை, காவல்துறை உதவி ஆணையாளர், ரவிந்திரன் கொடி யசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.

---

# ரோட்டரி, ஆறு மேன்மக்களை கவுரவிக்கிறது

ரோட்டரி நியூஸ் குழு



ரோட்டரி சேவா அபியான் திட்டத் தின் கீழ் ஆறு மேதகு நபர்கள் பம்பாய் ஸீஃபேஸ் ரோட்டரி சங்கம் D3141-னால், தொழிற்மேன்மை விருதுகளுடன் கவுரவிக்கப்பட் டனர். முதல் முறையாக ச ங்கம், தொடக்கநிலைத் தொழில் நிறுவனங்களின்பால் கவனம் செலுத்துகிறது என்றார் தொழிற்சே வைக் கான பொறுப்பு இயக்குனர் மனிஷி எம் வோரா.

ராஜ் நெரவதி, ஹைத்ராபாத் தில் உள்ள, சைகைகள் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய ஸ்மார்ட் கடிகாரங்களை உற்பத்தி செய்யும் 'ஹக் இன்னோவேஷன்ஸ்' நிறுவனத் தின் நிறுவனர் மற்றும் மனிதர்களின் முகங்களை அடையாளங் காணகூடியதும், பல்வேறு மொழி களில் உரையாட கூடியதுமான மனித-உரு ரோபோட்டை வடிவமைத்த பெங்களூரில் உள்ள 'இன்வென்டோ ரோபாட்டிக்ஸ்' நிறுவனத்திலிருந்து பாலாஜி விசுவ நாதன் ஆகிய இருவர், புதிய தொழிற்முயற்சிப் பிரிவுக்கான விருதை பகிர்ந்துகொண்டனர்.

விருது பெற்ற மற்றவர்கள், எடெல்வையிஸ் குழும நிறுவனர் ராஜேஷ் ஷா மற்றும் ISROவின் ஒரு பிரிவான LPSC விஞ்ஞானி ரேவதி ஹரிஹரகிருஷ்ணன் ஆவர்.

இசையில் புகழ்பெற்ற இரட்டையர் கல்யாண்ஜி-ஆனந்த்ஜி அவர்களின் இளைய சகோதரரான இசை அமைப் பாளர் ஆனந்த்ஜி விர்ஜி ஷா மற்றும் பாம்பே மருத்துவமனை மருத்துவ அறிவியல் நிலையத்தில் பயிற்றுவிக்கும் நரம்பியல் மருத்துவர் டாக்டர் பீம் சென் சிங்கல் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளைப் பெற்றனர்.

# ரோட்டரி நிறுவனத்துக்குப் பங்களிப்பு செலுத்துவோம்!

ரஷீதா பகத்

ரோட்டரி அமைப்பினிரிடையில் உதவிக்குக் கைகொடுக்கும் பழக்கத்தை ஏற்படுத்த, வரையறுத்த முதலீட்டுத் திட்டம் (SIP) குறித்து பரிசீலிக்கப் பட்டு வருகிறது என்று முன்னாள் மாவட்ட ஆளுநர் (PDG) வினோத் பன்சால் தெரிவித்தார். ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரின் பிரதிநிதியாக (RIPR) நியமிக்கப்பட்ட அவர், ரோட்டரி இன்டர்நேஷனல் மாவட்டம் 3261 அமைப்பின் மாவட்ட மாநாட்டில் அவர் பேசினார். உயர்ந்து வரும் 3261( Rising 3261) என்ற தலைப்பிலான இந்த மாநாடு மத்தியப் பிரதேசம் கன்னாவில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பேசிய பன்சால், ரோட்டரி உறுப்பினர்கள் அவரவர் விருப்பம், சக்திக்கு ஏற்றபடி TRFற்கு (The Rotary Foundation) மாதந்தோறும் பங்களிப்பாக தொகையைச் செலுத்தும் படி கேட்டுக் கொள்கிறேன். அத்தொகை ரூ.100 ஆகவோ, ரூ.1,000 ஆகவோ அல்லது அதற்கு மேலும் கூட இருக்கலாம். அது முக்கியமில்லை. அவ்வாறு தொகையைக் கொடுக்கும் நல்ல பழக்கத்தை வளர்ப்பதுதான் முக்கியம் என்றார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் இயான் ரிஸ்லியின் (RI President Ian Riseley) பிரதிநிதி என்ற வகையில் தலைவரின் செய்தியாகப் பல விஷயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், ரோட்டரி சங்கம் 113 ஆண்டுப் பழமை வாய்ந்த வலுவான அமைப்பு. பல சாதனைகளை நிகழ்த்தி யிருக்கிறது. இதைப் போன்ற பல சமூக அமைப்புகள் இடையில்



RIPR வினோத் பன்சால் RC விலாஸ்பூர் குயின்ஸ் என்ற புதிய சங்கத் துவக்க விழாவில். அருகில் DG ஹர்ஜித் ஹுரா, சங்கீதா பன்சால் மற்றும் சங்க தலைவர்கள்.

செயல்படாமல் போனாலும், தொடர்ந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக உலக மக்களுக்கு ரோட்டரி அமைப்பு சேவையாற்றி வருகிறது. இதற்குக் காரணம் தனது கொள்கை கோட்பாடுகளை உறுதியாகப் பின்பற்றி வருவதுதான். அவற்றில் ஒரு கோட்பாடு மாறிவரும் சமூகச் சூழலின் தேவைக்கு ஏற்ப மாறிக் கொண்டிருப்பது ஆகும். ரோட்டரி சங்கம் தொடர்ந்து இன்னும் நூறாண்டு களுக்கு நீடிக்க வேண்டுமானால், இந்த நிலை தொடர வேண்டும் என்று நமது தலைவர் தெளிவாகக் குறிப் பிட்டுள்ளார்.

அப்படிப்பட்ட நிலையை உறுதி செய்யவேண்டுமானால், தற்போதைய உறுப்பினர் அமைப்பைப் போலவோ அமைப்போ போதாது. ரோட்டரி அமைப்புகளின் உறுப்பினர்களில் 90 சதவீதம் பேர் ஐம்பது வயதுக்கு மேற்பட்டோராக இருக்கிறார்கள். சமுதாயத்தில் அங்கமாக இருக்கும் பெண்கள், இளைஞர்கள் என்ற இரு பிரிவினரே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் போதிய அளவில் ரோட்டரி அமைப்பில் பிரதிநிதிகளாக இல்லை. இந்த நிலை மாறவேண்டும் என்றார்.

சமூகச் சூழலைப் பாதுகாக்க மிகுந்த முனைப்புகள் தேவைப்படுகின்றன. சீரழிவைத் தடுக்க வேண்டும். நீடித்த திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று ரிஸ்லி கூறியிருக்கிறார். ரோட்டரி அமைப்புகளின் பணி வெறும் கிணறுகளைத் தோண்டுவது போன்றவை அல்ல. தோண்டிய கிணற்றில் நீண்ட காலத்துக்கு சமுதாயத்துக்கான தண்ணீர் கிடைத்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதுதான் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் கூறியிருக்கிறார் என்றார் பன்சால்.

ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய உண்மையான தகுதி எல்லோரையும் தன்னுடன் அரவணைத்துச் செல்லும் அவரது திறமையும் ஒருங்கிணைந்து செயல்படும் போக்கும்தான்.

அந்த வகையில் D 3261 ஆளுநர் ஹர்ஜித் ஹூரா அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

அந்த மாவட்டம் தனது கீழே வருவதால், அந்த ஆளுநர் எப்படித் தலைமைப் பண்புடன் தனக்கே உரிய வகையில் பல்வேறு பண்பாடுகளின் சூழலில் சவால்களையும் எதிர்கொண்டு செயல்படுகிறார் என்பதை நேரில் கூர்ந்து கவனிக்கமுடிந்தது. இந்த மாவட்டத்தில் மூன்று மாநிலங்களின் பகுதிகளை உள்ளடக்கியதாக பல்வேறு நிலவியல் சூழல்கள் இருக்கும்போதும் நன்றாகப் பணியாற்றியிருக்கிறார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் நிலையிலும் சாதனைகளைப் புரிந்து வெற்றி கண்டிருக்கிறீர்கள் என்றும் வினோத் பன்சால் கூறினார்.

அவற்றில் ஒன்று ராய்ப்பூர் சத்ய சாய் சஞ்சீவினி மருத்துவமனைக்கு உலகளாவிய மானியத்துடன் ரூ.3 கோடியில் நவீன ஆய்வகங்களை அமைத்துக் கொடுத்தது அவற்றில் குறிப்பிடத் தக்க சேவையாகும். உறுப்பினர்கள் எண்ணிக்கையை எதிர்பார்த்ததை விட அதிகரித்திருக்கிறார். அதற்காகப் பாராட் டப்படவேண்டும்.

இந்த மாவட்ட ரோட்டரி அமைப்பினர் பலரும் பால் ஹாரிஸ் ஃபெலோ (Paul Harris Fellow) என்ற கௌரவத்தைப் பெற வேண்டும். அதைப் போல் மிகப் பெரிய நன்கொடையாளராகவும் ஆக வேண்டும் என்று கூறிய பன்சால் 2007ம் ஆண்டில் தான் பெரிய நன்கொடையாளராகச் (Major Donor) சிறப்பு பெற்றதாகக் கூறினார்.

எப்போதெல்லாம் TRFக்கு தாராளமாக நன்கொடை அளிக்கிறேனோ அப்போதெல்லாம் கடவுள் எனக்கு அதை விட அதிகமாகவே தருகிறார் என்றார் அவர்.



### Rising 3261 எதற்காக?

தான் மூன்று ஆண்டுகளுக்கு முன் மாவட்ட ஆளுநராக (DGN) நியமனம்

பெற்றபோது, ஜெய்ப்பூர் மாநாட்டில் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர், D 3261 அதிகம் செயல்படாத மூன்று மாநிலங்களில் ஒன்று எனச் சுட்டிக் காட்டினார்.

எனக்கு சங்கடமாக இருந்தது. எங்களது முன்னாள் மாவட்ட ஆளுநர்களிடம் இதற்கான காரண த்தைக் கேட்டேன். காரணம், குறைவாகப் பங்களிப்பு செலுத்துவதே என்று அவர்கள் பதிலளித்தனர். சமூக சேவை அமைப்புக்கு பணம் கொடுப்பதை வைத்து தர அளவுகோல் நிர்ணயிப்பது மட்டுமே பொருத்தமான காரணமாக இருக்க முடியாது என்று கூறினேன்.

ஆனால், ரோட்டரி இன்டர் நேஷனல் இயக்குநருடன் பேசும் போது, அவர் இப்படிக் கேட்டார்:

ஹர்ஜித், உங்கள் மாவட்டத்தில் எவ்வளவு சங்கங்கள் பாராட்டிதழைப் பெற்றிருக் கிறார்கள் தெரியுமா? 70 சங்கங்களில் ஒன்று RC சம்பல்பூர் மட்டுமே (என்னுடைய சங்கம்). 2,400 ரோட்டரி சங்கத்தினரில் 140 பேர் மட்டுமே உங்கள் மாவட்டத்தில் ‘எனது ரோட்டரி’ யில் (My Rotary) பதிவு செய்திருக்கிறார்கள். இதனால்தான் உங்களது பெயர் கடைசியில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

இப்படிச் சொன்னதை அடுத்து நான் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டேன். ஜூலை 1ம் தேதி மாவட்ட கவர்னராகப் பொறுப்பேற்றேன். அப்போது D3261 மாவட்டத் திலிருந்து 185 பேர் மட்டுமே எனது ரோட்டரி மாநாட்டுக்குப் பதிவு செய்திருந்தார்கள்.





DG ஹர்ஜித் ஹூரா, அவர் மனைவி ராணி PDG சுபாஷ் சாஹுவை கௌரவிக்கிறார்.

நான் பொறுப்பேற்ற பின் அந்த எண்ணிக்கையை 1,000 ஆக உயர்த் தினேன். அதில் மாவட்ட பயிற்றுநர் முன்னாள் மாவட்ட ஆளுநர் ஷம்பு ஜகத்ராம்கா, ரோட்டரி தலைவர் F.C. மோஹன்டி, வெப் மாஸ்டர் ஜதீந்தர் சர்மா ஆகியோர் பாராட்டுக்கு ரியவர்கள் என்றார்.

இன்னும் நான்கு மாதங்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 2,000 மாக உயரும் என்றும் அவர் கூறினார்.

தனக்கு அறுவைச் சிகிச்சை நடந்த காரணத்தால் ரோட்டரி சங்க செயல்பாடுகளில் 45 நாட்கள் ஈடுபட இயலாமல் போனது என்று குறிப்பிட்ட அவர், மாவட்ட ஆளுநராகப் பொறுப்பேற்றபோது, 3 ரோட்டரி சங்கங்கள் தங்களது நிலுவைத் தொகையைச் செலுத்தாததால் மூடப்பட்டன. இது தவிர ஐந்து சங்கங்களின் செயல்பாடுகளும் நிறுத்தப்பட்டுவிட்டன என்று கூறிய ஹூரா, அந்த நடவடிக்கைகளுக்குத் தனது பணி காரணமல்ல என்று கூறினார்.

இன்று வரையில் 150 உறுப் பினர்களைச் சேர்த்திருக்கிறோம். உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான இலக்கினை எட்டுவதற்காக ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் சி. பாஸ்கரிடம் உறுதி அளிக்கப்பட் டுள்ளது என்றும் கூறினார்.



**வலது புரத்திலிருந்து** : *D 3262 PDG அசோக் மஹாபாத்ரா, D 3261 PDGs SP சதுர்வேதி, சசிவர்வண்கர், D 3262 DG ஹர்ஜித் ஹுரா, PDG ராகேஷ் தவே மற்றும் DGE நிகிலேஷ் த்ரிவேதி.*

சம்பல்பூர் கிரேட்டர் ரோட்டரி சங்கம், ராய்ப்பூர் ரோட்டரி சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் பால் ஹாரிஸ் ஃபெலோ (PHF) என்ற கௌரவத்தை ஒரே நாளில் பெற்றுள்ளனர்.

முழுக்க முழுக்க பெண் உறுப்பினர்களை மட்டுமே கொண்ட விலாஸ்பூர் குயின்ஸ் ரோட்டரி சங்கத்துக்கு ஹுரா மாநாட்டில் பட்டயமளித்து சிறப்பித்தார்.

ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் இயான் ரிஸ்லியின் அறிவுறுத்தலின்படி இன்னொரு ரோட்டரி சங்கத்தை ஜபல்பூர் குயீன்ஸ் நகரில் தொடங்க இருக்கிறோம். அதற்கான விண்ணப்பப் படிவம் அனுப்பியாகிவிட்டது. பட்டய அங்கீகாரம் சில நாளில் கிடைத்துவிடும்.

இவை தவிர மேலும் மூன்று குயீன்ஸ் கிளப்கள் (மகளிர் கொண்ட ரோட்டரி சங்கங்கள்) தொடங்கப்பட இருக்கின்றன. இவை தவிர ஐந்து ரோட்டரி சங்கங்களும் தொடங்கப்பட உள்ளன. எனது பொறுப்பினை வரும் ஜூன் 30ஆம் தேதி ஒப்படைக்கும் சமயத்தில் மேலும் மொத்தம் 400 உறுப்பினர்கள் சேர்க்கப்படுவர் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று அறிவித்தார். அந்த அறிவிப்பை மாநாட்டில் பங்கேற்றோர் கைதட்டி வரவேற்றனர்.

## TRF பங்களிப்பில் சாதகமான நிலை

TRFக்கு பங்களிப்புச் செலுத்துவதிலும் சாதகமான நிலை உருவாகிவருகிறது மாவட்ட ஆளுநர் குறிப்பிட்டார். நமது மாவட்ட அமைப்பு உருவானதிலிருந்து ஆறு பெரிய நன்கொடையாளர்கள் மட்டுமே இருந்தனர். அவர்கள் மொத்தம் 10 ஆயிரம் அமெரிக்க டாலர் அளவுக்கு பங்களிப்பு செலுத்தினர். ஆனால், எட்டே மாதத்தில் நன்கொடையாளர்களின் எண்ணிக்கையில் முன்னாள் மாவட்ட ஆளுநர் விவேக் தன்கா உள்பட மேலும் 6 பேர் இணைந்தனர். முதலில் அணுகப்பட்டவரும் விவேக் தன்காதான். இது போல் மேலும் சில பெரிய நன்கொடையாளர்கள் இந்த மாநாட்டையொட்டி சேருவர் என்றார்.

விவேக் தன்கா ஏராளமான மருத்துவ முகாம்கள் நடத்தியதுடன், ஜபல்பூரிலிருந்து ஏராளமானோரை கண் அறுவைச் சிகிச்சைக்காக தில்லிக்கு அழைத்துச் சென்றுள்ளார். ஒடிசாவில் புயல் தாக்கியபோது, பல கடினமான களப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார். இந்தப் பணி களுக்காக தன்காவை மாநாட்டினர். விவேக் தன்கா பிரதமர் அலுவலகத்தைச் சேர்ந்த குழுவுடன் நேபாளத்துக்குப் பயணமானதால், அவருக்கு வழங்கப்பட்ட பழம்பெரும் ரோட்டரி அமைப்பினர் (Legendary Rotarian Award) என்ற விருதினை மாநாட்டில் பங்கேற்ற அவரது மனைவி ஆர்த்தி பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் ஆஜ் தக் டிவி தொலைக்காட்சியின் செயல்முறை ஆசிரியர் சஞ்சய் சின்ஹா உள்ளிட்டோர் மாநாட்டில் பேசினர்.

TRFக்கு ரோட்டரி அமைப்பினர் தாராளமாக நன்கொடை அளிக்கும்படி கேட்டுக் கொண்ட ஹுரா, உலகில் பல நல்ல காரியங்களைச் செய்தற்குப் போதிய நிதி தேவைப்படுகிறது. ஸ்ரீ சத்ய சஞ்சீவினி மருத்துவமனையில் முன்பு குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சை நடத்துவதற்கு 18 மாதம் காத்திருக்க வேண்டியிருந்தது. அங்கு ரோட்டரி சங்கம் சார்பில் ஆய்வகம் அமைக்கப்பட்ட பிறகு. அந்தக் காத்திருப்பு 15 மாதமாகக் குறைந்தது. அந்த மருத்துவமனையில் ஓர் ஆபரேஷன் தியேட்டர் அமைக்க இன்னொரு முறை உலகளாவிய மானியத்தைப் பெறுவதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். அப்படி ஆபரேஷன் தியேட்டர் அமைக்கப்பட்ட பிறகு குழந்தைகள் சிகிச்சைக்காகக் காத்திருக்கும் காலம் மேலும் குறைந்துவிடும். ராய்ப்பூரில் டயாலிசிஸ் மையம் அமைப்பது நாங்கள் மேற்கொண்டுள்ள மிக நல்ல திட்டமாகும். உங்களது ஆதரவுடன் இன்னும் பல சமூக சேவைகளை நிறைவேற்றுவோம்.■

# மீண்டும் நடக்க ஒரு வாய்ப்பு

V. முத்துகுமரன்

ஒசூரிலிருந்து வந்த அபிஜீத் (7) தனது தாயாருடன் தன்னுடைய காலில் பொருத்தியிருந்த செயற்கை உறுப்பை மாற்றுவதற்கு, பெங்களூரு பீன்யா ரோட்டரி சங்கம், D3190, ஒவ்வொரு ஜனவரியிலும் ஏற்பாடு செய்யும் செயற்கை கை/கால் பொருத்தும் முகாமை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தார். 2013ம் ஆண்டில், அச்சிறுவன் தனது வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த போது, பின்னோக்கி வந்த ஒரு வாகனம் அவன் மீது ஏறியது.

கை, கால்களை இழந்த வளரும் குழந்தைகளுக்கு, அவர்களுக்குப் பொருத்தப்பட்டிருக்கும் செயற்கை உறுப்புகளை, நெகிழ்வுத்தன்மை மற்றும் இணக்கம் பெற வளரும் பாகங்களுக்கு ஏற்றாற்போல் குறிப்பிட்ட கால இடைவெளியில் மாற்றப்பட வேண்டியது அவசியம். ஜெய்பூர் செயற்கை கை/கால் பொருத்தும் முகாம், கடந்த 21 ஆண்டுகளில் 3800-க்கு அதிகமான பயனாளிகளுக்குச் சென்றடைந்துள்ளது. ''நாங்கள் டார்மிட்டரி-வகை உறங்கும் விடுதியை ஏற்பாடு செய்து, தினமும், சிற்றுண்டி மற்றும் பானங்களுடன் காலை, மதிய மற்றும் இரவு ஆகிய மூன்று வேளை உணவும் வழங்குகிறோம். இரவில் தங்க அவசியப்படுவோர்களுக்கு விரிப்புகள், தலையணைகள் மற்றும் போர்வைகளையும் தருகிறோம்'' என்கிறார் பெங்களூரு பீன்யா ரோட்டரி சங்கத்தின் தலைவர் சவிதா சுரேஷ்.

இச்சங்கம், ஜெய்பூரைச் சேர்ந்த, பகவான் மஹாவீர் விகலாங் சஹாயத சமிதி (BM-VSS) உடன் இணைந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இத்திட்டத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிறது மற்றும் 21 ஆண்டுகள் கடந்த செயற்கை கை/கால் பொருத்தும் முகாம் இந்த முத்திரை பதித்த திட்டம், ரோட்டரி இண்டர்னேஷனலின் 100



‘முன்மாதிரியான திட்டங்களில்’ ஒன்றாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

### பரவலான விளம்பரம், தொடர்புகள்

மாவட்டத்தில் உள்ள கிட்டத் தட்ட 140 சங்கங்கள், அதிக எண்ணிக்கையிலான பயனாளர்களை ஈர்க்கும் வகையில் பல்வேறு ஊடகங்கள் மூலம் தொடங்குவதற்கு முன்பான விளம்பரம் மற்றும் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தப் பட்டன. ‘‘எங்களது கன்னட தொலைக்காட்சி சேனல்கள், தங்களது பார்வையாளர்கள் பலனடையும் வகையில் முகாமிற்கு ஒரு வாரம் முன்பிலிருந்தே தகவலை தங்களுடைய பங்களிப்பாக நாள் முழுவதும் செய்தியாக வெளி யிட்டனர்’’. சங்கம், இந்த ஆண்டில் வாட்ஸ்ஆப் மூலம் சோஷியல் மீடியாவிற்குக் கொண்டு சென்றது மற்றும் ‘‘எங்கள் அர்ப்பணிப்புடைய தன்னார்வலர்கள் மூவரில் ஒவ்வொருவரும் முகாம் தொடங்கும் நாள் வரை கிட்டத்தட்ட 300-350 தொலைபேசி அழைப்புகளை ஒரு நாளைக்கு பெற்றனர்’’.

மொத்தத்தில் ரொட்டேரியன்கள், ரோட்டாராக்டர்கள் மற்றும் இன்னர் வீல் உறுப்பினர்களை உள்ளடக்கிய 150 தன்னார்வலர்கள் ஒரு வார முகாமில் பங்கெடுத்தனர். இதைத்தவிர, வாகன உற்பத் தியாளர் மெர்சிடிஸ் பென்ஸ், அமைப்பாளர்களுக்கு உதவ 50-உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அனுப்பியது. ‘‘முகாம் முற்றிலும் இலவசமானது ஆகையால் பயனாளிகள் முகாம் நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தால் மட்டும் போதும், மற்றவைகளை நாங்கள் கவனித்துக்கொள்வோம்’’ என்கிறார்

### ஜெய்ப்பூர் அரசு சாரா நிறுவனத்துடன் ஒரு பிணைப்பு

பல ஆண்டுகளாக, BMVSSஇன் 15 உறுப்பினர்கள் குழு, சங்க உறுப்பினர்களுடன் நட்புறவுக் கொண்டுள்ளனர். ‘‘ஜெய்பூரைச் சேர்ந்த டெக்னீசியன்கள் முகாம்களில் தங்கியிருந்து, பயனாளிகளின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு பாகங்களையும் தயாரிக்கிறார்கள். பொருத்திய பின்பு, நாங்கள் மறுவாழ்வையும் கவனித்துக்கொண்டு, அவர்களது வாழ்வாதாரத்திற்காக தகுதியான தொழில் செய்ய வழிகாட்டுதலையும் வழங்குகிறோம்.’’ என்கிறார் திட்ட சேர்மன் வசந்த்குமார். மேலும், பயனாளிகளின் பெயர்கள் வேலைவாய்ப்புக்காக முகாமில் பதிவு செய்யப்பட்டது.

முகாம் நடத்துவது அத்தனை ஒரு சுலபமான காரியம் அல்ல; தொழில்நுட்ப குழு சரியான வடிவமைப்புகளை வடிவமைத்து ஒவ்வொரு பயனாளருக்கும் ஒரு சரியான பொருத்தம் இருப்பதை உறுதி செய்ய ஒரு நாளில் கிட்டத் தட்ட 14 மணி நேரம் கடுமை யாக உழைக்க வேண்டும். இங்கே தேவைப்படுவோருக்கு கிரட்சஸ் (Crutch), கேளிப்பர்கள் மற்றும் LN 4 செயற்கைக் கைகள் கூட வழங்கப்பட்டது.



ஏற்கனவே, சரிவரப் பொருந்தாத செயற்கை உறுப்புடன் பல பிரச்சினைகளுடன் இருந்த ஜகதீஷ் ஒரு ஜோடி LN 4 செயற்கை முன்னங்கைகள் பொருத்திய பின்னர் முழுமையான மகிழ்ச்சியடைந்தார். ‘‘இப்போது என்னால் விரல்களை வளைந்துக் கொடுக்கும் மூட்டுகளுடன் அசை க்க முடிகிறது. இயற்கையான உடல் பாகங்களைப் பெற்றது போன்ற உணர்வுடன் இப்போது, ஆவணங்களில் கூட கையொப்பமிட முடிகிறது’’ என்று குறிப்பிட்டதோடு, தனது வாழ்வின் விலைமதிப்பற்ற பரிசுக்காக ரோட்டரிக்கு நன்றி தெரிவித்தார். மாவட்ட ஆளுநர் ஆஷா பிரசன்னகுமார், முகாமின் 21ம் பதிப்பை துவங்கிவைத்தார், அதில் 2500 பயனாளர்கள் கலந்து கொண்டனர்.■

# கிளியைக் கேளுங்கள்



ஜெய்ஸ்ரீ

''அம்மா மீனாட்சி, காமாட்சியை கும்பிட்டு ரம்யாவுக்கு ஒரு சீட்டை எடுத்துக் கொடு'' என்கிறார் செல்வம். கிளி மீனாட்சி, கீச்சிட்டு, கூண்டிலிருந்து குதித்து வெளி வந்து, பெட்டியின் மேலே வைக்கப்பட்டிருக்கும் காமாட்சி அம்மனை வணங்குவது போல பெட்டியின் மேலேறுகிறது. பின்னர், கீழிறங்குகிறது. பின்னர் அடுக்காக வைக்கப்பட்டிருக்கும் டாரட் சீட்டுகளை தனது அலகால் எடுத்து எடுத்து போடுகிறது. அதிலிருந்து ஓர் அட்டையை எடுத்து அதை செல்வத்திடம் கொண்டு சேர்க்கிறது. அவர் அந்த கிளிக்கு அதன் செயலுக்கு ஒரு நெல்லை வெகுமதியாகக் கொடுத்தபின், தெய்வத்தை பிரார்த் தித்து, ரம்யாவின் எதிர்காலத்தைப் பற்றிய கணிப்பை வாசிக்கத் தொடங்குகிறார்.

மேலே உள்ள காட்சி 'கிளி ஜோதிடம்' (கிளி ஜோசியம்) என்றழைக்கப்படும் ஒன்று தமிழ் நாட்டில் பொதுவாக கண்ணில்படுவது. குறிப்பாக சிறு நகரங்களில், கிளி ஜோசியர் ஒரு மரத்தடியிலோ அல்லது சாலையோரத்திலோ ஒரு கட்டு சீட்டுகளுடனும் ஒரு கூண்டோடும் உட்கார்ந்திருப்பதைக் காணலாம். அவருடைய சேவைக்கான கட்டணம் சாதாரணமாக ரூ.11 அல்லது ரூ. 21 ஆக இருக்கும்.

## புராணத் தொடர்பு

ஆனால் ஏன் கிளி? ஏன் ஒரு காகம் அல்லது புறா இல்லை? கிளிகள் எதிர்காலத்தை முன்கணிக்க முடியும் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. ஒரு முறை புரந்தரதாஸர், மாறுவேடத்திலிருந்த ராமன், லட்சுமணன், சீதா ஆகியோரை அடையாளம் காணத் தவறியபோது, ஒரு மரத்தின் மீது அமர்ந்திருந்த ஒரு கிளி 'ராம், ராம்' என்று கீச்சிட்டது. ராமனின் தரிசனத்திற்காக நீண்ட காலம் தவம் செய்த முனிவர், அவரின் பாதங்களில் விழுந்து வணங்கினார் என ஒரு புராண கதை உள்ளது. குறிப்பாக அருளாளர் அருணகிரிநாதர் கிளி வடிவெடுத்து முருகப்பெருமான் மீது பாடல்கள் இயற்றியுள்ளதாகப் புராணக்கதையும் உண்டு. உண்மையைச் சொல்வதென்றால், தைத்ரிய உபநிடதம் அந்த பறவைக்கே அர்ப்பணிக்கப்பட் டுள்ளது, இந்து இதிகாசங்கள் இதுபோன்ற புராணக்கதைகளால் நிறைந்திருக்கின்றன.

புயல்கள் அல்லது சூறாவளிகள் போன்ற மோசமான



வானிலையைக்கூட கிளிகள் கணிக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது. சுனாமி, சென்னை மற்றும் கடலோர நகரங்களை தாக்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு பறவைகள் விசித்திரமான நடத்தையைக் காட்டின என்பது தெளிவாகத் தெரிந்ததோர் உண்மை.

இந்து தெய்வங்களுடனும் கூட கிளிகள் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஆண்டாள் தனது இடது கையில் ஒரு கிளியுடன் சித்தரிக்கப்படுகிறார். இந்தக் கிளியானது தினந்தோறும் இலைகளால் செய்யப்பட்டு அன்றையதின முடிவில் ஒரு பக்தருக்குக் கொடுக்கப்படுகிறது. அது அதிர்ஷ்டத்தைத் தருவதாக நம்பப்படுகிறது. இந்த கிளிகளைச் செய்வதற்கென்றே ஒரு குடும்பம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஒரு கிளி, தேவி மீனாட்சியின் வலது தோள்பட்டையை அலங்கரிக்கிறது. மேலும், அது ஆயக்கலைகள் 64 லையும் அவளுக்கு அறிவுறுத்து வதாக நம்பப்படுகிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள கிளி மண்டபத்தில் பல கிளிகள் வாழ்கின்றன. 'ராமா' அல்லது 'மீனாட்சி' என்று அழைக்கையில், பறவைகள் உங்களைப் பின் பற்றிச் சொல்கின்றன. அவை வேதங்களை மீண்டும் மீண்டும் உச்சரித்ததாக நம்பப்படுகிறது. இது, நாம் உச்சரிக்கும் அனைத்து நல்ல எண்ணங்களும் மீண்டும் மீண்டும் வெளிப்படுகிறது என்ற கோட்பாட்டிற்கு வலுசேர்க்கிறது.

காதலின் கடவுளான காமனின் வாகனம் கிளி ஆகும். பல்வேறு தமிழ் இலக்கியங்களில் கிளி தூது செல்வதற்கு பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டாளின் கிளி அவளுக்கும் பகவான் விஷ்ணுவிற்கும் காதல் தூது சென்றதால் அந்த இடத்தில் அங்கீகாரம் பெற்றதாக புராணங்கள் கூறுகிறது.



## தேய்ந்துவரும் தொழில்

துரதிர்ஷ்டவசமாக, கிளி ஜோதிடத் திற்கு விலங்கு நலன் ஆர்வலர்கள் மற்றும் PETA போன்ற அமைப்புகளால் கெட்ட காலம். செல்வத்திற்கு ஏன் என்று புரிந்து கொள்ள முடியவில்லை, ஏனெனில் கிளிஜோதிடத்தில், அந்த பறவை தீங்கிற்கு உள்ளாவதோ, துன்புறுத்தப்படுவதோ கிடையாது, மாறாக நன்றாக வளர்க்கப் படுகிறது.

கூடுதலாக, இந்தத் தலைமுறை இத்தொழிலை மேற்கொள்ள ஆர்வம் காட்டுவதில்லை என்று புலம்புகிறார் செல்வம். இந்தக் கலை பொதுவாக முந்தைய தலைமுறையினரிடத்தி லிருந்து கடந்து வருகிறது. செல்வத்தின் முன்னோர்கள் கிளி ஜோசியர்கள். ''எனது சின்ன வயதில் நான் எனது அப்பாவுடன் செல்வேன் அதற்குபின் நான் வளர்ந்த பின்பு, அவர் மீனாட்சியைப் பழக்கி எனக்கு பரிசாக அளித்தார்'' மீனாட்சி கடந்த ஏழு ஆண்டுகளாக செல்வத்துடன் இருக்கிறாள். ஒரு கிளியின் ஆயுட்காலம் 40 ஆண்டு கள் மற்றும் பொதுவாக பெண் கிளிகளே கிளி ஜோசியத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன என்று அவர் கூறுகிறார்.

'நாங்கள் எப்போதும் பொய் சொல்வதோ அல்லது அதிகப் படுத்திச் சொல்வதோ இல்லை''. மேலும் கூறுகையில் ''நாங்கள் எங்கள் கிளி எடுத்துக்கொடுக்கும் சீட்டிலிருப்பதையே வாசிக்கிறோம்.'' என்கிறார் அவர். இதில் 27 டாரட் சீட்டுகள் இருக்கின்றன, அவை அண்ட அமைப்புகளில் உள்ள நட்சத்திரங்களைக் குறியீடாகக் கொண்டவை. ஒவ்வொரு சீட்டிலும் ஓர் இந்து கடவுள் அல்லது இயேசு கிறிஸ்து, மேரி அல்லது குர்ஆன் ஆகியவற்றின் படம் இருக்கும்.

சராசரியாக ஒரு ஜோதிடர் நாளொன்றுக்கு ரூ.200 சம்பாதிக்கிறார், 'பண்டிகை காலங்களில், குறைந்த பட்சம் ஆயிரம் ரூ.1000 வீட்டிற்கு எடுத்துச் செல்கிறேன்' என்கிறார் செல்வம்.

## துயரங்கள்

மதுரையில் கடம்பவனம் விடுதியை நடத்தும் சித்ரா கணபதி, விடுதி அமர்த்தியிருந்த கிளி ஜோசியரின் வாழ்வாதாரம் எவ்வாறு காட்டிலாகா அதிகாரிகளால் கொள்ளை போனது என்பதைத் தொடர்புப்படுத்து கிறார். அவர்கள், அவருடைய கிளியையும், கூண்டையும், பறவைகளைக் கூண்டில் அடைப்பது சட்டத்திற்கு புறம்பானது என்ற காரணத்தைக்காட்டி பறித்துச்சென்றனர். ரூ.5000 லஞ்சம் கொடுத்தால் திரும்பத் தருவதாக ஒப்புக்கொண்டனர். ''அத்தொகை இவர்களுக்கு மிகப்பெரியத் தொகையாகும்.'' என்கிறார் சித்ரா.

அவர் கேட்கிறார்: ''நாம் இறைச்சி மற்றும் கோழிக்கறி உண்கிறோம். ஆனால் பல ஆண்டு களாக மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கி வருகிற கிளி ஜோதிடத்தைத் தடை செய் வதற்குப் பின்னால் என்ன தர்க்கம் இருக்கிறது?'' சிந்தனைக்குவிருந்தோ? ■

# பெருநிறுவனத்திலிருந்து காட்டு வாழ்க்கைக்கு மாற்றம்

ஜோவிதா அரன்ஹா




குழந்தை பருவத்தில், மோக்லியின் வாழ்வைப் பார்த்து நாம் பிரமித்தது நினைவுள்ளதா? சியோனியின் பென்ச் காடுகளில் வாழும் கட்டுப்பாடற்ற, சுதந்திரமான, கற்பனையான காட்டு குழந்தை. அது ருடியார்ட் கிப்லிங் "ஜங்கிள் புக்'' தொடரால் அழியாத நிலை பெற்றது.

ஒரு சிறுவன் மத்தியப்ரதேஷின் பென்ச் காட்டிலிருந்து 50 மீட்டர் தொலைவில் கிளைகளில் தாவுவது, வெறும் காலுடன் காட்டில் ஓடுவது, குரங்குகள் போல நடிப்பது, பட்டாம்பூச்சிகளைப் பிடிப்பது, ஜன்னலில் புலிகள் அழைப்பது போன்ற வாழ்வை வாழ்வதை நம்மில் பலர் கனவாகவே கண்டிருப்போம்.

3ட வயது கைஜென் அவனுள் மறைந்துள்ள மௌக்லியை முழுமையாக உணர்ந்து வாழ்கிறான். அவன் விருப்பப்படி வாழ பெற்றோர் ஹர்சிதா மற்றும் ஆதித்யா சாகல்யா தங்கள் சொகுசான வாழ்க்கையை விட்டு விலகினர்.

கைசன் 6 மாதக் குழந்தையாக இருந்தபோது அவன் பெற்றோர்

*ஹர்ஷிதா மற்றும் ஆதித்யா ஷகல்யா மகன் கைசென் மற்றும் நாய் கார்லஸுடன்.*



தங்கள் தொழிலை 2 மாதத்தில் விட்டுவிட்டு, புலிகள் உள்ள பெஞ்ச் காட்டின் மையத்தில் “புலியும் மரமும்'' என்ற உல்லாச விடுதியை நடத்தினர்

ஆதித்யா டில்லியில் பிறந்தவர்; ஹர்சிதா, இந்தூரில் வளர்ந்தவர். மேல்நாட்டில் படித்த இந்த தம்பதியினர் அவர்கள் மார்கெட்டிங் தகுதிக்கேற்ப பல நிறுவனங்களில் பணி புரிந்தனர். ஹர்சிதா ஒரு தொழில்முறை சாக்லேட்டராகத் தன் சொந்த தொழிலை 17 வயதில் நடத்தியவர். ஆதித்யா பல நிறுவனங்களிலும் பதிப்பகத்திலும் பணி புரிந்த நாவல் ஆசிரியர். ஒரே நிறுவனத்தில் பணி புரியும் போது இருவரும் சந்தித்து சொந்தமாகத் தொழில் புரிய நினைத்தனர். ஒரே மாதிரியான கருத்துகளைப் பகிர்ந்து சொந்தமாக ஒரு பத்திரிகையை இந்தூரில் தொடங்கினர். தொழிலில் மட்டுமில்லாமல் வாழ்க்கையிலும் அவர்கள் இணைந்தனர்.

சிறிது காலம் பணிகளில் மூழ்கி அதற்கு அடிமையாகினர். 2013ல் திருமணம் செய்து தேனிலவிலும் பணி செய்தனர். ஹர்சிதா தாய்லாந்திற்கு சென்றபோது அவர்கள் வாழ்வு மாறியது. “க்ராபிக்குச் செல்லும் வழியில் சிறு வேனில் இருந்தோம். ஆனால் ஜன்னலில் வேடிக்கைப் பார்ப்பதை விட்டுவிட்டு மீண்டும் பணி புரிய வேண்டும் என்ற கவலையில் உள்ளோம்'' என்றார்.

அந்த நேரத்தில் அந்த தம்பதிக்கு ஓர் உண்மை புரிந்தது. அது வாழ்க்கை என்பது எதிர்கால குழந்தைகளுடன் எஞ்சிய நாட்களைக் கழிப்பது மட்டுமல்ல. எந்த முன்னேற்பாடும் இல்லாமல் தங்கள் பாதையைவிட்டு எளிமையாக விலகினார்கள்.

ஒவ்வொருவரும் புதுவருடத்தின் விடியல் தரும் வாய்ப்பிற்காக காத்திருப்போம். 2014 புது வருட ஈவ் கொண்டாட்டத்தில் ஹர்சிதா மற்றும் ஆதித்யா சில நண்பர்களுடன் புதுப் புத்தகம் குறித்து பேசும்போது ஒரு நண்பர் ஆதித்யா அமைதியாக எழுதக் கூடிய இடம் தனக்குத் தெரியும் எனவும் அது தான் குடும்பத்துடன் இருந்து நிர்வகிக்க விரும்பும் விடுதி என்றும் கூறினார்.

அந்நேரத்தில் கைசன் 6 மாதக் குழந்தை. நாங்கள் அவனை அழைத்துச் செல்ல என நினைத்தோம். அவனை இந்தச் சோர்வான நகர வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட சூழலில் வளர்க்கவே விரும்புகிறோம் என்றார் ஹர்சிதா.

நகரப் பள்ளியில் சிறப்பானக் கல்வியை வழங்க அவர்களுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால் அவரோ தற்காலக் கல்வியில் குறைவுள்ளதாகவும் பள்ளிகள் வணிகமயமானதாகவும் கருதினார். “மனமாற நான் இந்த எலிப் பந்தயத்திற்கு என் மகனைச் சேர்க்க விரும்பவில்லை. இந்த உலகம் வெற்றியை மதிப்பெண்கள் குறித்தே தீர்மானிக்கின்றது. அந்த வெற்றி குறித்து அவன் வருந்துவதை நாங்கள் விரும்பவதில்லை.

இது அவர்களுக்கு செங்கல் காட்டிலிருந்து விடுபட்டு குடும்பமாக எதையும் செய்வதற்கான வாய்ப்பைத் தருகிறது. மார்ச் 2015ல் அவர்கள் தங்கள் பொருட்களுடன் அந்த விடுதிக்குச் சென்றனர்.

அப்படி மாறுவது எளிதானதா? இல்லை. “நகரத்தில் சொகுசாக அதிகாலை வரை கொண்டாடி வாழ்கிறோம். எனவே மாறுவது என்பது மிகக் கடினமானது. பூங்காவிற்குச் செல்வதை விட புலிகள் உள்ள காட்டில் வாழ்வது வேறுபட்டது என்றார் அவர்.

காட்டில் வாழ்வது நம்மையும் இயற்கையாக உணர வைத்து அச்சத்தை அகற்றும் என்றார் ஹர்சிதா. “அது பயங்கரமானது. ஒருமுறை மலைப்பாம்பு புதரிலிருந்து வந்தது. கைசனைப் பார்த்து குரங்குகள் உறுமின. ஆனால் நாங்கள்தான் அந்தக் காட்டை ஆக்கிரமித் திருந்தோம். அது அவர்கள் வீடு. நாங்கள் அங்கு அத்துமீறியவர்கள். எனவே அவற்றுடன் ஒத்துப் போய் அந்த இடத்தை முடிந்த வரை இயற்கையாக வைத்திருந்தோம்'' என்றார்.



முதல் வருடம் மின்சாரம் இல்லாமல் குப்பையாக இருந்த அதைப் புதுப்பித்தது மிகக் கடினமாக இருந்தது. ஒருமுறை கைசன் தூங்கும்போது நெருப்பில் விழப் போனபோது தனக்கேற்பட்ட அனுபவத்தை அவர் நினைவுக் கூர்ந்தார். ஆனால் இன்று அதை நினைக்கும் போது நகைப்பாக உள்ளது. காட்டில் பறவைகளைக் கவனித்தது, 10 அடி உயரக் கொம்புள்ள மானைப் பார்த்தது, குள்ளநரி, நீலான் போன்ற பிற காடுவாழ்வனவற்றைப் பார்த்ததோடு அவற்றின் மாறுதல்களை தினமும் கவனித்தது போன்றவற்றையும் தெரிவித்தார்.

புலிகள் உறைவிடத்தின் அருகில் உள்ள கிராமத்தில் 30-40வீடுகள் உள்ளன. கைசன் அவர்களுடனே வளர்ந்தான். ஹர்சிதா முதல் முறை கைசன், 'மம்மா, மச்சர்சப்கயா (உள்ளூர் மொழியில் கொசு கடித்தது) எனக் கூறி அழவைத்ததை நினைவுக் கூர்ந்தார். "நகரத்தில் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியோரை விட அவர்களோடு நட்புடன் பழகினான். புது மனிதர்களோடு





கூட இயல்பாகப் பழகுவான். பிறநாட்டிலிருந்து விருந்தாளிகள் வந்தால் ஆங்கிலத்திலும் இங்குப் பணியாற்றுபர்களிடம் அவர்கள் மொழியிலும் எளிமையாக பேசு வான். கேட்கும் மற்றும் பேசும் திறனற்றவர்களோடு சைகையில் பேசுவான்' என்றார்.

சமையலறையில் காய், பழம், கீரைகளை வளர்க்க உதவுவான். பல பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கான வாய்ப்பைத் தேடும்போது அது கைசனைத் தேடி வந்தது. அவன் வயதிற்கேற்ப அவனால் எழுத முடியாவிட்டாலும் தேவையான எல்லா அடிப்படைத் திறனும் போதுமான அளவில் அவனுக்கு உள்ளன. 60கி.மீ தொலைவில் உள்ள கட்டார்பில்லர் லாப் என்ற பள்ளிக்குச் செல்லத் தொடங்கினான். அது வயதின் அடிப்படையில் இயங்காத பள்ளி. அதற்கு பதில் பன்மொழித் திறன், செய்முறை மற்றும் வளர்ச்சியில் உதவி ஒவ்வொரு திறத்திலும் அவர்களைச் சிறப்புற செய்யும் பள்ளி.

அவன் தன் வயது சிறுவர்களுடன் பழக வேண்டும் என்பதும் அவனைப் பள்ளிக்கு அனுப்ப காரணமாகும். விருந்தினர்கள் தங்கள் குழந்தைகளுடன் வரும்போது அவர் உற்சாகப்படுவதில்லை ஆனால் அவர்கள் சென்றபோது வருந்துவான்.

விடுதி வாழ்க்கை அவர்களுக்கு நேரத்தைத் தந்ததால் ஆதித்யா விருந்தினருக்கும் குழந்தைகளுக்கும் யோகாவைச் சொல்லிக் கொடுப்பார். சமீபத்தில் குழந்தைகள் மனநலத் திற்காக போதிசத்வ யோகா ஃபௌண்டேஷனைத் தொடங்கி மனஅழுத்தைப் போக்கக் கற்பித்தார்.

சாக்லெட் தொழிலைச் செய்யும் போது ஹர்சிதா கிராமத்திற்கு சென்று உள்ளூர் பொருள்களான அரிசி, பருவத்திற்கேற்ற காய்கள் போன்றவற்றை அம்மக்களிடமிருந்து அறிந்து கொண்டார். மர்மலாட், ஊறுகாய், ஜாம், ஸ்குவாஷ் போன்றவற்றை உள்ளூரில் தயாரிக்கும் பென்ச் ஊறுகாய் நிறுவனத்தைத் தொடங்கினார்.

கைசன் வளர்ந்தபிறகு நகரத்தில் வாழ விரும்பினால் என்ன செய்வது? இதற்கு சிரித்து





கொண்டே உண்மையைக் கூறினால், நகரம் ஒருநாள் நிச்சயம் அவனைக் கவரும். எங்களையும்தான். அப்போது அது அவன் விருப்பம். நாங்கள் எங்கள் பெற்றோரைக் கேட்டு இந்த வாழ்க்கையை முடிவெடுக்கவில்லை. ஆனால் எங்கள் குழந்தைக்கான அடிப்படை வேலைகளை நாங்கள் செய்துவிட்டோம்.என்றார்.

அவன் காட்டிலும் கிராமத்திலும் மட்டுமே இருப்பதாக நினைத்தால் அது தவறு. 'யாரும் அவனைக் கட்டுப்படுத்தவில்லை. உண்மையில் அவன் எல்லாவற்றையும் அனுபவிக்கவே விரும்புகிறோம். அவன் விருப்பப்படி அவன் வாழவே விரும்புகிறோம். இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்கு அவனை அழைத்துச் செல்கிறோம் என்றார்.

கைசன் ஏற்கனவே கோவா, டில்லி, இந்தூர், வாரணாசி, இலங்கை, அந்தமான் மற்றும் பிற பகுதிகளுக்கு சாலைவழி, விமானம் மற்றும் ரயில் போன்றவற்றில் பயணம் செய்துள்ளான்.

Bodhiyoga.foundationgmail.com என்ற முகவரியில் ஆதித்யா மற்றும் ஹர்சி தாவைத் தொடர்பு கொள்ளலாம்.

www.thebetterindia.com என்ற வலைதளத்தில் இந்த கட்டுரை வெளியானது.

WHERE WILL ROTARY GLOBAL REWARDS TAKE YOU?

THE MEMBER BENEFIT PROGRAMME THAT OPENS UP A WORLD OF OPPORTUNITIES.

Rotary

SEE MORE AT ROTARY.ORG/GLOBALREWARDS



# முக்கிய நிகழ்வுகள்

ராண்டி ட்ரூஸின்



கனடா டொராண்டோவில் 2018ம் ஆண்டுக்கான ரோட்டரி இன்டர்னேஷனல் மாநாடு நடைபெற இருக்கிறது. இந்த மாநாட்டில் பங்கேற்போருக்குப் பகலில் மாநாட்டு நிகழ்வுகள் எப்படி மறக்க முடியாத நிகழ்வாக இருக்கப்போகிறதோ அதைப் போலவே இரவு நேரங்களும் வாழ்நாளில் மறக்க முடியாததாக இருக்கப் போகிறது. அதற்கான வசதிகளை மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவினர் செய்ய இருக்கிறார்கள். இதற்காக பல நிகழ்வுகளை டொராண்டோ நகரம் வழங்க இருக்கிறது.

வரும் ஜூன் மாதம் 23ம் தேதி சனிக்கிழமை *லேடி பீ குட்* என்ற உள்ளூர் பாண்டு இசைக் குழு பண்டைய ஜாஸ் இசையை வழங்க இருக்கிறது. நவீன பாப் இசையும் இடம்பெறும். அது மட்டுமா, ரிப்லியின் நீர்வாழ் காட்சிசாலையும் கண்டு களிக்கலாம். மாலை நேரத்தில் டொராண்டோ நகரின் பன்முகம் கொண்ட பண்பாட்டில் கலை விருந்து அளிக்கப்படும்.

இசை நிகழ்ச்சிகள் அமர்க்களமாக இருக்கும். அதே சமயம் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாவட்டத்தில் ராக் இசையும் ஆட்டம்பாட்டத்துடன் இருக்கும்.

கிடைக்கும் நேரத்தில், அருகில் உள்ள அங்காடிகளில் பொருட்களை வாங்கலாம். உணவகங்களில் புதிய சுவையை அனுபவிக்கலாம். இசை, கலை, சுவை என்று எல்லாவற்றையும் அனுபவிக்கலாம்.

திங்கள்கிழமை ஜூன் 25ஆம் தேதி டொராண்டோ நகரைச் சேர்ந்த ரோட்டரி சங்கத்தினர் அளிக்கும் விருந்தில் பங்கேற்கலாம். உள்ளூர் ரோட்டரி சங்கத்தினரின் விருந்தோம்பலை அவர்களது இல்லத்திலும் அனுபவிக்கலாம். அல்லது குறிப்பிட்ட பொது இடத்திலும் அனுபவிக்கலாம்.

மறுநாள் ஜூன் 26ம் தேதி செவ்வாய்க்கிழமை ரோட்டரிஃபெஸ்ட் எனப்படும் கோலாகல கொண்டாடத் தில் பங்கேற்கவேண்டும். வாண வேடிக்கை, உணவு, நட்புறவுகளை உருவாக்கிக் கொள்ளுதல் என்று ஜமாய்க்கலாம். மரக்கறி (வெஜிடேரியன்) உணவோ, ஹலால் செய்யப்பட்ட சிக்கனோ அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப உணவு அருந்தலாம். இது மட்டுமின்றி உலகின் பல பகுதிகளின் உணவுவகைகளும் பரிமாறப்படும்.

எல்லா நிகழ்வுகளிலும் பங்கேற்க டிக்கெட் குறைவாக இருப்பதால், இடம் கிடைக்க வேண்டுமானால், இப்போதே முன்பதிவு செய்து கொள்ளவேண்டும்.

மேலும் விவரங்களை அறிந்து கொள்ளவும், டிக்கெட்களை வாங்கவும் இணையதளம்: *rotary2018.org*.

*மாநாட்டில் பங்கேற்க பதிவு செய்து கொள்ள : riconvention.org.*

*© தி ரொட்டேரியன்*

Wordsworld

# பறந்து போகும் புத்தகங்கள்

*சந்தியா ராவ்*



இரவல் வாங்கிய புத்தகங்கள் திரும்பி வராவிட்டால் வேதனையாகத்தான் இருக்கிறது. அந்தப் புத்தகத்தை நாம் வாசித்து முடித்திருந்தாலும் சரி, இல்லை பாதி வாசித்து வைத்திருந்தாலும் சரி.. அதுவும் இல்லை, கையில் உள்ளதைப் படித்து முடித்து விட்டு, இன்னொரு நாள் படிக்கலாம் என்று வைத்திருந்தாலும் சரி.. கொடுத்த புத்தகம் திரும்ப வரவில்லையென்றால் மனசு கேட்காது..

வீட்டில் பல நாட்கள் வைத்திருக்கும் புத்தகங்கள் மீது தூசு படிந்து, கேட்பாரின்றிக் கிடக்கலாம். எப்போதாவது, மூன்று ஆண்டுக்கு ஒரு முறை புத்தக அலமாரியைப் புரட்டிப் போட்டு, அதில் சேர்ந்திருக்கும் தும்பு, தூசியை எல்லாம் தட்டிவிட்டு, சுத்தப்படுத்தி மீண்டும் ஒழுங்காக அதே புத்தக அலமாரியில் அடுக்கி வைப்பது நமது வழக்கமாகிவிட்டது. என்னுடைய தனிப்பட்ட நூலகத்திலும் இது நடக்கிறது.

எப்படிப்பட்ட ஆள் இவர், நம்மிடமிருந்து புத்தகத்தை படிப்பதற்காக வாங்கிக் கொண்டு திரும்பித் தராமல் இருக்கிறார்களே என்று நான் நினைப்பதுண்டு.. ஏதோ, எவர்சில்வர் டிபன் பாக்ஸ், பேனா என்றால் பரவாயில்லை போகட்டும் என்று இருந்துவிடலாம். தங்கத்தில் காது தோடு என்றால் அதை எப்போதாவதுதானே இரவல் கொடுப்போம்? ஆனால், புத்தகத்தை வாங்கிக் கொண்டு திரும்பத் தராமல் இருப்பதை மன்னிக்க முடியுமா?

என் மாமியார் வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவம் நினைவுக்கு வந்தது.

அப்போது என் கணவர் சின்னப் பையன். அவரும் அவரது சகோதரியும் (என் நாத்தனார்) ஏதோ அம்மா சொல்லிவிட்டதால், கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு ஓடிப் போய்விடலாம் என்று கையில் கிடைத்ததையெல்லாம் ஒரு பையில் போட்டுக் கொண்டு வீட்டைவிட்டு புறப்பட்டு விட்டார்களாம். அதற்கெல்லாம் அம்மா (என் மாமியார்) கவலைப்படவில்லை. எங்கே போறதுங்க? வயத்துலே பசி கிள்ளிச்சுன்னா வீட்டுக்கு வந்துடப் போகுதுங்க.. என்று சொன்னாராம். அப்படியே நடந்தது.

மாமியாருக்கு நடந்தது போல் நம்ம புத்தகம் எங்கே போகப் போகுது.. திரும்பி நம்ம கைக்கு வந்துதானே ஆகணும்? எவ்வளவு காலம் அங்கேயே இருக்கப் போவுது? எப்படியும் நம்ம கைக்கு வந்துதானே ஆகணும்? என்று நினைப்போம். அப்படித்தான் நினைக்கத்தோன்றுகிறது.

புத்தகத்தை வாங்கின ஆளுக்கு திடீர்னு நினைவு வந்தாலோ, வீட்டுலே புத்தக அலமாரியிலே பார்த்தாலோ, குற்ற உணர்ச்சியாலோ திருப்பித் தரத்தான் போறாரு.. என்றுதானே நினைப்போம்?

புத்தகத்தை வாங்கியவன் திருப்பித் தரவில்லையே என்று நமக்கு ஏற்பட்ட கவலையை ஆற்றுவது இதுபோன்ற நினைப்புகள்தானே!

ஆனால், இதெல்லாம் கொஞ் நாளுக்குதான் மன ஆறுதல் தரும். நடப்பு என்னவோ வேறு எத்தனை புத்தகங்களைக் கொடுத்திருக்கிறோம் என்று நினைக்கிறோமோ அதை விட அதிகமாகவே அலமாரியிலிருந்து காணாமல் போயிருக்கும்.. அவ்வளவுதான் அதிகமாகக் கவலைப்பட ஆரம்பிப்போம்!

இவ்வாறு நடந்த சம்பவம் எனக்குப் புதிய பழக்கத்தைத் தூண்டிவிட்டது. யார் வீட்டுக்காவது நான் சென்றால், அவர்கள் வீட்டு புத்தக அலமாரியை நோட்டம் விடுவேன். புத்தகங்களைக் கண்ணால் மேய்வேன். ஏதாவது ஒரு புத்தகம் எனக்கு ரொம்ப பரிச்சயமாக இருக்கும். உடனே துள்ளிக் குதித்து, இது என்னோட புத்தகம்தானே..? படித்திருப்பீர்கள் இல்லையா, எடுத்துக் கொண்டு செல்கிறேன்.. என்று கூறுவேன்.

அங்கே, என்னிடம் புத்தகம் இரவல் பெற்ற தோழியின் (தோழியா அவள்?) முகத்தில் மாற்றம் தெரியும்.. அப்படியா.! என்பாள்.. இல்லை, மறந்துவிட்டேன்.., வேறே.? என்றெல்லாம் அவளது முகம் பேசும்.

இந்த புத்தகம் என்னிடம் இருந்ததே தெரியாது. அது பற்றிச் சிந்திக்கவேயில்லை என்று சொல்வாள். மனசுக்குள் சொல்லிக் கொள்வேன், அதெல்லாம் போகட்டும். நண்பர்கள்

ஏன் புத்தகங்களை வாங்கிக் கொண்டு திருப்பித் தரமாட்டேன் என்கிறார்கள்?

இதைப் பற்றித் தீவிரமாக விவாதித்தால், பல ஆச்சரியமான உண்மைகள் தெரிய வரும்.

யாருமே புத்தகத்தை இரவல் வாங்கினால், படித்து முடிக்காத வரையில் திருப்பித் தரும் எண்ணமே அவர்களுக்கு வராது. என்னுடைய அனுபவமும் அதுதான். நான் எந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு அதைப் படித்து முடிக்காவிட்டால், படிக்கிற வரையில் அது அலமாரியில் தூங்கிக் கொண்டிருக்கும். அதற்குப் பின் அந்தப் புத்தகத்தைப் படிப்பது தள்ளிப் போய்க்கொண்டே இருக்கும்.. இப்படிச் சொல்வோர் உண்டு. இது சரிதான்.

இதற்கு ஒரே ஒரு தீர்வு உண்டு. நான் நண்பர்களுக்குப் புத்தகங்களை வாங்கி அன்பளிப்பாக அளித்து விடுவேன் காரணம், எனக்குப் புத்தகம் இரவல் தரப் பிடிக்காது.. அது திரும்ப கைக்கு வராது என்பதால்தான்.. இது ஒரு யோசனை.

இன்னொரு பார்வையும் இருக்கிறது. புத்தகத்தை இரவல் வாங்குவோருக்கு ஒரு எண்ணம் இருக்கும். இந்தப் புத்தகத்தை இரவல் தருபவன் ஏற்கெனவே படித்து முடித் திருப்பான். இனிமேல் அவனுக்குத் தேவையிருக்காது இப்படியும் நினைப்பார்கள்.

இதையெல்லாம் விட குற்றவுணர்ச்சியுடன் இருப்போரும் உண்டு. புத்தகத்தைத் திருப்பித் தருவதில் சோம்பேறித்தனம், திருப்பித் தரவேண்டும் என்ற பொறுப்பை மறந்தவர்கள்.. இப்படி சில ரக மனிதர்களும் உண்டு. இவர்கள் குற்ற உணர்ச்சியில் இருப்பார்கள்.

இந்த விவாதத்தில் பல்வேறு கருத்துகள் உருவாயின. அவற்றில் சில வித்தியாசமானவையும் கூட. அவற்றில் சில

- ஒரு நல்ல புத்தகம் என்றால், அது நமது நேரத்தையும், தூக்கத்தையும் மட்டுமல்ல, ஆன்மாவையும் ஈர்த்துக் கொள்கிறது ஆன்மாவையே ஈர்த்துவிட்ட ஒரு பொருளை எப்படித் திருப்பித் தர இயலும்?
- ஒரு பண்டைய சம்ஸ்கிருத பழமொழி உண்டு. புத்தகம், மனைவி, பணம் மாற்றாருக்குக் கொடுத்து விட்டால், போனது போனதுதான். திரும்பி வந்தாலும் சிதைந்துபோய்தான் வரும்

*ஏதோ, எவர்சில்வர் டிபன் பாக்ஸ், பேனா என்றால் பரவாயில்லை போகட்டும் என்று இருந்துவிடலாம். ஆனால், புத்தகத்தை வாங்கிக் கொண்டு திரும்பத் தராமல் இருப்பதை மன்னிக்க முடியுமா?*

(புஸ்தகம், பார்யா விட்டம் - பரஹஸ்தம் கதம், கதம்) என்கிறது அந்தப் பழமொழி.

இதைப் படித்ததும் என்ன நினைக் கிறீர்கள்? கலங்கிப் போய்விட்டீர்களா? இன்னொரு விவாதத்தில் யாரோ சொன்னார்கள் புத்தகம் இரவல் தராதது ஏழு பாவங்களில் இடம்பெறாமல் இருந்திருந்தால், அதை உடனே சேர்த்தாக வேண்டும் என்று கூறினார்கள். ஆஹா!

என்னதான் அலப்பறை செய்தாலும் கொடுத்த புத்தகம் திரும்ப வரவே வராது.

இத்தகைய நிலையில் இன்னொரு வழி இருக்கலாம் என்பது பற்றி யோசி க்கிறேன். ரொம்ப சிம்பிள்! கொடுத்த புத்தகத்துக்கு தலைமுழுக்குப் போட்டு விடவேண்டியதுதான்! எப்படியாவது யாரிடமாவது இருக்கட்டும், அவர்கள் அதைப் படித்து மகிழட்டும் என்று விட்டுவிடலாம்.

அதனால்தான் புத்தகங்கள் இன்றும் தேவைகளின் பட்டியலில் முதலிடத்தில் தொடர்வதற்கு இதுதான் காரணம். படிப்பதற்கு, கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதற்கு. ஒரு வாசகர் புத்தகத் தின் பக்கங்களின் வழியாக புதிய உலகுக்குள் நுழைவது.. கற்பனைக்கு எட்டாத வினோத அனுபவங்களைப் பெறுவது, நமது பிரபஞ்சமே விரிவது போன்ற உணர்வு ஏற்படுவது. இப்படிப் பல காரணங்களைக் கூறிக் கொண்டே போகலாம்..

அமெரிக்காவில் வெளியாகும் தி கார்டியன் (The Guardian) இதழில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அந்நாட்டின் முதல் அதிபர் ஜார்ஜ் வாஷிங்டனைப் பற்றிய சுவையான தகவல்.

நியூயார்க் சொசைட்டி நூலகத்தி லிருந்து எமெர் டி வாட்டல் (Emer de Vattel) எழுதிய தேசங்களின் சட்டங்கள் (The Law of Nations) என்ற புத்தகத்தை இரவலுக்கு அவர் 1789ம் ஆண்டு எடுத்திருந்தார். பல ஆண்டு கள் ஓடிவிட்டன. நூலகத்தின் பதிவேடு களைப் பார்த்தால், அந்தப் புத்தகம் திருப்பித் தரப்படாதது தெரியவந்தது. புத்தகத்தைக் காலதாமதமாகத் திருப்பித் தந்தால், எவ்வளவு நாள் தாமதமோ அதற்கேற்ப அபராதம் விதிக்கப்படும். பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த அப்புத்தகத்தைத் திருப்பித் தராதவர் மீதான அபராதம் 3 லட்சம் அமெரிக்க டாலர் (இன்றைய இந்திய மதிப்பில் ரூ.1,91,73,000) விதிக்கப்பட்டிருந்தது. இது 2010ம் ஆண்டு வெளியான செய்தி.

அந்தச் செய்திக் கட்டுரையைப் படித்த வர்ஜீனியா மாநிலம், மவுண்ட் வெர்னோன் என்ற இடத்தில் ஜார்ஜ் வாஷிங்டன் வசித்த வீட்டில் இருக்கும் பணியாளர் ஒருவர் நூலக அதிகாரிகளுடன் தொடர்புகொண்டார். அந்த நூலுக்குப் பதிலாக வேறொரு பிரதியை வாங்கித் தந்துவிடுகிறோம் என்று நியூயார்க் நூலகத்துக்குக் கடிதம் எழுதினார். அப்படியே அதே பதிப்பகம் வெளியிட்ட அதே நூலை வாங்கி அனுப்விவிட்டார். அதாவது ஒரு புத்தகம் 221 ஆண்டுகள் கழித்து திருப்பித் தரப்பட்டிருக்கிறது வேறொரு பிரதியாக. நல்ல காலமாக அதற்கு அபராதம் விதிக்கப்படவில்லை!

என் நண்பர் பிரதீப்தி இதையே பின்பற்றியிருக்கிறார். சமந்த் சுப்பிரமணியம் எழுதிய பிளவுபட்ட பூமி: இலங்கையரிடமிருந்து வந்த கதைகள் (This Divided Land: Stories from the Sri Lankan) என்ற ஆங்கில நூலை என்னிடமிருந்து படிப்பதற்காக இரவல் பெற்றுக் கொண்டாள். ஒரு நாள் அவளது மேசையின் மீது வைத்திருந்த அந்தப் புத்தகத்தை யாரோ ஒருவர் சுட்டுக் கொண்டு விட்டார். பாவம் பிரதீப்தி அதை எங்கே தேடியும் கிடைக்காமல் போய், கடைசியில் அதே புத்தகத்தைக் கடையிலிருந்து வாங்கி, பலமுறை மன்னிப்புக் கோரியபடி என்னிடம் திருப்பித் தந்தாள்.

அவள் உண்மையாகவே புத்தகத்தை நேசிப்பவள். அதனால்தான் புத்தகத்தை இழந்தால் ஏற்படும் வேதனையை உணர்ந்திருக்கிறாள்.

நான் இவ்வளவு அறிந்திருந்தாலும், என்ன தத்துவம் புரிந்துகொண்டாலும் ரூ ஃப்ரீமேன் (by Ru Freeman) எழுதிய, அவரே கையெழுத்துப் போட்டுக் கொடுத்த, அடங்காத பெண் (A Disobedient Girl) என்ற நூலை இழந்து தவிக்கிறேன்..

இதைப் படிக்கும் யாராவது அந்தப் புத்தகத்தை வைத்திருக்கிறீர்களா?■

# உங்கள் ஆளுநரை தெரிந்து கொள்ளுங்கள்

ஜெய்ஸ்ரீ

## சங்கங்களை சீரமைத்தல், உறுப்பினர்களை ஊக்குவித்தல்

**டாக்டர் கே. சுந்தர்ராஜன்,**
எலும்பியல் மருத்துவர், ரோட்டரி சங்கம் நாக்பூர் மேற்கு, D 3030



மாவட்ட ரோட்டரி சங்கங்களை ரீசார்ஜ் செய்வதற்கு இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக்கொள்கிறேன், இன்னும் தீவிரமாக செயல்படுவதை ஊக்குவிக்கும் விதமாக, என்கிறார் டாக்டர் சுந்தர் ராஜன், பன்னாட்டு ரோட்டரி, மாவட்டத்தை இடைநீக்கம் செய்ததைக் குறிப்பிட்டு. அங்கத்தினர்கள் ரோட்டரியில் தங்கள் ஆர்வத்தைத் தக்கவைக்க, சில மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவர் உறுதி செய்கிறார். அத்தகைய ஈடுபாடு சங்கத்தையும் மாவட்டத்தையும் துடிப்பானதாக வைக்கும் என்று நினைக்கிறார்.

1990-ல் நான் ரோட்டரியில் சேர்ந்தபோது, பல போலியோ பாதிப்பைத் திருத்தும் அறுவை சிகிச்சைகள் செய்ய வாய்ப்பு கிடைத்தது. அப்போதிலிருந்து மறுபரிசீலனை இல்லை. உங்களைச் சுற்றியிருக்கும் மகிழ்ச்சியான முகங்களை நீங்கள் காணும்போது, நீங்களே உங்களயே முழுமையாக திரும்பத் திரும்ப அளிக்க உத்வேகம் கொள்வீர்கள். இன்றும்கூட நான் அனுபவிப்பது இது தான், என்று அவர் கூறுகிறார்.

ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் திட்டமிடப்பட்டுள்ள "Continuous Rotary Orientation Programme' குழுவிற்கு புத்துயிர் அளிப்பதோடு, அவற்றை புதுப்பிக்கவும் செய்யும் என்று அவர் நம்புகிறார்.

மாவட்ட நிர்வாக குழுவை வலுப்படுத்துவதில் ராஜன் கவனம் செலுத்துகிறார். நாம் ஏற்கனவே விரல்களை சுட்டுக்கொண்டோம், இனி மீண்டும் நடக்கக்கூடாது. DDF ஐ அளவிட முடியாவிட்டாலும், பல சமூகத் திட்டங்களில் சங்கம் ஈடுபட்டுள்ளது. உதாரணமாக, ரோட்டரி சங்கம், நாசிக் சாலை, CSR உதவியுடன் ஒரு கிராமத்தில் ஏழு கழிப்பறைகளைக் கட்டியுள்ளது. பல நீர் மேலாண்மை திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் கூறுகிறார்.

ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) க்கு தங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்ப தனது குழுவை அவர் ஊக்கப்படுத்தினார்; துல்லியம் மற்றும் வெளிப்படைத்தன்மை இந்த ஆண்டு என்னுடைய தாரக மந்திரமாக இருக்கின்றன, என்று அவர் கூறுகிறார்.

அவர் சுமார் 350 புதிய உறுப்பினர்களை சேர்த்துள்ளார் மேலும் இரண்டு புதிய சங்கங்களை நிறுவியுள்ளார்.

அவர் தனது நினைவில் பேணுகின்றத் தருணமானது, பீகார் மற்றும் ஜார்கண்டில் உள்ள ஏழைகளுக்கு ஆண்டுதோறும் அவர் ஆறு பேராசிரியர்களுடனும் சேர்ந்து செயயும் எலும்பியல் அறுவை சிகிச்சைகள் தான். நான் பல வருடங்களுக்கு முன் சிகிச்சை அளித்த போலியோ நோயால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் பெற்றோர்கள் என் காலில் விழுந்து ஆனந்தக்கண்ணீர் விட்டு எனக்கு திருமண அழைப்பினை அளித்தபோது நான் நொறுங்கிப்போனேன்.

ராஜன் மற்றும் அவரது மனைவி பாக்யம் ஆகியோர் பிரதான நன்கொடையாளர்கள் மேலும் 2010 ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் TRF க்காக ரூ. 2,000 நன்கொடையளிகிறார்கள்.



## அபய் காட்கில்

ஜூவெல்லர்,
புனே பல்கலைக்கழகம் ரோட்டரி
சங்கம், D3131

### CSR டை-அப் பெறுதல், அவரது தனித்தன்மை

மாற்றுத்திறனாளிகளின் சிரமங்களை அணுகும்போது, குறிப்பாக ஆட்டிசக் குழந்தைகள் அவருடைய முன்னுரிமை. அவர் CSR நிதிகளைப் பெறுவதில் கவனம் செலுத்துகிறார். கடந்த ஐந்தாண்டுகளில், டாடா டெக்னாலஜீஸ் நிறுவனம், பள்ளிகள் இ-லேர்னிங் உபகரணங்கள் பெறுவதற்காக ஏறக்குறைய ரூ. 5 கோடி வழங்கியுள்ளது. நாங்கள் IOC மற்றும் AMDOCS IT நிறுவனமும் கூட, ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 கோடியை வழங்க திட்டமிட்டுள்ளது, என்கிறார் அபய் காட்கில்.

உறுப்பினர்களின் எண்ணிக்கைப் பற்றி கூறுகையில், ஒரு சங்கத்தை வரையறுக்க அவருடைய இலக்கு குறைந்தபட்சம் 30 நல்ல உறுப்பினர்கள். ‘‘நான் சமீபத்தில் 10 உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஒரு சங்கத்தின் விண்ணப்பத்தை நிராகரித்தேன்.’’ கடந்த ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி, 1,500 உறுப்பினர்கள் நீக்கப்பட்டனர், ஏனெனில் அவர்கள் செயல்பாடு அற்றவர்கள். ‘‘இது மாவட்டத்தில் மோசமாக பிரதிபலிக்கிறது. எனவே நான் உண்மையான மற்றும் தரம் பற்றி கவனமாக இருக்கிறேன்,’’என்று கூறுகிறார் அவர்.

ரோட்டரி அறக்கட்டளைக்கான பங்களிப்பைப் பற்றி பேசுகையில், ரோட்டரியில் தனது ஆரம்ப ஆண்டுகளில், அவர் அறக்கட்டளைக்கு கொடுப்பதில் ஆர்வமாக இல்லை என்று காட்கில் வெளிப்படுத்துகிறார். என்னுடைய சங்கத்தின் திட்டங்களுக்கு ஆதரவு தருவதில் தான் எனக்கு ஆர்வம் இருந்தது. ஆனால், வினய் குல்கர்னி (அப்போதைய மாவட்ட ஆளுநர்) இதில் என்னை ஊக்கப்படுத்தினார். ஆனால் இன்று, நான் ஒரு AKS என்று உங்களால் நம்ப முடியுமா, என்று சிரிக்கிறார்.

இந்நாள் வரையில், காட்கில் பொக்கிஷமாக கருதுவது அலண்டியில், தனது சங்கத்தின் உலகளாவிய கொடைத் திட்டமான, பார்வை குறைபாடுள்ளவர்களுக்கான, ஜகிர்தி பள்ளியை நிறுவியதையே. ‘‘ஒவ்வொரு முறையும் நான் அந்தப் பள்ளியைப் பார்க்க செல்லும்போதும், அங்கே குழந்தைகள் பேரார்வத்துடன் படிப்பதைக் கண்டு மிகவும் மனம் நெகிழ்கிறேன்,’’ என்கிறார் அவர்.

அவர் தனது சகோதரனைக் கண்டு ரோட்டரியில் சேர உத்வேகம் கொண்டார். அவரது மனைவி தீபா அவரது சங்கத்தின் முன்னாள் தலைவராவார்.



## டி கே ரூபி

மருந்து விற்பனை
ஹிமாலயன் ரேஞ்சஸ் -
மான்சதேவி ரோட்டரி
சங்கம், D 3080

### அனாதைகள் மற்றும் வயதானவர்கள் மீது அக்கறை

அவர் 2000ம் ஆண்டிலிருந்து சங்கத்தின் சிறப்பு உறுப்பினராக உள்ளார். ரூபி ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஆதரவு மற்றும் அக்கறைக் காட்டுதல் - என்ற அவரது நடந்துகொண்டிருக்கும் திட்டத்தினை வெகுவாக நேசிக்கிறார். ஒரு நாள், ஒரு சிறிய பெண் வந்து என்னை கட்டிப்பிடித்து ‘நான் பள்ளிக்குச் செல்ல உதவியதற்கு நன்றி மாமா’ என்று சொன்னபோது நான் மிகவும் மனம் நெகிழ்ந்து போனேன். இது எனது வாழ்க்கையின் ஆகச்சிறந்த தருணம். நாங்கள் ஆதரவளிக்கும் அனாதை இல்லத்தில் 200 குழந்தைகள் உள்ளனர். வளர்ப்புப் பெற்றோராகி, சாத்தியமான அனைத்து வழிகளிலும் உதவி செய்கிறோம்,’’ என்று அவர் கூறுகிறார்.

அவர் தனது அணியை, சமுதாயத்தில் வாடுகின்ற மக்களின் வாழ்க்கையில் நிரந்தர தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளுமாறும் அவர்களின் பிரதானமாக அவர்களின் கௌரவத்தை மீட்க உதவவும் ஊக்கமளிக்கின்றார்.

இந்த ரோட்டரி மாவட்டமானது - பஞ்சாப், ஹரியானா, உத்தரகண்ட், இமாச்சலப் பிரதேசம், உ.பி., மற்றும் சண்டிகர் ஆகிய ஆறு மாநிலங்களில் பரவியுள்ளது. அதில் மலை, சமவெளி, தொழில் மற்றும் யாத்ரீக நகரங்கள் உள்ளன. ஒவ்வொரு பிராந்தியமும் மாறுபட்ட தேவைகளைக்கொண்டது. சங்கங்கள், ஒரு கையெழுத்துத் திட்டம் போன்றதொரு திட்டத்தை மேற்கொள்வதற்கு தூண்டுவதற்குப் பதிலாக, சேவை செய்கின்ற சமூகத்தின் உள்ளூர் தேவைகளை கவனித்துக்கொள்ள என் குழுவை நான் ஊக்குவிக்கிறேன், என்கிறார் ரூபி.

வயதானவர்களுக்கு அக்கறைக் காட்டுவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார். ‘பிள்ளைகளால் கைவிடப்பட்ட பல பெற்றோர்களை நான் அறிவேன். அவர்கள் இப்படி கைவிடப்பட்டதினால் மிகுந்த வேதனை அடைகிறார்கள். அவர்களை அவர்களது பிள்ளைகளுடன் இணைக்க முயல்கிறோம்.’

குறிப்பிப்பாக பிரதிநிதித்துவம் அற்றப் பகுதிகளில் ரோட்டரி சங்கத்தை நிறுவுவதில் கவனம் செலுத்துகிறார் அவர். மலைப் பிரதேசங்களில் ரோட்டரி உறுப்பினர்களின் பங்களிப்பைப்பற்றி கேட்டபோது, ரம்பூர் பாஷெர், சிம்லாவிலிருந்து ஏழு மணி நேரம் பயணிக்க வேண்டிய இடத்திலிருக்கும் சங்கத்திற்கு அவரின் சமீபத்திய விஜயத்தை நினைவுகூறுகிறார். அந்த சங்கத்தில் 20 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர். அந்த சிறு நகரத்தின் மக்கள் ரோட்டரியை மதிக்கிறார்கள். முஸ்சௌர்ரியிலும் அவ்வாறே. நீங்கள் அங்கு ரோட்டரியின் எழுச்சியை உணர முடியும். அதனால் ஒரு நல்லது செய்ய, சங்கம் பெரியதாக இருக்கவேண்டிய அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன்.’’

ரூபி கடந்த ஏழு ஆண்டுகளாக ரோட்ரக்டர்களுடன் பணியாற்றுகிறார், அனாதை இல்ல குழந்தைகளுக்கான திட்டங்களை ஏற்பாடு செய்வதில் அவர்களை சம்பந்தப்படுத்துகிறார். ‘‘அவற்றின் அர்ப்பணிப்பு திக்குமுக்காடச் செய்கிறது.’’

ரோட்டரி அறக்கட்டளைக்கான அவரது பங்களிப்புக் குறிக்கோளைப் பற்றி கேட்டபோது அவர் சிரித்தவாறு கூறுகிறார், ‘‘நான் தாமதமாக நியமிக்கப்பட்ட காரணத்தினால் எந்த இலக்கும் வழங்கப்படாத ஒரு கவர்னராக இருக்கிறேன்.’’



புது வருஷம் பிறந்தாச்சு, எல்லோரும் ஏதாவது சபதம் அல்லது தீர்மானம் எடுத்துக் கொள்வோம். இது வழக்கமானது. காலண்டரில் டிசம்பர் 31ம் தேதி போய்விட்டு, ஜனவரி 1 பளீரென்று தோன்றும். அப்போது, இந்த வருஷத்திலேருந்து உடம்பைப் பார்த்துக் கொள்ளவேண்டும். நல்லா சம்பாதித்து காசு சேர்க்கவேண்டும் என்றெல்லாம் தீர்மானம் செய்துகொள்வோம்.

இப்படி எடுத்துக் கொள்கிற உறுதியை அப்படியே பின்பற்று கிறோமா? இல்லை. பெரும்பாலான புத்தாண்டு சபதங்கள் ஒரு சில மாதங்கள் மட்டும் நீடிக்கும். அப்புறம் மெல்ல மெல்ல கைவிடப்படுகின்றன.

சரி போகட்டும், உங்களது இலக்குகள் உங்களது வாழ்வியலுக்குப் பொருந்து வனவா, செயலுக்கு வருமா என்பதை உறுதி செய்துகொள்ள சில குறிப்புகள்.

இலக்குகளை அடைவதற்கு கொஞ்சம் அறிவுடைமை (SMART) தேவை. அதென்ன அறிவுடைமை?

- அறுதியிட்டது (அதாவது திட்ட வட்டமானது)
- அளவறியக்கூடியது (இந்த அளவு என நிர்ணயிப்பது)
- காலக்கெடுவு (இதற்குள் முடித்தாக வேண்டும்)
- நடைமுறை சாத்திக்கக் கூடியது (இதைச் சாதித்து நிறைவேற்ற இயலும்)
- மெய்ம்மையானது (யதார்த்த மானது, அதீதமானது அல்ல)

இதையே ஆங்கிலத்தில் SMART என்று குறிப்பிடுகிறார்கள்.
மேலே குறிப்பிட்ட அறுதியிட்டது (Specific and definite), அளவறியக்கூடியது (Measurable), காலக்கெடுவு (Time&bound), நடைமுறை சாத்தியம் (Achievable) மெய்ம்மையானது (Realistic) மிகவும் சரியானவை.

இருந்தாலும் நமது தீர்மானங்கள் நாம் செய்யும் செயல் சார்ந்தவையாக இருக்க வேண்டுமே தவிர, பலன் கருதியதாக, அதன் அடிப்படையில் இருக்கக் கூடாது.

கிட்டத்தட்ட கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே.. என்ற பகவத் கீதையின் சாராம்சத்தை நினைத்துப் பார்க்க வேண்டும்.

உதாரணத்திற்கு, நான் இந்த ஆண்டு 10 கிலோ எடையைக் குறைக்கப் போகிறேன் என்று முடிவெடுத்தால், அது பலனை எதிர்நோக்கியது. அந்த தீர்மானத்திலும் மேலே சொன்ன மாதிரி திட்டவட்டமானது, சாதிக்கக் கூடியது, காலக்கெடு என ஐந்து அம்சங்களுமே அடங்கியிருக்கின்றன.

இந்தத் தீர்மானத்தில் 10 கிலோ எடையைக் குறைப்பது நீங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியின் விளைவாக அதாவது பலனாக இருக்க வேண்டும்.

ஆனால், பலன்கள் நமது கையில் இருப்பதில்லை. இந்தப் பலன் அல்லது விளைவு எல்லாமே நமது மரபியல் (genetics), வளர்சிதை மாற்றம் (metabolism) ஆகியவற்றையும் தூக்கம் முதல் மன அழுத்தம் வரையில் உள்ள நமது வாழ்க்கை முறையில் இருக்கும் அம்சங்களையும் சார்ந்தவை.

ஒன்றை நினைத்துக் கொள்ளுங்கள். உங்களது இலக்கான பத்து கிலோ குறைப்பது என்ற விளைவை நீங்கள் அடைந்துவிடக் கூடும். ஆனால், அதற்காக நிறைய இழக்கவும் நேரும்.

மாறாக, முடிவைப் பற்றி கவனம் செலுத்தாமல், செயலிலேயே அதாவது முயற்சியிலேயே அதிக கவனத்துடன் இருங்கள். உதாரணத்துக்கு, பத்துக் கிலோ எடையைக் குறைப்பது என்று தீர்மானித்து விட்டீர்கள் என்றால், அத்தோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள். அது தொடர்பாக ஒரு சில விஷயங்களையும் நீங்களாகவே வகுத்துக் கொள்ளுங்கள். அதையே கடைப்பிடியுங்கள்.

- தினந்தோறும் 30 அல்லது 40 நிமிடம் நன்றாக நடை பயிற்சி செய்வேன். மிதமான அதே சமயம் தீவிரமான வேகம் வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 10 ஆயிரம் அடிகளாவது நடப்பது.
- சர்க்கரை, ஐஸ்கிரீம் போன்றவற்றைச் சாப்பிடமாட்டேன்.
- ஒரு நாளைக்கு ஐந்து கப் காய்கறிகளைச் சாப்பிடுவேன்.
- வாரத்துக்கு இருமுறையாவது எடைப் பயிற்சி செய்வேன்.
- பதப்படுத்தப்பட்ட, சத்து நீக்கப்பட்ட உணவுப் பண்டங்களைக் குறைத்துக் கொள்வேன்.
- மது அருந்த மாட்டேன்.
- என்ன சாப்பிடுகிறேன் என்பதில் உஷாராக இருப்பேன்

மேலே கூறியவை அனைத்தும் உங்களுக்கு கைவரக் கூடியதுதானே! இதைக் கடைப்பிடித்தாலே போதும். நீங்கள் தீர்மானித்தீர்களே எடைக்குறைப்பு அது நடந்துவிடும். இந்த வெற்றி உங்களது முயற்சியில்தான் இருக்கிறது. உங்களது கவனமெல்லாம் உங்களால் கைவரக் கூடிய முயற்சிகளிலேயே இருக் கட்டும். இருந்தாலும், பல சமயம் நீங்கள் பெரிய அளவில் முயற்சிகள் எடுத்தாலும் எதைத் தீர்மானித்தீர்களோ அதைச் சாதிக்க இயலாமல் போகவும் கூடும். அப்படி இருக்கும்போது, சாதிக்க முடியவில்லையே என்று விசனப்படுதில் அர்த்தமில்லை. (ஏற்கெனவே நான் சொன்னமாதிரி விளைவு நம் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். பலனை எதிர்பாராதே.. என்ற கீதை வாசகம்தான்).

விட்டுத் தள்ளுங்கள், இப்படி நீங்கள் எடுத்த முயற்சிகளால் கிடைத்த பலன்களைப் பாருங்கள்.. மேலே சொன்னதையெல்லாம் கடைப்பிடிப்பதால், உங்களது வாழ்க்கை முறையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை நீங்களே உணர்வீர்கள். அவை நீண்டகால வெற்றிக்கு வழியாகும்.

இந்த மாற்றங்கள்தான் எடையைக் குறைக்க வேண்டும் என்று தீர் மானித்தீர்களே அதைவிட மிக மிக முக்கியமானவை. தினமும் உடற்பயிற்சி செய்வது உங்களது வழக்கமாகிவிடும். எதையெல்லாம் சாப்பிடுவது, எப்படியெல்லாம் சாப்பிடுவது என்பது



# சரியான இலக்கு! செமையா கலக்கு !

ஷீலா நம்பியார்

உங்கள் வாழ்க்கை நடை முறையாகிவிடும். அதுவே எடைக் குறைப்புக்கு உங்களைக் கொண்டு செல்லும். தினமும் 30 நிமிடம் நடைபயிற்சியை விடுமுறையிலும் செய்ய ஆரம்பிப்பீர்கள். அப்புறம், தினசரி வாழ்க்கையில் எதையெல்லாம் செய்ய வேண்டுமோ, எதையெல்லாம் செய்ய முடியுமோ அதிலேயே கவனம் செலுத்துவீர்கள்.

### முன்னேற்றங்களைப் பதிவு செய்வீர்கள்

உங்களிடம் ஏற்படும் மாற்றங்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள். உடற்பயிற்சி, சாப்பாடு எல்லாமே அதில் இருக்கட்டும். என்ன செய்ய வேண்டும் என்பதும் அதில் இடம்பெறட்டும். மனிதர்களுக்கு இது போன்ற விஷயத்தில் நினைவு கொஞ்சம் குறைவுதான். பல சமயம் நாம் என்ன சாப்பிட்டோம், எவ்வளவு சாப்பிட்டோம் என்பதும் எந்த அளவுக்கு உடம்பு வணங்கி வேலை செய்தோம் என்பதும் மறுந்துவிடும். தூக்கமில்லையா, மன அழுத்தமா அதை அலட்சியம் செய்து விடுகிறோம். ஆனால், அதையெல்லாம் பதிவு செய்து வந்தோமானால், எதைச் செய்கிறோம், எதைச் செய்யவில்லை என்பது தெரியவரும். அப்போது அடடா மூன்று நாளாக நடக்கவில்லையே.. இந்தக் காயைச் சாப்பிட மறந்துவிட்டோமே.. என்பதெல்லாம் நினைவுக்கு வரும். அது மட்டுமா, கண்டதைச் சாப்பிட்டு வந்த நமக்கு, என்ன சாப்பிடுகிறோம் என்று விழிப்புணர்ச்சி ஏற்படும். ஐயோ, இது கொழுப்பு, இது சர்க்கரை, உடம்புக்கு நல்லதில்லை என்று நினைப்பீர்கள். அதே சமயம் மன அழுத்தம் ஏற்பட்டாலோ, தூக்கமில்லாமல் போனாலோ அதையும் பதிவு செய்யுங்கள். இவையெல்லாம் எடைக் குறைப்புக்குக் கைகொடுக்கும். பதிவுகளைப் பார்த்தால் ஒழிய நமக்கு நாம் செய்கிறோம் என்ன செய்ய வேண்டும் என்பதெல்லாம் தெரியும். மனஅழுத்தம், தூக்கமில்லாமையால் என்ன நேரும் என்பதையும் புரிந்துகொள்வோம்.

### அவ்வப்போது சரிபார்த்துக் கொள்க

சில குறிக்கோள்கள் உங்களுக்கு செட் ஆகிவிடும். அதை அடைவதற்கு நீங்கள் தயாராகிவிடுவீர்கள். அவை உங்களது வாழ்க்கை முறையில் மெய்யாகிவிட்டனவா என்பதையும் நல்ல பலன்களைத் தந்தனவா என்பதையும் அறிந்து கொள்வதற்காக அடிக்கடி ஆய்வு செய்து கொள்ளுங்கள்.

வாரத்தில் ஆறு நாளும் தினம் ஒரு மணி நேரம் நடக்க வேண்டும், எடைப் பயிற்சியை வாரத்துக்கு இரு முறை செய்யவேண்டும் என்றெல்லாம் நினைத்துத் தொடங்கினால், அது வேலைக்கு ஆகாது. உங்களுக்கு எது சரிவருகிறதோ அதன் படி செய்யுங்கள். அங்கேதான் நீங்கள் பதிவு செய்து வைத்திருக்கிறீர்களே... அது கை கொடுக்கும். அதைப் படித்துப் பார்த்தால் பல விஷயம் தெரியும். ஒரு வேளை மாலை நேரத்தில் நீண்ட நேரம் நடைப்பயிற்சி செய்வது அலுப்பாக இருந்தால், மாற்றிக் கொள்ளுங்கள். சாப்பிடும் நேரத்தையும் மாற்றிக் கொள்ளுங்கள்... காலையில் செய்யும் உடற்பயிற்சியை மாலை நேரத்துக்கு மாற்றிக் கொள்ளுங்கள்... இப்படியெல்லாம் செய்வது பலன் தரும்.

### ஆரோக்கியத்துக்கு ஏற்ற இலக்குகள்:

இப்படி தீர்மானம் எடுத்துக் கொள்வது, இலக்குகள் வகுப்பது பாராட்டுக்குரியதுதான். இருந்தாலும், உங்களது உடம்பு வாகு, மன நிலை, சூழல் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு, கீழ்க் கண்டவாறு வகுத்துக் கொள்ளுங்கள்.

- உடல் நிலை ஆரோக்கியம் (உடற்பயிற்சி, எடை, உடல்வாகு, ஆரோக்கி யம்)
- மனநல ஆரோக்கியம் (விழிப்புணர்வு, தெளிவான உணர்வு, கோபம், மன அழுத்தம் போன்றவை)
- சமூக ஆரோக்கியம் (உறவுகள், குடும்பம், நட்பு, சமூகம் சார்ந்தவை)
- பொருளாதார ஆரோக்கியம் (நிதி நிலையைப் பாதுகாத்தல், நிதி நிலைமையை அறிந்துகொள்ளுதல்)
- ஆன்மிக ஆரோக்கியம் (முடிந்தால், ஆன்மிகத்தின் உச்சத்தை அடைதல், மன அமைதி)
- சூழல் ஆரோக்கியம் (சுற்றுப்புறத் தூய்மை பராமரிப்பு, குப்பை மறு சுழற்சி போன்றவை)
- அறிவு ஆரோக்கியம் (கல்வி, வேலை ஆகியவற்றில் காட்டுதல்)
- படைப்பாற்றல் ஆரோக்கியம் (பொழுதுபோக்கு, விளையாட்டு போன்ற படைப்பாற்றல் அம்சங்கள்)


இவற்றில் எல்லாம் கவனம் செலுத்தி னால், நினைத்தபடி எடையைக் குறைக்க முடியவில்லையே.. என்று ஆதங்கப்படுவது குறைந்துபோகும். உங்களது ஒட்டு மொத்த மேம்பாட்டுக்கு இந்த அம்சங்களையெல்லாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். ஒவ்வொரு ஆரோக்கிய அம்சத்திலும் உச்சத்தைத் தொட வேண்டும் ஜெயிக்க வேண்டும் என்று நினைத்து அதில் எதையும் நிறைவேறாமல் போவதற்காக இப்படிக் கூறவில்லை.

ஒவ்வொரு அம்சத்திலும் மெல்ல மெல்ல கவனம் செலுத்துங்கள். சின்ன சின்ன இலக்குகளை வகுத்துக் கொள்ளுங் கள். மெல்ல மெல்ல முன்னேறுங்கள். எதில் கவனம் செலுத்த முடியுமோ அதையெல்லாம் செய்யுங்கள். விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எந்த இலக்காக இருந்தாலும் அதன் செயலில் மட்டும் கவனம் செலுத்துங்கள். அதில் முழுமையாக ஈடுபடுங்கள். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். ஆனால், எடுத்த முயற்சிகள்தான் மிகவும் முக்கியமானவை.

(கட்டுரை ஆசிரியர் மகப்பேறு மற்றும் மகளிர் சிறப்பு மருத்துவர், உடற்பயிற்சி, வாழ்க்கை முறைஆலோசகர். இவர் Get Size Wise மற்றும் Gain to lose என்ற இரு நூல்களை வெளியிட்டிருக்கிறார், இவரது இணைய தளம் : www.drsheela.nambiar.com)

# FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Get Rotary's free Club Locator app and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


Rotary

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 12,21,527 |
| Clubs | : | 35,648 |
| Districts | : | 539 |
| Rotaractors | : | 2,49,711* |
| Clubs | : | 10,857* |
| Interactors | : | 5,16,718* |
| Clubs | : | 22,466* |
| RCC members | : | 2,26,711* |
| RCC | : | 9,857* |

* As on February 2, 2018

# Membership Summary

As on February 2, 2018

| RI Zone | RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract | Interact | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2981 | 112 | 4,608 | 220 | 60 | 225 | 172 |
| 5 | 2982 | 67 | 2,995 | 98 | 61 | 111 | 43 |
| 5 | 3000 | 126 | 5,210 | 443 | 290 | 653 | 195 |
| 4 | 3011 | 75 | 3,305 | 632 | 57 | 107 | 25 |
| 4 | 3012 | 86 | 3,366 | 632 | 68 | 127 | 55 |
| 5 | 3020 | 94 | 4,220 | 202 | 117 | 461 | 351 |
| 4 | 3030 | 92 | 4,976 | 621 | 75 | 309 | 164 |
| 4 | 3040 | 92 | 2,025 | 214 | 53 | 119 | 136 |
| 4 | 3053 | 73 | 2,777 | 430 | 15 | 37 | 93 |
| 4 | 3054 | 130 | 6,351 | 1,010 | 93 | 305 | 473 |
| 4 | 3060 | 98 | 4,160 | 436 | 61 | 122 | 131 |
| 4 | 3070 | 103 | 3,002 | 280 | 68 | 156 | 54 |
| 4 | 3080 | 75 | 3,269 | 213 | 72 | 216 | 108 |
| 4 | 3090 | 80 | 2,153 | 93 | 32 | 36 | 122 |
| 4 | 3100* | 73 | 1,690 | 69 | 11 | 73 | 146 |
| 6 | 3110 | 113 | 3,974 | 298 | 51 | 49 | 104 |
| 6 | 3120 | 78 | 3,325 | 357 | 37 | 58 | 50 |
| 4 | 3131 | 131 | 5,430 | 1,075 | 106 | 276 | 82 |
| 4 | 3132 | 105 | 4,087 | 419 | 65 | 200 | 138 |
| 4 | 3141 | 90 | 5,369 | 1,136 | 119 | 252 | 84 |
| 4 | 3142 | 83 | 3,096 | 458 | 68 | 188 | 69 |
| 5 | 3150 | 98 | 3,596 | 355 | 93 | 229 | 109 |
| 5 | 3160 | 69 | 2,416 | 120 | 26 | 48 | 81 |
| 5 | 3170 | 128 | 5,567 | 398 | 58 | 303 | 161 |
| 5 | 3181 | 71 | 3,095 | 231 | 32 | 179 | 104 |
| 5 | 3182 | 80 | 3,289 | 243 | 34 | 272 | 91 |
| 5 | 3190 | 129 | 5,049 | 587 | 146 | 352 | 51 |
| 5 | 3201 | 139 | 5,207 | 315 | 100 | 129 | 47 |
| 5 | 3202 | 128 | 4,851 | 239 | 102 | 434 | 46 |
| 5 | 3211 | 137 | 4,408 | 264 | 12 | 89 | 123 |
| 5 | 3212 | 96 | 3,906 | 257 | 111 | 272 | 125 |
| 5 | 3231 | 67 | 2,829 | 112 | 54 | 196 | 237 |
| 5 | 3232 | 101 | 4,067 | 548 | 139 | 304 | 80 |
| 6 | 3240 | 86 | 2,969 | 338 | 61 | 146 | 151 |
| 6 | 3250 | 98 | 3,787 | 678 | 47 | 205 | 177 |
| 6 | 3261 | 67 | 2,430 | 218 | 16 | 102 | 42 |
| 6 | 3262 | 95 | 3,275 | 375 | 44 | 68 | 75 |
| 6 | 3291 | 147 | 3,812 | 713 | 81 | 131 | 587 |
| **India Total** | | **3,712** | **1,43,941** | **15,327** | **2,735** | **7,539** | **5,082** |
| 5 | 3220 | 67 | 1,888 | 242 | 82 | 199 | 77 |
| 6 | 3271 | 81 | 1,443 | 253 | 49 | 16 | 13 |
| 6 | 3272 | 154 | 3,096 | 439 | 41 | 36 | 36 |
| 6 | 3281 | 205 | 5,748 | 801 | 228 | 84 | 186 |
| 6 | 3282 | 139 | 3,980 | 390 | 133 | 45 | 38 |
| 6 | 3292 | 114 | 4,415 | 666 | 122 | 114 | 110 |
| **S Asia Total** | | **4,472** | **1,64,511** | **18,118** | **3,390** | **8,033** | **5,542** |

**Non-districted.*

*Source: RI South Asia Office*

# இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டினர் விரும்புவது......

ரோட்டரி இண்டர்நேஷனலின் பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ, ஸ்விட்சர்லாந்தின், டாவோஸில் சமீபத்தில் நடைபெற்ற உலக பொருளாதார அரங்கில், இப்போது உலக மக்கள்தொகையில் அரைவாசியாக இருக்கும் ஆயிரமாவது தலைமுறையின், பெருகிவரும் கவலையைக் குறித்து பேசினார். அதன் பிரதி....

உலக மக்கள் தொகையில் ஐம்பது சதவிகிதம் 30 வயதிற்கு உட்பட்டது. இது தான் வரலாற்றில் மிக அதிகமான இளைய மக்கள்தொகை, சமீபத்திய உலக பொருளாதார சபையின் *குளோபல் ஷேப்பர்ஸ் சர்வே* (186 நாடுகளைச் சார்ந்த 30 வயதிற்குட்பட்ட 30,000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மத்தியில் நடத்தப்பட்டது) நமது உலகம் மற்றும் அதில் அவர்களின் பங்கு குறித்து இன்றைய இளைய தலைவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கூறுகிறது.

எனவே, 2018 இல் இதன் மீது நமது அத்தியாவசிய உள்ளார்ந்த கண்ணோட்டங்கள் என்ன?

முதலாவதாக, ஆயிரமாவது தலைமுறையினர், பருவநிலை மாற்றமும், மோதல் போக்கும் நாம் எதிர்கொண்டிருக்கும் மிக முக்கியமான பிரச்சினையாகப் பார்கிறார்கள்.

இரண்டாவதாக, அவர்கள், ''தொழில் தொடங்க சூழல் மற்றும் தொழில் முனைவு'' ஆகியவை ஒரு நாட்டின் இளைஞர்களுக்கு அதிகாரம் தரும் மிக முக்கியமான இரண்டு காரணிகளாகக் கருதுகின்றனர்,

இந்த முன்னுரிமைகளுக்குக் கூடுதலாக, இளைஞர்கள் தங்கள் குரல் கேட்கப்படவில்லை என்று கருதுகின்றனர். ஏனெனில், கருத்துக் கணிப்பில் 55.9 சதவிகிதத்தினர்: 'என் நாட்டில், முக்கியமான முடிவுகள் எடுக்கும் முன் இளைஞர்களின் கருத்துக்கள் பரிசீலிக்கப்படுகின்றன' என்ற வாசகத்தை மறுத்துள்ளனர்.

நமது எதிர்காலத்தை வடிவமைக்கும் தீர்மானங்களில் நமது இளம் தலைவர்கள் உண்மையிலேயே பங்களிப்பதை உறுதிசெய்யும்போதே, நம்மை அழுத்திக்கொண்டிருக்கும் சில பிரச்சினைகளை நாம் எவ்வாறு தீர்க்க முடியும்?

பருவநிலை மாற்றத்தில், ''பருவநிலை மாற்றத்தையும் அதன் தாக்கங்களையும் எதிர்த்துப் போராட'' நிலையான வளர்ச்சி இலக்கு 13ஐ விரைந்து செயல்படுத்தல் வேண்டும் என்பது தேசிய கொள்கை-திட்டமிடல் மட்டத்தில் ஓர் அடிப்படை முன்நிபந்தனை என்றுத் தெளிவாகத் தெரிகிறது. எனினும், பருவநிலை மாற்றத்தை எதிர்த்து சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் எடுக்க வேண்டிய துல்லியமான நடவடிக்கைகள் என்ன என்பதைத் தீர்மானிப்பது இன்னும் முற்றுபெறாத கேள்வி.



*RI பொதுச் செயலாளர்* ஜான் ஹ்யூகோ

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, தொழில்நுட்ப பதிலீடுகள் ஏற்கனவே நம்மிடத்தில் இருக்கின்றன என்று சிலர் கூறலாம். ஆனால், ''அவற்றை, எந்த அளவில் பயன்படுத்துவதுப் பற்றி நாம் உண்மையிலேயே எவ்வித உணர்வும் இல்லாமல் இருக்கிறோம்,'' என்பதே இண்டர்கவர்ன்மெண்டல் பேனல் ஆன் க்ளைமேட் சேன்ஞ் குழுவின் முன்னணி எழுத்தாளர் டாக்டர் லியோன் கிளார்க்கின் வார்த்தைகள்.

ப்ராஜெக்ட் டிராடவுன் போன்ற முயற்சிகள் ஏற்கனவே இருக்கும் சக்தி வாய்ந்த தீர்வுகளின் ஒரு பயனுள்ள கணக்கீட்டை வழங்குகிறது, மேலும் அது கணிக்கப்பட்ட $CO_2$ மற்றும் கிரீன்ஹவுஸ் வாயுக்களின் குறைப்புகளின் அடிப்படையில் தரவரிசைப் படுத்துகிறது. ஆனால் இந்த கட்டுரையின் நிமித்தமாக, நமது பார்வை இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் மீதும், இரண்டாவது 'மிகவும் சிக்கலான உலகளாவிய பிரச்சினை' என்று கருத்துக் கணிப்பில் அடையாளம் காணப்பட்டுள்ள, மோதல்களுடன் அதன் உறவின் மீதுமே.

தொழில் முனைவோர் பிரச்சினை பற்றி ஆரம்பிக்கலாம்.

பெரும்பான்மையான இளைஞர்கள் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் தாக்கத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். தொழில்நுட்பம், 'வேலைகளை அழிக்கும்' (21.4 சதவிகிதம் பேர்) என்ற கருத்துக்கு எதிராக 'வேலைகளை உருவாக்கும்' என்று 78.6 சதவீதம் பேர் நினைக்கிறார்கள்.

இருப்பினும், உலக அளவில், 15 முதல் 24 வயதுடைய, 71 மில்லியன் வேலைவாய்ப்பற்றவர்கள் இருக்கிறார்கள் எனும் அச்சமூட்டும் நிதர்சனத்திற்குத் தொழில்நுட்பம் மட்டுமேத் தீர்வளிக்க முடியுமா? இது சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கருத்துப்படி வரலாற்று உச்சத்திற்கு நெருங்கிய 13 சதவிகிதம்.

தற்போதைய இளைஞர்களின் வேலையின்மைச் சவால் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து கட்டங்களிலும் நாடுகளை பாதிக்கிறது. லத்தீன் அமெரிக்கா, அதிகபட்ச மற்றும் அதிகரித்துவரும் இளைஞர்களின் வேலையின்மை விகிதங்களை எதிர்கொள்கின்றது (2017 ல் 17 சதவிகிதத்திற்கும் அதிகம்) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய அளவிலான விகிதம் தற்போது அதே அளவில் உள்ளது, அதாவது இத்தாலியில் 35%, ஸ்பெயினில் 38.7%, மற்றும் கிரீஸில் 43.3%மாக உள்ளது.

கடந்த ஆண்டு நான் லத்தின் அமெரிக்காவைப் பற்றிய உலக

பொருளாதார சபையில் குறிப் பிட்டுள்ளபடி தொழில்முனைவோர் திறனைக் கட்டவிழ்த்து விடுவது எளிது அல்ல. பொது வணிகத்தில் அதிக விதிகள் மற்றும் அதிகாரத்து வதத்துவத்தை களைவது (cut red tape), கட்டமைப்பு தடைகளை அகற்றுவது (remove structural barriers) அல்லது சமூகத் தடைகளைப் போக்குவது (alleviate social barriers) போன்ற நடவடிக்கை எடுக்கும்போது, புதுமைக்கான ஒரே அணுகுமுறை எல்லோரும் பொருந்தும் என்ற பொறியில் சிக்கிவிடக்கூடாது. உண்மையில், கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகவே கண்டுபிடிப்புக்கான முயற்சிகளை தொடர்வது என்பது இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மைக்கு தீர்வாகாது.

தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்கான பல திட்டங்கள் தோல்வியடைந்தன, ஏனெனில் அவை சிலிகன் பள்ளத்தாக்கின் ஈடு இணையற்ற கண்டுபிடிப்புகளை பிரதிபலிக்க முயன்றன. ஸ்டான்போர்டு பிசினஸ் ஸ்கூல் விரிவுரையாளர் ஃபெடெரிகோ அன்ட்டோவின் வார்த்தைகளில் ‘எந்த அரசு வேலைத் திட்டமும், எந்த ஒரு உள்சந்தையும் புதியதோர் சிலிக்கான் பள்ளத்தாக்கை உருவாக்க முடியாது.‘ அமெரிக்க தொழில் மூலதன முதலீடுகளில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமானதை ஈர்க்கும் பள்ளத்தாக்கில் புதிய தொழில் தொடக்கங்களைத் தொடர்ந்து ஆதரவு அளித்தவர்கள் கூட - அதன் இணையற்ற செழிப்புக்கான காரணங்களை சுட்டிக்காட்டுவதை கடினமானதாகக் கருதுகின்றனர்.

பேபால் மற்றும் ஃபேஸ்புக் போன்ற உலகின் சில முன்னணி நிறுவனங்களை இணை நிறுவியோ, அவைகளில் முதலீடு செய்தோ இருக்கும் தொழில் முனைவர் பீட்டர் தீல், உலகின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு மையத்தை பிரதிபலிப்பதற்கான முயற்சி களை சந்தேகிக்கிறார்: ‘சிலிக்கான் பள்ளத்தாக்கு ஏன் செயல்படுகிறது என்பது தெளிவானதல்ல. அது தனிப்பட்ட ஒரு விஷயம், ஒரு முறை, ஒரு இடம் ... நான் எப்போதுமே நினைப்பதுண்டு, ஏதோ ஒரு விஷயத்தை நகலெடுக்க நீங்கள் முனையும்போது, ஏற்கனவே நீங்களே உங்களை ஒரு தாழ்நிலைக்கு கொண்டு வைத்துவிட்டீர்கள்.’’

தாராளமான அரசாங்க மானியங்களும், வரிச் சலுகைகளும் கூட, பகட்டான லண்டன் டெக் சிட்டி போன்ற புதிய தொழில்நுட்ப மையங்களை உருவாக்கும் முயற்சி கள் எதிர்பார்ப்புகளை ஈடுசெய்வதில் தோற்றன. ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, *தி ஸ்பெக்டேட்டரின்* கருத்துப்படி, 2004-ல் நிறுவப்பட்ட பேஸ்புக், 40 ஐரோப்பிய யூனிகார்ன்களின் ஒரு பில்லியன் டாலர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புள்ள புதுத் தொழில் முயற்சிகள் கூட்டு மதிப்பைவிட இரு மடங்காகும்.’’ என்பதே.

இளைஞர் வேலைவாய்ப்பின்மை மற்றும் சமூக முரண்பாடுகளை குறைப்பதே நமது நோக்கம் என்றால், சிறந்த உபாயம் என்பது பிராந்தியங்களின் பலத்தைகொண்டு உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட தீர்வுகளைக்காண்பதே ஆகும்.

எடுத்துக்காட்டாக, ஆப்கானிஸ்தானிலுள்ள காபூலில் உள்ள உலக பொருளாதார சபையின் குளோபல் ஷேப்பர் ப்ராஜெக்ட், தொடரும் பாதுகாப்புப் பிரச்சினை களை சாதகமாகப் பயன்படுத்தி தீவிரவாதியாக மாற்ற முயலும் குழுக்களின் ஆபத்தில் இருக்கும் வேலையில்லாத இளைஞர்களுக்கு நன்மை பயக்கும் நிலையான முயற்சி களை செயல்படுத்த முயல்கிறது.

புதிய கண்டுபிடிப்புகளுக்கு மட்டுமேயான, முக்கியத்துவம் குறைந்துள்ளது, ஆனால், திறமை இருந்தும் சொந்தத்தொழில் துவங்க நிதி இல்லாதவர்களுக்கு உதவுவதில் முக்கியத்துவம் காட்டப்படுகிறது. பொருள் அல்லது சேவை மானியங்கள் தொடக்க செலவினங்களுக்கெனவும், வட்டியில்லாக்கடன், புது தொழில்-முனைப்பு தற்சார்பு அடையும் வரை ஏற்படும் தொடர்ச்சியான செலவினங்களுக்கெனவும் நிதி



வழங்கும் முறைமை இரு கூறுகளாக பிரிக்கப்பட்டு, அதிகரித்து வரும் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொலைதூரப் பகுதிகளிலுள்ள, உதவி தேவைப்படுகிற, வியாபாரத் திறன் கொண்ட இளம் வயதினரை அடையாளம் காணுவதன் மூலம் இந்த முயற்சி, பல சந்தர்ப்பங்கள் சித்தாந்த காரங்களுக்கு அல்லாமல், பொருளாதார தேவைகளுக்காக மட்டும் கவர்ச்சியாக இருக்கும் தீவிரவாத குழுக்களின் தூண்டுதல்களைக் குறைக்ககூடிய வாய்ப்புகளை வழங்க முடியும்.

கூடுதலாக, இதுபோன்ற திட்டங்கள், உள்ளூர் சூழலில் இளைஞர்களின் வேலையின்மை பிரச்சினை மட்டுமல்லாமல், குளோபல் ஷேப்பர்களால் அடையாளம் காணப்பட்ட மற்றொரு முக்கியமான பிரச்சினை - அகதிகள் நெருக்கடியையும் கையாள்கிறது.

2018 ஆம் ஆண்டில், உலகம், 65 மில்லியனுக்கு மேற்பட்ட புலம்பெயர்ந்தவர்களின் பிரச்சி னையான உறைவிடம், பாதுகாப்பு, வேலைவாய்ப்பு போன்ற நிதர் சனங்களுடன் தொடர்ந்து போராடும். உலகளாவிய அகதிகளில் அரைப் பகுதிக்கும் மேல் 18 வயதுக்குட் பட்டவர்கள். எனவே, அவர்களுக்கு உதவும் நமது நடவடிக்கைகள், இளைஞர்களுக்கு அதிகாரம் வழங்குவதிலும், மோதலைத் தடுப்பதிலும் நம் முன்னேற்றத்தையும் நேரடியாக பாதிக்கும்.

குறிப்பிட்ட நமது கவலையானது தீவிரவாத அமைப்புக்களின் சந்தர்ப்பவாதமாகும். தீவிரவாத எதிர்ப்பு அமைப்பான குவிலியமின் Pathways of Youth Fleeing Extremism மீதான முதல் அறிக்கையின்படி அவர்கள், ‘தங்கள் நாட்டில் வசித்து வரும் அகதிகளுக்கான, மற்றும் ‘பாதுகாப்பான மூன்றாம் நாடு’களிலுள்ள அரச சேவைகளில் வெற்றிடத்தை நிரப்புவது,’’ என்பதே.

கவனிக்கப்பட வேண்டிய இந்நிகழ்வுக்கான ஒரு பதிலாக நான் அடிக்கடி மேற்கோளிடும் பெர்லினில் வசிக்கும், டென்மார்க் ரோட்டரி ஃபெலோவான அன்னே கஜர் ரிச்சர்டின் படைப்பாகும். 2016 ல் தொடங்கப்பட்ட, அவருடைய ReDischool of Digital integatation இரண்டு தொகுதிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தலையிட்டது: ஜெர்மனியில் அதிகமான வேலைவாய்ப்பைக் கோரும் குடியேறியவர்கள் மற்றும் ஜெர்மனியில் 43,000 IT வேலைகளை நிரப்புவதற்கு வைத்திருக்கும் நிறுவனங்கள். அவர் கூட்டாக நிறுவிய கோடிங் பள்ளி, தொழில் முனைவதற்கான திறமை மேம் பாட்டுக்காக தரப்படும் பயிற்சியுடன், ஏற்கனவே மூன்று புதிய தொழில் முனைப்புகள் உருவாக உதவி யிருக்கிறது.

2020ம் ஆண்டு வாக்கில் 756,000 IT வேலைகளை ஐரோப்பா எதிர்பார்க்கும் தருணத்தில், பரஸ்பரம் நன்மை பயக்கும் ReDi போன்ற பொருளாதார ஒருங்கிணைப்பு முயற்சிகள் எதிர்காலத்திற்கான ஒரு முன்மாதிரியாக விளங்குகின்றன. இந்த திட்டங்கள் இளைஞர்களின் மனப்பான்மையை பிரதிபலிக்கின்றன; பெரும்பாலான ஆயிரமாவது தலைமுறையினர் (55.4 சதவீதம்) ஏற்றுகொள்ளும் நாடுகள் ‘தேசிய பணியிடத்தில் [அகதிகள்] சேர்க்க வேண்டும்‘ என்று நம்புகின்றனர்.

ஆயிரமாவது தலைமுறைக்கு, 2018-ல் அவர்கள் விரும்புவதை கொடுக்கும் நமது முயற்சி கள், எதிர்கால தலைவர்களின் இரண்டு கேள்விகளினால் அளவிடப்படவேண்டும். முதலாவதாக, அது உள்ளூர் தேவைகளுக்கு ஏற்றாற்போல் உள்ளடங்கிய தீர்வாகவும் தீவிரவாதத்திற்கு எதிராக வளைந்து போக போதிய வாய்ப்புடனும் சமூக மற்றும் சுற்றுசூழலில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறதா?

இரண்டாவதாக, நான்காம் தொழில்புரட்சியின் சாதகமான தாக்கங்களை விரிவுபடுத்தும் முந்தைய முயற்சிகளைத் தகர்த்த, அதே ஒருசில தொழில் முனைதல் மற்றும் கண்டுபிடிப்பு பொறிகளிலும் விழுமா?

ஏற்கனவே நம் விரல் நுனியில் பல நிலையான தீர்வுகள் உள்ளன - இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் மேலும் விரைவாக செய்ய விரும்பும் தலைமுறையை மேம்படுத்துவதற்கான ஒவ்வொரு நிறுவனத்தின் சவாலாக இருக்க வேண்டும்.



# குழந்தைகளின் குதூகலம்

கிரண் ஜெஹ்ரா



11 வயதான அருண் ஷங்கர் தனது குடும்ப உறுப்பினர்களைப் பற்றி பேசிய போது, எட்டு வயதான காயத்ரி தேவி, பேசுவதில் குறைபாடு இருந்த போதிலும், அவரது அப்பா தஞ்சாவூரிலிருந்து அவளுக்கு வாங்கி வந்த வண்ணமயமான மர பொம்மைகளைப்பற்றி விவரித்தார். ரோட்டா டேலன்ட் கான்டெஸ்ட் என்று பெயரிடப்பட்டத் திருவிழாவில், சமுதாயத்தில் அடித்தட்டு குழந்தைகள் மற்றும் சிறப்புத் திறனுடைய குழந்தைகளை, ஒரு நாள் முழுவதும் நடந்த விழாவில் அக்குழந்தைகளின் முகங்களில் புன்னகைத் தவழ வைத்து சிறப்பித்திருந்தனர். இதற்கு ரொட்டேரியன்கள், RC மெட்ராஸ், தி.நகர், D 3232-க்கு தான் நன்றி சொல்லவேண்டும். தனது வெள்ளி விழா ஆண்டில், இத்திட்டத்தைம் 57 பள்ளிகளிலிருந்து 2000க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு நடத்தியது.

''அவர்களுக்கு உணர்வுபூர்வமான ஆதரவும் அவர்களுடைய திறமைகளை தீட்டுவதற்கு வழிகாட்டு தலும் தேவை. ரோட்டா டேலன்ட், இக்குழந்தைகளுக்கு தக்கதொரு தளம் அமைத்துத் தருகிறது'' என்கிறார் மீனாட்சி பெரியகருப்பன், சங்கத்தலைவர் அ. பெரியகருப்பனின் மனைவி. மேலும், ரோட்டா டேலண்ட் ஷோவில், குழந்தைகள் தங்களுடைய திறமைகளை மேடையில் வெளிப்படுத்த முடிந்தது. ''சிலக்குழந்தைகள் நடனத்தின் ஒரு அசைவையோ, பேச்சில் சில வரிகளையோ மறந்துவிடுவது உண்டு. ஆனால் அவர்கள் அங்கு நிறுத்தவில்லை. சிலர் வெளிப்படுத்திய திறமைகள் எங்களுக்குக் கண்ணீரை வரவழைத்தது'' என்கிறார் அவர்.



மாவட்ட ஆளுநர், ஸ்ரீனிவாசன் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வி ஆர் அருண் ராய் ஆகியோர் இந்நிகழ்ச்சி யை தொடங்கி வைத்தனர். போட்டிகள் ஒவ்வொன்றும் பிரிவுகளில் (மனநலம் குன்றிய, கேட்கும் திறன் குறைபாடு உள்ளவர்கள், குறைபாடு அற்றவர்கள்) பிரிக் கப்பட்டிருந்தன. பங்கேற்றவர்கள் அனைவருக்கும் திறமையை வெளிக்காட்ட நேரம் கொடுக்கப்பட்டிருந்தது. இன்னர் வீல் கிளப், அனைத்து வகையினரும் ஒரே நேரத்தில் பங்கேற்கும் வகையில் ஓவியம் வரைதல் போட்டி நடத்தியது. வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகளும், ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் இரண்டு குழந்தைகளுக்கு பெஸ்ட் டேலன்ட் அவார்ட் வழங்கப்பட்டது.

அனைத்து சாப்பாடும் இலவசமாக வழங்கப்பட்டதுடன், குழந்தைகளுக்கு பாப்கார்ன், பஞ்சு மிட்டாய் மற்றும் பல்வேறு ஸ்நாக்ஸ்களுடன் அவர்கள் தற்காலிக டேட்டூ (Tattoo), முக ஓவியம், மெஹெந்தி போன்றவற்றிலும் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டனர். குழந்தைகளைக் கொண்டாடுவதையும்கடந்தது இது ''அனுபவித்தலில் மிகவும் திருப்திகரமான திட்டமாகும். இக்குழந்தைகள், அவர்களுக்கு உரிமையுள்ள, திறமையை வெளிப்படுத்தத் தகுந்த வாய்ப்புகளை பெறுவதில்லை. அவர்களுக்கு



DG *சீனிவாசன் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.*

உள்ளே நிறைய விஷயங்கள் பொதிந்து உள்ளது. அவர்கள் இந்த உலகத்திற்கு அவைகளைக் வெளிக்காட்ட விரும்புகிறார்கள்'' என்கிறார் பெரியகருப்பன். அனைத்து குழந்தைகளும், புத்தகங்கள், மினுமினுப்பு மை பேனா, கேம்லின் கிரேயான்கள் மற்றும் ப்ரதம் புக்ஸ் வழங்கிய கதைப் புத்தகங்கள் அடங்கிய ஒரு பொழுதுபோக்கு பொதியுடன் வீடு திரும்பினர். அனைத்து பராமரிப்பாளர்களுக்கும் பள்ளி பிரதிநிதிகளுக்கும் கூட பரிசு வழங்கப்பட்டது.

சில விளையாட்டுகளுடனும், கார்ட்டூன் கதாபாத்திரங்களின் ஊர்வலத்துடன் கூடிய ஜாலி சவாரிகளுடனும், ஜம்பிங் கேஸ்டில்களுடனும் மற்றும் உணவு கவுண்டர்களுடன் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது'' என்கிறார் பால மந்திர் ட்ரஸ்ட் பள்ளியின் ஆசிரியர் சாந்தி. காட்சியரங்குப்பகுதி சிறப்புக் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களைக் கொண்டிருந்தது. மோட்டார் உள்ள சக்கர நாற்காலி அரங்கு பெரும் எண்ணிக்கையில் விசாரிப்புகளைப் பெற்றது. ''நாங்கள் அனைத்திலும் எங்களது மனதிலிருக்கும் குறிக்கோள் பிரதிபலிக்குமாறு இருப்பதையே விரும்பினோம்'' சொல்கிறார் மீனாட்சி. மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் நிறுவனம் வீ-ஷேஷ் உடன் இணைந்து, 18 வயதைக் கடந்த சிறப்புத் தேவைகள் உடைய மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது.



ரொட்டேரியன்கள் மற்றும் அனைத்து தன்னார்வலர்களுக்கும், எனினும், எல்லாவற்றையும் விட நம்முடைய இன்றைய தினத்தை சிறப்பித்த இந்த குழந்தைகளுக்கே நாம் நன்றி பாராட்ட வேண்டும்'' என்றார் பெரியகருப்பன்.■



**RC மனோரா பட்டுக்கோட்டை** D 2981
அன்னை சாரதா ஆதரவற்றோர் இல்லத்தில் குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. அங்கு தங்கியுள்ள 20 பேருக்குத் தேவையான அரிசி, மளிகைப் பொருட்கள், அழகுசாதனங்கள் ஆகியவற்றை ரோட்டரி சங்கத்தின் செயலாளர் நன்கொடையாக வழங்கினார். அதைப் போல் அங்குள்ள அரசு பெண்கள் பள்ளிக்கு ரூ. 60 ஆயிரம் மதிப்பிலான எல்சிடி அளிக்கப்பட்டது.

**RC காவேரிப்பட்டினம்** D 2982
யாராவது காலமானால், அது குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கான காலமானோர் குறித்த அறிவிப்புப் பலகைகள் பேருந்து நிலையத்திலும், பாலக்கோடு சந்திப்பிலும் வைக்கப்பட்டுள்ளன. இதனால், பொதுச் சுவர்களிலும் தனியார் வீட்டுச் சுவர்களிலும் இதுபோன்ற சுவரொட்டிகள் ஒட்டுவது தவிர்க்கப்படும் என்று சங்கத்தின் தலைவர் வெங்கடராமன் தெரிவித்தார்.






**RC நாசிக்** D 3030
நாசிக் அருகில் உள்ள கோட்டி என்ற இடத்தில் பள்ளிச் சிறுவர்கள் 1,100 பேருக்குப் பள்ளிக்கூட உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவற்றில், இரு ஜோடி சீருடைகள், சாக்ஸ், ஷூக்கள், பள்ளிக்கூடப் பை, குடிநீர் பாட்டில், ஜியாமட்ரி பெட்டிகள், பென்சில் பெட்டிகள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவையும் வழங்கப்பட்டன.

**RC விசாகப்பட்டினம்** D 3020
விசாகப்பட்டினம் அருகில் ஒரு கிராமத்தில் அப்பல்லோ மருத்துவமனையின் துணையுடன் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. ரத்த அழுத்தம், சர்க்கரை, காது -மூக்கு-தொண்டை (ENT), இரைப்பை குடல் மற்றும் எலும்பியல் (gastroenterology and orthopaedic) ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மேலும், மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன.



# சேவைகள்

**RC ஜெய்ப்பூர் கோஹினூர் D 3054**
அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு ரேஷன் உணவுப் பொருட்களை ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த சத்யகாம்ஜியின் நிதியுதவியில் வழங்கப் பட்டன. இத்தகைய பணியை சங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.



**RC வாபி நதிக்கரை D 3060**
கின்னஸ் உலக சாதனைக்கான முயற்சியாக ஒரே நேரத்தில் பல இடங்களில் விநாடி வினா நிகழ்ச்சி நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 18 நகரங்களைச் சேர்ந்த சங்கங்கள் இந்நிகழ்ச்சிக்குத் துணைபுரிந்தன. கின்னஸ் விதிமுறைகளின்படி 72 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 160 வினாத் தொடுப்பாளர்கள் 6000 குழுவினரிடம் இந்த நிகழ்ச்சியை நடத்தினர். ரோட்டரி சங்கங்களைச் சேராத 245 பணியாளர்கள், 72 பார்வையாளர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



**RC அமிர்தசரஸ் D 3070**
அமிர்தசரஸ் குடிசைப் பகுதியில் மிகப் பெரிய அளவில் மருத்துவ மற்றும் ரத்த தான முகாம் நடத்தப்பட்டது. அதில் பங்கேற்ற ஏழை, எளியவர்கள் 200 பேருக்கு தைராய்டு, சர்க்கரை நோய், எலும்புப் பிரச்சினை தொடர்பான பரிசோதனைகள் நடத்தப்பட்டன. 50 பேர் ரத்த தானம் செய்தனர். இலவசமாக மருந்துகளும் விநியோகிக்கப்பட்டன.



**RC சண்டிகர் மிட் டவுன் D 3080**
மவுத்தூர் கிராமத்தில் உள்ள அரசுப் பள்ளியில் மாணவ, மாணவியருக்கெனத் தனித்தனியாக இரு கழிப்பறைப் பிரிவுகள் அமைத்துத் தரப்பட்டன. மேலும், கழிவறைகளைச் சுத்தமாக வைத்திருப்பது குறித்து, மாணவர்களுக்கு சுகாதார விழிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. 2000 மாணவர்கள் பயன்பெறுவதற்கான இத்திட்டத்திற்கு ரூ. 3,50,000 பயன்படுத்தப்பட்டது.




**RC பாரபங்கி D 3120**
பாரபங்கியைச் சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்கு பாதுகாக்கப்பட்ட உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு சங்கக் குழுவினர் உணவுப் பொருட்களை அளித்தனர்.



**RC புனே கல்யாண் நகர் D 3131**
இரவில் குளிரால் பாதிக்கப்படும் ஏழைகள், நலிந்தோருக்கு 800 போர்வைகள் விநியோகம் செய்யப்பட்டன. மேலும், ரயில்நிலையம் மற்றும் குடிசைப் பகுதிகளில் கிறிஸ்துமஸ் தாத்தா (சான்டா கிளாஸ்) வேடத்தில் ஏழைகள் குளிருக்கு இதமாக இருப்பதற்காக உல்லன் பொருட்களும் அளிக்கப்பட்டன.



**RC குண்டூர் விகாஸ் D 3150**
ரோட்டரி சங்கத்தின் பட்டய தினத்தையொட்டி (club's Charter Day) ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் அளிக்கப்பட்டன. PDG ரவி வத்லாமனியும். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ரொட்டேரியன் புரூஸ் ஆலெனும் சிறப்பு விருந்திநராகப் பங்கேற்றனர்.



**RC கொள்ளேகால் D 3181**
கர்நாடக மாநிலம் ஹித்தாலதோடி என்ற இடத்தில் அரசு தொடக்கப் பள்ளியில் கழிவறையைப் புதுப்பிக்கும் பணியை (DG) சுரேஷ் செங்கப்பா தொடங்கிவைத்தார். பள்ளிச் சூழல் கவர்ந்திழுக்கும் வகையில், பள்ளிக்குத் தேவையான மேசை, நாற்காலிகள், விளையாட்டுப் பொருட்கள், மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், அகராதிகள் ஆகியவை வழங்கப்பட்டன. மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும் அளிக்கப்பட்டன.



**RC பெங்களூர் விஜயநகரம் D 3190**
ஹெக்கனஹள்ளியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியிலும் பீன்யா தொடக்கப் பள்ளியிலும் குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் அமைத்துத் தரப்பட்டன. உலகளாவிய மானிய உதவியில் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான மேசை நாற்காலிகள், கல்விக்குத் தேவையான புத்தகங்கள் ஆகியவற்றை DG ஆஷா பிரசன்னகுமார் வழங்கினார். இதே மானிய உதவியின் கீழ் மூதல் பாளையா என்ற இடத்தில் உள்ள பஞ்சசீல நகர் பிபிஎம்பி பள்ளிக்கு மேசை நாற்காலிகள் அளிக்கப்பட்டன.



**RC திருப்பூர் பின்னலாடை நகர் D 3202**
திருப்பூர் சாய் கிருபா பள்ளியில் மாற்றுத் திறனாளிகளுக்கு மருத்துவக் காப்பீட்டுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதற்கான மதிப்பீடு ரூ. 7,500.



# சேவைகள்



**RC ராணிப்பேட்டை D 3231**
அங்குள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.10 லட்சம் செலவில் கழிவறைப் பிரிவு கட்டப் பட்டுள்ளது. திருமலை சேரிட்டி டிரஸ்ட் நிதியுதவியில் இது அமைக்கப்பட்டது. ரோட்டரி சங்கத்தினர், நன்கொடையாளர் பங்கேற்ற நிகழ்ச்சியில் உள்ளூர் MLA இதைத் திறந்துவைத்தார்.



**RC பொக்காரோ D 3250**
ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 9ஆவது மற்றும் 12ஆவது வகுப்பு மாணவர் களுக்கு ரோட்டரி இளம் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் (RYLA camp) நடத்தப்பட்டது. இதில், நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.



**RC ஜபல்பூர் D 3261**
ஆதித்ய பிர்லா சமூக மேம்பாட்டு முன்முயற்சிகளையும் ஊரக வளர்ச்சித் தலைவர் ராஜஸ்ரீ பிர்லா அவர்களையும் பாராட்டும் வகையிலான நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ரோட்டரி போலியோ ஒழிப்பு சேவைக்குத் துணை புரிந்தததற்காகவும் அவர்கள் மேற்கொண்டு வரும் சமூக சேவை, பரோபகாரச் செயல்பாடுகளையும் பாராட்டிச் சிறப்பிக்கும் விதத்தில் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



**RC கோல்கத்தா தெற்கு நகர் D 3291**
ரோட்டரி சங்கமும் இன்டராக்ட் கிளப்பும் இணைந்து பவுனிபூர் என்ற இடத்தில் கல்சா ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகளை நட்டன. துர்கா பூஜையை முன்னிட்டு 200 சிறுவர்கள், விதவைகளுக்கு இலவசமாக ஆடைகள் வழங்கப்பட்டன. பெஹலாவைச் சேர்ந்த சாபுஜி விளையாட்டு சங்கத்தின் சார்பில் இந்த உதவிகள் அளிக்கப்பட்டன.



**RC புத்வால் D 3292**
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டுவதற்காக Traffic Chowk பகுதியில் தெருமுனை இசை நிகழ்ச்சி நடத்தப் பட்டது. அதில் திரட்டப்படும் நிதி மாடி நகராட்சிக்கு அருகிலுள்ள நாராயண கர்க் கிராமத்தைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்கள் உள்ளிட்ட உதவிகள் வழங்கப்படும். சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக் கப்பட்ட கிராம மக்களுக்கு நிவாரண உதவிகளை அளித்தனர்.

*ஒருங்கிணைப்பு: V முத்துக்குமாரன்*
*வடிவமைப்பு: L குணசேகரன்*




# அரசு அலுவலகங்களில் விடாக் கொடாக் கண்டர்களும்

TCA சீனிவாச ராகவன்

சமீபத்தில் எனக்கு ஒரு வாட்ஸ் அப் தகவல் வந்தது. அதனுடன் ஒரு கடிதத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட ஒரு பிரதியும் இணைக்கப்பட்டிருந்தது. ஓர் அதிகாரி தன் கீழே பணியாற்றியவருக்கு அனுப்பிய கடிதம் அது. அதில், என்னிடம் வாங்கிச் சென்ற தீப்பெட்டியை உடனடியாகத் திருப்பித் தரவும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

எனக்கு ஒரே வியப்பு. இதென்னடா, தீப்பெட்டியைப் போய் இப்படிக் கேட்கிறாரே, அதற்கு ஓர் அலுவல்பூர்வமாக கடிதமா என்றெல்லாம் யோசித்தேன். ஒருவேளை தீப்பெட்டி இல்லாமல் அலுவலகத்தில் கொசுவத்தியை ஏற்ற முடியாது. அதனால், பணியாளர்களும் அதிகாரிகளும் கொசுக்கடியால் தவிக்கிறார்களோ என்றெல்லாம் தோன்றியது. கடைசியில் அந்தக் கடிதம் எழுதியவரே அந்த மர்மத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தார். அதிகாரபூர்வ கடிதங்களை எப்படி எழுதுவது என்று பயிற்சி எடுத்துக் கொள்ளவே இப்படிக் கடிதம் அனுப்பினாராம்!

இதைப் படித்தபிறகு எனக்கு ஒரு பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது. அந்தக் காலத்தில் பி.கே. நேரு என்ற சிவில் சர்வீஸ் அதிகாரி ஒருவர் இருந்தார். அவர் ஜவஹர்லால் நேருவின் சொந்தக்காரரும் கூட. அப்படிப்பட்ட மனுஷர் ஜூனியர் அதிகாரியாக இருந்தபோது, அலுவல் முறையில் யாருக்கோ ஒரு தந்தியை அனுப்பியிருந்தார். அதில் அனுப்பிய தந்தியின் கடைசியில் இணைப்புக் குறிப்பாக அவரது தந்தையின் உடல்நலம் குறித்தும் விசாரித்திருந்தார்.

அதைப் படித்த ஒரு கிளார்க் நேருவுக்கு அனுப்பிய பதில் கடிதத்தில் அவர் அனுப்பிய தந்தி அலுவல் முறையிலானது. அதில் தனது சொந்த விஷயத்தைக் குறிப்பிடக் கூடாது. அதற்காக அபராதம் செலுத்தியாக வேண்டும் என்று கூறி விட்டார். அலுவல் முறையிலான கடிதம், தந்தி ஆகியவற்றில் இப்படி பர்சனல் விஷயங்களைக் குறிப்பிடுவது அலுவல் நடைமுறைக்கு விரோதமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவருக்கு விதிக்கப்பட்ட அபராதமோ ரொம்ப அற்பமானது. பி.கே. நேரு ஏற்க முடியாது என்று மறுத்துவிட்டார். அதற்கு அந்த கிளார்க் பதில் கடிதம் போட்டார். பதிலுக்கு நேரு கடிதம் போட்டார். இப்படியே பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களை எல்லாம் ஒரு கோப்பில் சேர்த்தார்கள். அந்த கோப்பு ஆறு அங்குலம் தடிமனாகி விட்டது. அவ்வளவு கடிதங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அதுவும் அல்ப காரணத்துக்காக ஒரே ஒரு சாதாரண விசாரிப்பு மீதான விவகாரம் கடிதங்களாக உருமாறி, ஏராளமான மக்கள் வரிப்பணத்தை விரயமாக்கிவிட்டது.

இதைப் போல் இன்னொரு சம்பவம். ஓர் உயர் அதிகாரி ஆலயத்துக்கு வருவோர் அனைவரும் தங்களது ஷூக்களைக் கழற்றி விட்டுத்தான் உள்ளே நுழையவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார். ஒரு முறை சாமானியர் ஒருவர் வெறும் காலுடன் தான் ஆலயத்துக்கு வந்திருந்தார். அவருக்கு ஆலயத்திற்குள் செல்ல அனுமதி மறுத்துவிட்டனர். காரணம் கேட்டால், வெளியில் ஷூவைக் கழற்றிவிட்டு வந்திருக்க வேண்டும் நீ ஷூவைக் கழற்றவில்லை என்று அதிகாரம் பண்ணினர். வெளியே ஷூவைக் கழற்றிவிட்டு வரவேண்டும் என்பது அதிகாரி உத்தரவு.. என்று கூறிவிட்டார்கள்!

எனக்கே விபரீதமான அனுபவம் நேர்ந்திருக்கிறது. தில்லியில் 40 ஆண்டுக்கு முன் தில்லி அபிவிருத்தி ஆணையகம் (டிடிஏ) கட்டிய அடுக்கு மாடிக் குடியிருப்பில் குடியேறினோம். வீட்டுக்குள் படுக்கை அறைக்கும். அதையொட்டி குளியலறைக்கும் கதவேயில்லை. அதனால் சுவரைக் கொஞ்சம் உடைத்து கதவு அமைத்தேன். அப்போது, கட்டில் மேசை எல்லாம் தாறு மாறாகச் சாய்ந்திருந்தன. அப்போதுதான் தெரிந்தது. எந்தச் சுவரும் 90 டிகிரி செங்குத்தாகவே இல்லை.

உடனே டிடிஏ அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினேன். சில வாரங்கள் கழித்து, அவர்கள் வந்தனர். சுவர்களையெல்லாம் ஏதோ அளந்து பார்த்துவிட்டு சென்றனர். ஒரு சில மாதங்கள் கழித்து, டி.டி.ஏ. அலுவலகத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. படுக்கையறைக்கும் குளியலறைக்கும் இடையில் உள்ள கதவை ஏன் அகற்றக் கூடாது என்று கேட்டிருந்தார்கள். ஏதோ அரசு ஒதுக்கீட்டுக் குடியிருப்பில், ஆக்கிரமித்துக் கட்டியதைப் போல இப்படி கடிதம் வந்தது. உடனே பதில் கடிதம் எழுதினேன்: ஒரு சுவரில் உள்ள ஓட்டையை எப்படி உடைக்க முடியும் என்று கேள்வி கேட்டேன். இப்போது பதில் வரவேயில்லை.

இன்னொரு சுவையான அனுபவத்தையும் நான் கண்டேன். 1980ம் ஆண்டில் வெளியுறவு அமைச்சகத்தைச் சேர்ந்த ஒரு கிளார்க்கிடம் ஆவணங்களின் மீது மிக ரகசியம் என்ற முத்திரையைக் குத்தும்படி மேலதிகாரிகள் கூறினர். அந்த நபர், ரொம்ப அப்படியே செயல்படுபவர். அவரோ, மேசையில் இருந்த பத்திரிகைச் செய்திக் குறிப்புகள் மீதும் கடமை உணர்ச்சியோடு முத்திரை குத்தி விட்டார். எல்லாமே கோப்புக்குப் போய் விட்டன. இதனால், ஒரு வாரத்துக்குப் பத்திரிகைகளுக்கு வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக் குறிப்புகளே வரவில்லை.

ஃபரீதாபாதில் அரசு நடத்தும் மயானத்தில் ஆதார் அட்டை இல்லாமல் தகனம் கிடையாது என்று ஒரு நோட்டீஸ் ஒட்டியிருந்தார்கள். ஆனால், அப்படியெல்லாம் உத்தரவு இல்லை என்று மேயர் கூறினார். மாறாக, சில மாதங்களுக்கு முன் இறப்புச் சான்றிதழ் பெறவேண்டுமானால், ஆதார் எண் கட்டாயம் என்று சுற்றறிக்கை அனுப்பியிருந்தது. ஒரு வேளை இறந்தவரின் எண் தெரியவில்லை என்றால் உறவினர் தனது ஆதார் எண்ணைத் தெரிவிக்க வேண்டும். ஆனால், அரசு இதுவும் கட்டாயமில்லை என்று விளக்கிவிட்டது.

எது எப்படியோ இது விஷயத்தில் தற்போது என்ன நிலை என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்!■

# துணுக்குச் செய்திகள்



## கைப்பைகள் ட்ரோனில் பறந்தன

மிலன் ஃபேஷன் வாரத்தில் டோல்ஸ் - கபானாவின் ஆடம்பர கைப்பைகளை விளம்பரப்படுத்த ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. கேட்வாக் பகுதியில் பறக்கவிடப்பட்டு கென்ட்ரிக் லாமரின் இசைக்கேற்ப அறை முழுவதும் வட்டமிட்டன.




## அர்மானி பள்ளிச் சீருடை

டோக்கியோ அதன் நகரவாசிகளின் நவநாகரீகப் போக்குக்கு பிரபலமான நகரமாக இருக்கலாம். ஆனால் ஒரு தனியார் பள்ளி தன்னுடைய மாணவர்களுக்கு தேர்ந்தெடுத்த ஜியார்ஜியோ அர்மானி சீருடைகள் ஃபேஷன் என்ற பெயருக்கு பல கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கிறது. இது நாடு முழுவதும் பல விமர்சனத்திற்கு உள்ளானது. நீண்ட கையுள்ள சட்டை, நேவி-புளு ஜேக்கெட் மற்றும் அதற்கு இணையாக ஸ்கர்ட் அல்லது ட்ரவுசர்ஸ் மற்றும் ஒரு தொப்பி அடங்கிய புது சீருடையை அறிமுகப்படுத்த இருப்பதாக தாய்மே ஆரம்பப் பள்ளி அறிவித்துள்ளது. இந்த மொத்த சீருடைக்கும் 80,000 யென் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது.

## புடினிடம் ஸ்மார்ட் ஃபோன் இல்லை



எல்லாருமே ஸ்மார்ட் ஃபோன் வைத் திருக்கிறார்கள் என்ற குர்சாதோவ் அணுசக்தி ஆராய்ச்சி மையத்தின் தலைவர் மிகாயில் கோவல்சக்கின் கருத்துக்கு, ரஷ்ய பிரெசிடென்ட் விளாடிமிர் புடின் தன்னிடம் ஸ்மார்ட் ஃபோன் இல்லையென்று வெளிப்படுத் தினார், ஆரம்பத்தில் புடின் எந்தவித சோஷியல் மீடியாவில் இணைவதை விரும்பவில்லை என்றும் ஆன்லைனில் கிடைக்கும் தகவலைப் பற்றி பயங்கொள்வதாகவும் ஒப்புக்கொள்கிறார், மேலும் 2005 ஆம் ஆண்டு வரை அவரிடம் ஒரு மொபைல் ஃபோன் கூட இல்லை! இதற்கு மாறாக பிரதமர் ட்மித்ரி மெட்வதேவ் ஐ-ஃபோன் உடன் அடிக்கடி காணப்பட்டு தன்னுடைய அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கூட தனது புகைப்படங்களை அப்லோட் செய்கிறார்.

## டேர்டெவில்ஸுக்கு நேபாளி கிரிக்கெட் வீரர்




சந்தீப் லாமிச்சான் நேபாளைச் சேர்ந்த முதல் ஐபிஎல் வீரர். 17 வயதான லெக் ப்ரேக் பவுலர், ஐபிஎல் ஏலத்தில் ரூ.20 லட்ச த்திற்கு டேர்டெவில்ஸால் எடுக்கப்பட்டார். ஹாங்ஹாங்கில் டி20 போட்டியில் விளையாடிய போது, அந்த அணிக்கு பயிற்சியாளராக இருந்த ஆஸ்திரேலிய கேப்டன் மைக்கேல் கிளார்க்கால் இனங்காணப்பட் டார். நேபாளம், 1996 ஆண்டிலிருந்து ஐசிசியின் இணை உறுப்பினர் மற்றும் 2013 ஆண்டிலிருந்து சர்வதேச போட்டிகளில் கலந்து கொண்டு வருகிறது.



## இந்திய பாணியில் பீட்டிங் ரிட்ரீட்

ஜனவரி 29 அன்று டெல்லியின் விஜய் சவுக்கில் நடைபெற்ற பீட்டிங் ரிட்ரீட் விழா, நான்கு நாள் கொண்டாடப்பட்ட குடியரசு தின விழாவின் உச்சமாக இருந்தது. பாதுகாப்புத் துறை அமைச்சகம் இந்த ஆண்டு இந்தியப் பாணியில் பீட்டிங் ரிட்ரீட் அமைந்திருக்கும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும், மூத்த ராணுவ வீரர்கள் ஆச்சரியத்தையும் கவலையையும் வெளிப்படுத்தினர், ஏனென்றால் அந்த நிகழ்ச்சிக்குள்ள மரியாதை, மாற்றம் என்ற பெயரில் சமரசம் செய்யப்பட்டு ஒரு கலை நிகழ்ச்சியாகக் குறைக்கப்பட்டுவிட்டது என்று அவர்கள் உணர்ந்தனர்.

*ஒருங்கிணைப்பு: ஜெய்ஸ்ரீ, வடிவமைப்பு: S கிருஷ்ணப் பிரதீஷ்*


Inspiration
AROUND EVERY CORNER
The chat about soccer that changed everything
Michael from Hawaii was looking for a project his club could take on as he wandered the House of Friendship at the 2016 Rotary Convention. Before long, he met Graeme from Hong Kong and struck up a conversation about soccer. Soon, the subject changed to service, and Graeme told him about the Affordable Classroom Construction Project.
A few months later, the new friends worked with their clubs and the charity Worldwide Action to construct eco-friendly, durable classrooms for schoolchildren in Nepal. They also brought in Rotarians from Japan and Rotaractors from Kathmandu to help with the project, which was in an area devastated by two earthquakes. Michael and Graeme, still working together, show us a great example of how Rotary's convention brings people from around the world together to create lasting change.
Find your inspiration at the Rotary Convention in Toronto. Register today at riconvention.org.
Rotary
TORONTO 2018
ROTARY CONVENTION
23-27 JUNE 2018
TORONTO, ONTARIO, CANADA